# நிலவும் தாமரையும்

170

டி.கே.சீனிவாசன்



170
262

O-,3N5V,N
N61
105247

# நிலவும் தாமரையும்

ஆசிரியர்:

டி. கே. சீனிவாசன்

K.R. நாராயணன்
12. மாடல்ஹட்மண்ட் ரோடு. - சென்னை-15

முதற்பதிப்பு
1961, ஆகஸ்டு
[பதிப்புரிமை]

தயாரிப்பு :
K. R. நாராயணன்

விலை ரூ 1-50.

ஆசிரியர் :
N. 18 டி. கே. சீனிவாசன்

ஓவியர் :
வி. சின்னையன்

தையற்கலை
பயிலுவதெப்படி?

ஆசிரியை :
T. K. தனலட்சுமி

விலை. ரூ. 1-50.

அச்சிட்டோர் :
பாரி அச்சகம், சென்னை-1

# என்னுரை

அண்ணன் டி. கே. சீனிவாசன் அவர்களை நான் அறிமுகப்படுத்தத் தேவையில்லை; அது என் தகுதிக்கும் உட்பட்டதல்ல!

அதைப்போலவே அவரது எழுத்துக்கள்...... அவைகளை எழுத்துக்கள் என்று சொல்வதைவிட, இலக்கியக் கடலிலே மூழ்கி எடுத்த நல்முத்துக்கள் - புழுவும் பூச்சியும் நெளிகின்ற சமுதாயப் பூமியிலே புகுந்தெடுக்கப்பட்ட வைரக் கற்கள் - என்று சொல்வதே சாலப் பொருந்தும்!

தமிழகத்திலே வளர்ந்துவரும் சிறுகதை இலக்கியத்திற்கு உயிரூட்டியவர்களில் அண்ணன் சீனிவாசன் முன்னணியில் இருப்பவர். பேச்சிலே அவரை அறிஞர் அண்ணுவுக்கு ஈடு என்பதற்காக "அண்ணுவின் எதிரொலி" என்பார்கள். ஆனல், அவரது எழுத்துக்கு ஈடாக......எந்த எதிரொலியும் இதுவரை தோன்றியதில்லை என்றே படித்துணர்ந்து—பகுத்தறிந்து கொண்டவர்கள் நிச்சயமாக நம்புகிருர்கள்!

அவர் அப்போதைக்கப்போது எழுதிக் குவித்த சிறுகதைகளை ஒன்ருகத் திரட்ட நான் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு ஆக்கமூட்டினர்; ஊக்கம் தந்தார்!

அந்த நீண்டகால முயற்சியின் பலனே இந்த நூல்!

உங்களது கரங்களில் தவழ்ந்து – கருத்தினைக் கவரும் இந்த நூலுக்குப் பின்னால், எனக்குப் பேருதவி புரிந்தவருக்கும் புன்னகையோடு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எண்ணற்ற இடையூறுகளுக்கு மத்தியில், சிரித்த முகத்தோடு, சேவா உணர்ச்சியோடு இதை அச்சிட்டு உதவிய பாரி அச்சக உரிமையாளர் திரு. நாராயணன் அவர்களுக்கும், அழகுக்கு அழகு சேர்ப்பதுபோல் வண்ண முகப்புதனை அச்சிட்டு உதவிய 'ஐடியல் பிரிண்டர்ஸ்' திரு. அரு. பெரியண்ணன் அவர்களுக்கும் நான் நன்றிக் கடன் பட்டவன்.

மற்றும், மூவண்ண ஓவியம் வரைந்தளித்த எனது நண்பர் திரு. சின்னையன் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மொத்தத்தில், என் முயற்சி வெற்றிபெற எனக்குத் தன் எழுத்துக்களை எடுத்துக்கொடுத்த அண்ணன் டி. கே. சீனிவாசன் அவர்களுக்கு என் நன்றி!

அன்பன்,

**கே. ஆர். நாராயணன்**

# நிலாவும் தாமரையும்!

வந்தவர் வஞ்சகர் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்

—பாரதிதாசன்

வேதனையே உருவான இந்த வாழ்க்கை வர்ணனை......! என் வாழ்வில் துண்டு துண்டாக நடந்து முடிந்த சில பல நிகழ்ச்சிகள்—கவலைப்பட்ட காலங்களில் பிரதிபலித்த ஏக்கம்—கலங்கிய நேரங்களில் உதிர்த்த கண்ணீர்த் துளிகள்—வாய்விட்டழுதபோது குழம்பிய என் மனத்தின் குமுறல்—இவற்றின் சேர்க்கையே நான் சித்தரித்துள்ள இந்தச் சிந்தனை ஓவியம். புரிந்துகொள்ள முடிந்தவர்களுக்கு ஒருபோதனை—முடியாதவர்களுக்கு—? வெறும் பொழுதுபோக்கு!

இலையுதிர் காலத்தில் மொட்டையாகக் காணப்பட்ட மரங்கள் அத்தனையும் துளிர்க்கத் தொடங்கிய பருவம் அது. மென்காற்றின் மோதுதலினால் நெளிந்து வளைந்த தளிரிலைகளுக்கிடையே அரும்பிய மொக்குகள் ஒவ்வொன்றாகக் கண்திறந்தன. என் உடல் வளர்ச்சியும் உள்ளத்தின் வளர்ச்சியும் ஒன்று சேர்ந்து என்னையும் மலரச் செய்துவிட்டன. என் இதயம் பூத்ததால் எண்ணங்களில் எல்லாம் மணம்வீசிக் கொண்டிருந்ததை நான் உணர்ந்ததைப் போலவே என் பெற்றோர்களும் உணர்ந்திருப்பார்கள் போலிருக்கிறது! வீதியில் சுற்றித்திரிந்தால் வீசுங்காற்றில் கலந்து என் மணம் எல்லாம் கரைந்துவிடுமோ எனப் பயந்து என்னை வீட்டுக்குள் பதுக்கி வைத்தனர். என் அப்பாவும் அம்மாவும்!

விரிந்த மலரை வேலியிட்டுக் காப்பதைவிட விலைக்கு விற்றுவிடுவதேமேல் என்றுதான் என் பெற்றோருக்குத் தோன்றியிருக்க வேண்டும். என் வாழ்வுக்குத் துளிக்கூடத் தொடர்பில்லாத சில பல நிகழ்ச்சிகள் என் அனுமதியில்லாமலே நடக்கத் தொடங்கின

நான் பார்த்துப் பேசிப் பழகியிராத மனிதர்கள் என் வாழ்வைச் சுற்றி வளைத்தனர். எங்கோ வெகுதூரத்தில் வானத்தில் பொதிந்து கிடந்து போலி நிறங்காட்டும் கிரகங்களுக்கு என் வாழ்வின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும் உரிமை கொடுக்கப்பட்டது.

ஒருநாள் என் எதிர்வீட்டுத் தோழி ஆனந்தியின் தகப்பனார் என் நெற்றியில் குங்குமத்தையிட்டு, அது துளிக்கூட உதிர்ந்து விடாமல் அழுத்திப் பதிந்து, 'அம்மா சக்கு! சீதை சாவித்திரி போன்ற பதிவிரதா சிரோன்மணிகளால்தானம்மா இந்தப் பாரத நாடு பவித்திரமடைந்தது. அந்தப் பரம்பரையில் வந்தவர்கள் நாம் என்பதை எப்போதும் மறந்துவிடாதே!'' என்றார்.

வேதத்தை ஓதி ஓதிப் புனிதமடைந்த அந்த வேதியரின் நாக்கிலிருந்து எழுந்த நல்வாக்கில் ஏதோ ஒரு மகத்தான உண்மை மறைந்திருப்பதை நான் உணர்ந்தேன். நானும் ஒரு கற்புக்கரசி ஆகி இருள் நிறைந்த வானத்தில் ஒளிவிட்ட அருந்ததிக்கு அருகேயிருந்து உலகத்தைப் பார்த்துக் கண்சிமிட்ட வேண்டும் என்ற ஆசை என்னையறியாமலே எனக்கேற்பட்டது!

அன்றுமாலை மணி ஐந்து இருக்கும். கோபம் தணிந்ததும் கம்பீரங்குறையாத கதிரவன் தன் ஒளியைப் பொன்னாக்கி வீசிக் கொண்டிருந்தான் எங்கள் வீட்டு மேல்மாடியில் நின்றுகொண்டு என்னைக் கட்டுப்படுத்திக் கண்காட்சிசாலைப் பொம்மையாக்கி வைத்திருக்கும் இந்த உலகத்தைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். தெருக்கோடியில் மூர்த்தி வரும்போதே அவர் உருவத்தைக் கண்டுபிடித்து விட்டன என் விழிகள். ஓடி யாடி விளையாடும் பருவத்திலிருந்து உருவம் எதிரில் தோன்றிய தும் வெட்கத்தோடு ஓடியொளியும் வயது வரும்வரை என்னோடு ஒத்திருந்த அந்தத் தோழரைத் தாவணிக்கும் சேலைக்குமுள்ள தாரதம்மியங்கள் சேர்ந்து பழகாமல் தடுத்துவிட்டன இன்று—? கப்பலின் மேல்தளத்தில் நின்றுகொண்டிருக்கும் பிரயாணி, கப்பல் வரை தன்னை அழைத்துவந்து ஏற்றிவிட்ட தோழன் கரையின் நின்றுகொண்டிருப்பதைக் கவலையுடனும், கலக்கத்துடனும் கவ னிப்பதைப்போல நானும் அவரை—! வெறும் இரும்புத்துண்டாக இருந்தால்கூட அந்தக் காந்தக்கல்லைக் கண்டவுடன் தடைகளை

யெல்லாம் உதறிவிட்டு ஓடித் தழுவிக்கொண்டிருப்பேன். ஆனுல் நான் உணர்ச்சிகளாலேயே வளர்ந்து உணர்ச்சிகளுக்கே கட்டுப் படப்போகும் ஒருபெண்! எனக்கும் அவருக்கும் இடையிருந்த தூரங்குறையக் குறைய என் இதயத்துடிப்பு அதிகரித்து வீட்டுக் குள் அடைபட்ட பெண் என்பதை ஒருவிநாடி மறந்து கூட்டில் பிடிபட்ட கிளிபோல என் தோழனைக் கூச்சலிட்டுக் கூப்பிட விரும்பினேன். ஆனுல்—? முந்திக்கொண்டு முன்னுல் ஓடிவர இரண்டு சொற்கள் இதயத்துக்குள் போராடின. "அண்ணு"! மூர்த்தியின் கட்டான உடலும் கண்கவர் தோற்றமும் இந்தச் சொல் எழமுடியாமல் தடுத்துவிட்டன. "அத்தான்!" புதிதாக எங்கள் வீட்டில் புகுந்த அந்தஸ்தும் ஆச்சரியமும் என் உதடுகளை இழுத்துப் பொத்தின. வெட்கம் வேறு குறுக்கேயிருந்து வேடிக்கை செய்தது!

என்னைப்பற்றின சிந்தனைகளிலேயே நான் என்னை மறந்து விட்டேன் என்பதை மாடிப்படிகளில் எழுந்த காலடியோசைகள் கவனப்படுத்தின. வேகமாகக் கதவுப்பக்கம் திரும்பிய என்விழிகள் உடனே தரையை நோக்கத் தாமே தாழ்ந்தன. மூர்த்தியும் அவருடைய மோகன உருவமும்! பாயும் பார்வையைத் தேக்கித் தடுத்துத் தன்னைச்சுற்றி மேயவிடும் அந்த அழகான முகத்தை நேருக்கு நேராக நிறுத்தி நிதானமாக ஒருமுறை பார்க்கவேண்டும் என்ற ஆசை எனக்கேற்படத்தான் செய்தது. ஆனுல்...? தீவிர மாகவும் இல்லாத மந்தமாகவும் ஆகாத ஒருவித ஒளி என் விழிகளுக்குள் புகுந்துகொண்டு இமைகளைத் திறக்க முடியாமலும் மூடவிடாமலும் தடுத்துவிட்டது உள்ளத்துக்குக் குளிர்ச்சியையும் உடலுக்கு வெப்பத்தையும் தரக்கூடிய உணர்ச்சி என்னைத் தழுவித் தாலாட்டியது.

"சக்கு! அருமையான கனவென்று கருதி மறந்துவிட வேண் டியதுதானு நான் உன்னை?"

என் இதயத்தில் ஏற்றி வைத்திருந்த ஒளியைச் சுற்றிச் சூறைக்காற்றை யெழுப்பிச் சுழற்றிவிட்டன இந்தச் சொற்கள்.

"மூர்த்தி! எப்படியானுலும் என் இதயஒளி நீதான். அதை அணைத்துவிடாமல் தயவுசெய்து போய்விடு."

"விழிகள் வேருெருவளுக்கு. ஆனுல் ஒளிமட்டும் உனக்குத் தான் என்கிருயா? பைத்தியமே எதையும் திருட்டுத்தனமாகப் பெற்றிருக்க நான் ஒன்றும் மட்டரகம் அல்ல!"

அரம்போல என்மனதை அறுத்துத் தள்ளிய இந்தப் பேச்சு அந்தணர்—ஆனந்தியின் தந்தை—என் இதயத்தில் பதித்த அந்தக் கருத்தைக் குத்திக் கிளப்பிவிட்டது.

"மூர்த்தி! சீதை சாவித்திரி போன்ற பதிவிரதா சிரோன் மணிகள் பரம்பரையில் உதித்தவர்கள் இந்நாட்டுப் பெண்கள் என்பதை மறந்துவிடாதே!"

"இவ்வளவுதாஞ உனக்குத் தெரிந்தது? சீதையும் சாவித்திரி யும் தங்கள் கருத்துக்கிசைந்த கணவர்களைப் பெற்றதால்தான் கற்புக்கரசிகளாக இருக்க முடிந்தது!"

என்னைத் திணற வைத்த இந்தப் பதில் திகைப்பைக் கொடுத் தது. கன்னித் தன்மையைக் காப்பாற்றவே தன்னந்தனியாக விடப்பட்ட என்னேடு அந்த நேரத்தில் ஒரு கட்டிளங்குமரன் இருப்பதை உலகம் பார்க்க நேர்ந்தால் .....!

"மூர்த்தி! நீ போய்விடு. யாராவது பார்த்துவிட்டால் எங்கள் அந்தஸ்து ஆச்சாரம்—"

"இவற்றிற்குப் பங்கம் வந்துவிடும் என்கிருய்? வற்ருமல் வறளாமல் சோறு கிடைக்கும் வசதிமட்டும் ஏற்பட்டால் அந்தஸ் தும் ஆச்சாரமும் எளிதில் எவரிடமும் புகுந்துகொள்ளும் ஆனுல் மாசில்லாத மனப்பண்புகள் உண்டாவதுதான் —"

வானத்தில் மேற்குக்கோடி விளிம்பில் யாரோ கல்லா லடித்துக் காயப்படுத்தி விட்டதால் குருதி கொட்டிக்கொண்டிருந் தது. குளத்தில் குவிந்துகிடந்த தாமரையின் இதழ்கள் லேசாக வாடியிருப்பதுபோல எனக்குத் தோன்றின.

"சக்கு! நீ அந்தஸ்தில் உயருவதைப்பற்றி எனக்கொன்றும் கவலையில்லை. ஆனுல்—! நீ போய்விட்டால் என் இதயம் காலி யாகிவிடும். பிறகு—? வெறிச்சென்றிருக்கும் எதுவுமே வேதனை யைத்தானே கொடுக்கும்!"

அலுப்போடு, படுத்திருந்த பாயைச் சுருட்டுவதைப்போலச் சரிந்துவிழுந்த கதிரவன் மெல்லத் தன் கதிர்களை இழுத்து மறைப் பதையே கவனித்துக்கொண்டிருந்தேன். மூர்த்தி எப்போது அங்கிருந்து போனார் என்பது எனக்குத் தெரியாது. வெட்டி யெடுத்த தேங்காய் கீற்றை வானத்தில் வைத்துப் பதித்ததைப் போலத் தோன்றியது ஒடிந்து காணப்பட்ட அந்த வெண்ணிலா—.

## 2

பாதிவரை வளர்ந்துவிட்ட பரிதாபத்துக்குரிய என் கதையின் முன்னுரை வேடிக்கையாகவே தோன்றும். மண்குடிசையில் இருந்த நாங்கள் மாடிவீட்டில் குடியேறியவுடன் துடிக்கும் புழுக் களைப் பார்ப்பதுமாறி விண்ணிலிருந்து கண்சிமிட்டும் தாரகைகளைக் கண்டு காதலிக்கத் தொடங்கினோம். இளமை உடலில் குவிந்த வுடன் மெருகும் தன்னாலே படருவதைப்போல் அந்தஸ்தில் நாங்கள் உயர்ந்ததும் ஆச்சாரமும் எங்களிடம் புகுந்துகொண் டது. இந்த விஷயத்தில் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர் கள் என் எதிர்வீட்டுத் தோழி. ஆனந்தியின் பெற்றோர்தாம்! அவர்களுடைய குளிர்ந்த முகங்களும் குழைந்த பேச்சுக்களும் கோபமே உருவான நடவடிக்கைகளும் எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. நளினமும் லாகவமும் கலந்த நல்ல பண்புதானே நாகரிகம் என்பது!

காப்பீப் பவுடரைவிடச் சிகரிப் பவுடர்தான் அதிகமான நுரையை உண்டாக்கும் என்ற உலகம் அறிந்த உண்மை அப்போது எங்கள் நினைவில் வராமல்போனது வீரன், மாடன், இருளன் போன்ற தாழ்ந்த ஜாதிக் கடவுள்களையெல்லாம் விரட்டி விட்டு முருகன், விஷ்ணு, சிவன் போன்ற உயர்ந்த ஜாதிக் கடவுள் களைக் கும்பிட ஆரம்பித்தோம். கொலு வைப்பது—கும்மியடிப் பது—கோபாலனை அழைப்பது—விரகந்தாங்காது. நாங்கள் படும் வேதனையை அவனிடம் பாடிக்காட்டுவது—இவைபோன்ற “பண் பாட்டில் தேர்ந்த பழக்கவழக்கங்கள்” ஒவ்வொன்றாக என்னிடம் புகுந்து எங்கள் வீட்டிலும் இறக்குமதி செய்யப்பட்டன. ஆட்டுக் கறி சமைத்துச் சாப்பிட்டுவிட்டுக் கையை நன்றாகத் தேய்த்துக்

கழுவிக்கொண்டு, "இன்று எங்கள் வீட்டில் கத்தரிக்காய் சாம்பார்" என்று பொய் சொல்லப் பழகிக்கொண்டோம்.

## 3

சுருக்கமான இடைவேளைக்குப் பிறகு தொடர்கிறது என் சோகக்கதை. மூர்த்தி வந்துபோன அன்றிரவு ஆனந்தியின் தகப்பனுர் எங்கள் வீட்டுக்கு வந்தார். வழக்கம்போல நான் அவரை வரவேற்றேன்.

குறும்புங் கேலியும் கலந்த குரலில் "அம்மா சக்கு! மல்லிகைக்கும் ரோஜாவுக்குமுள்ள வேற்றுமை என்ன தெரியுமா உனக்கு?" என்று அவர் கேட்டபோது எனக்குத் திகைப்பேற்பட்டது. நினைவுகளைப் பட்டுப்பூச்சிகளாக்கிப் பறக்கவிட்டு வேடிக்கைப் பார்க்கும் பருவத்தில் இருந்த எனக்கு அலர்ந்த ரோஜாவும் மலர்ந்த மல்லிகையும் அழகுச் சரக்குகள் என்பது மட்டுந்தான் தெரியும். ஒருவேளை ரோஜாவுக்கும் எனக்கு வரவிருக்கும் ராஜாவுக்கும் எப்படி எப்படி ஒற்றுமை வேற்றுமைகள் அமையவேண்டும் என்று கேட்டிருந்தால் வெட்கத்தோடாவது சொல்லியிருப்பேன். ஆனால் சிந்தனைக்குரிய இந்த கேள்வி......?

"மல்லிகையின் இதழ்களைவிட ரோஜாவின் இதழ்கள் சற்று மெல்லியவை!" என்று எனக்குத் தெரிந்த அந்தப் பதிலைச் சொல்லி வைத்தேன்.

"ஆமம்மா! மெல்லிய இதழ்படைத்த ரோஜா எட்ட இருப்பவர்கள் பார்வையைப் பற்றிக் கிட்ட இழுக்கும். ஆனால் தடித்த இதழ் படைத்த மல்லிகையோ உள்ளத்துக்கு மதிப்பை உணர்த்தும்.

நிர்மலமான வானத்தில் திப்பித் திப்பியாக படிந்திருந்த மேகத் திரைகளில் என் விழிகள் அர்த்தமில்லாமல் பார்வையைப் பதித்தன.

"ஆண்கள் இதயங்களைக் கவ்வியிழுக்கும் விதம் பெண்கள் இருக்கக்கூடாது. ஒன்று சேர்ந்தே வளர்ந்திருந்தாலும் வாலிபம் ஒரு ஆபத்தான பருவம்" என்றுர் அவர்.

புரிந்துகொண்டேன். மூர்த்தியும் நானும் தனித்திருந்த போது திறந்திருந்த எதிர்வீட்டு ஜன்னலை நான் கவனிக்க மறந்து போனது என் நினைவுக்கு வந்தது காதலியின் கண்களை அவளறியா மல் பொத்தி வேடிக்கைக் காட்டப் பூனைபோலப் பின்னால் நடந்து வரும் காதலன் அவளுக்கு நேரெதிரே நிலைக்கண்ணாடியிருப்ப தைக் கவனிக்க மறந்ததைப்போல நானும் அன்றுமாலை......

இதைத் தொடர்ந்து என் திருமண ஏற்பாடுகளைச் சுறுசுறுப் பாகக் கவனிக்கத் தொடங்கினர் என் பெற்றோர். உடலை வளமாக வைத்துக் காப்பாற்றும் வகை தெரியாத ஒருவனிடம் என்னை அம்மி மிதித்து—அருந்ததி பார்த்து—அக்கினி வளர்த்து—அத்தனை கடவுள்களையும் சாட்சியாக வைத்து—உலகம் ஒப்படைத்தபோது பந்துமித்திர இஷ்டஜனங்கள் ஒருவர்கூட விட்டுப்போகாமல் வந்திருந்து தம்பதிகளாகிய எங்களை வாழ்த்தி அருளினார்கள். ஆனால் எனக்கு மாலையிட்டவனுடைய உடலுக்குள் எங்கோ ஒளிந்துகொண்டிருந்த உயிர் என்னைக்கண்டு பயந்தோ, பச்சா தாபப்பட்டோ உடனே ஓடிமறைந்தது. நான் விதவையானேன். எனக்காகச் சிலர் அழுதார்கள்—அவனுக்காகப் பலர் அழுதார் கள்—யாருக்காகவும் நான் அழுவதற்கு எனக்கு எந்தவிதமான கவலையோ கலக்கமோ அப்போது ஏற்படவில்லை!

மஞ்சளை அழித்து மங்களத்தை ஒழித்து மங்கையாக உலவ வேண்டிய என்னை மரக்கட்டையாக ஆக்கிய அன்று ஆனந்தியின் தகப்பனார் என்னிடம் சொன்ன அந்தச் சொற்கள்......

"அம்மா சக்கு! கயிறு கழுத்தில் ஏறுவதற்கு முன்னால் பெண்கள் பிற ஆண்களைப் பார்க்கமட்டும் செய்யலாம். கயிறு கட்டியான பிறகு பழகும் உரிமைகூடக் கொடுப்பார்கள்—பாதக மாக நடந்துகொண்டாலும் இல்லாவிட்டாலும் கட்டிய கயிறு அறுந்துபோனால் பார்ப்பதுகூடப் பாபம்!"

சொல்லும்போது அவரும் அழுதார்—கேட்டவுடன் நானும் அழுதேன்!

## 4

மாரிக்காலம் தொடங்கிவிட்டது. இருள் மேகங்கள் வானத்தை மூடிமறைத்து அதில் நடமாடும் சிறிய பெரிய நட்சத்

திரங்கள் அத்தனைக்கும் முக்காடிட்டன. முண்டிக்கொண்டு முன்னால் ஓடிவர முயற்சிக்கும் மின்னல்கொடியாளைப் பின்னால் இழுத்துவிட்டு உலகத்தார் பார்க்க முடியாமல் ஒளித்து வைத்தன அந்தக் கருமேகங்கள். தன்னைச் சூழ்ந்துகொண்டு கதறிக் கர்ஜனை செய்யும் காட்டுமிருகங்களைக் கண்டுபயந்து பதறிய வானம் கண்ணீரைப் பொழிந்தது. இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்தமழை எங்கள்வீட்டுத் தோட்டத்தைப் பாழாக்கி விட்டது. புயலில் சிக்கிய பூக்களின் இதழ்கள் சிதறிச் சின்னு பின்னப்பட்டுவிட்டன. மகிழ மரமும் முறிந்துபோனதால் அதைச் சுற்றித் தழுவிக்கொண்டிருந்த முல்லைக்கொடி அறுந்து அழிந்தே போனது. என் இதயவேதனையைப் படமாகட்டும் பிடிக்க முடிந் தால் அது எப்படியிருக்கும் என்பதைப் பாழடைந்த அந்த மலர்த் தோட்டம் என் பார்வைக்கே எடுத்துக்காட்டியது!

காலம் முயலாக இருப்பதும் ஆமையாக மாறுவதும் சூழ்நிலை யைப் பொறுத்துத்தான். ஆனால் காலத்தைக் கவனித்து வாழ்வை நடத்தும் நிலையில் நான் இல்லை. ஒருநாள் மூர்த்தி என்னைத் தேடி வந்தார் அப்போது வீட்டில் எவருமே இல்லை. திகைப்பால் நான் தடுமாறிப் போனேன்.

"சக்கு! இவ்வளவுதானு உன் வாழ்வு?"

அழுதார்—அழுதேன்......அழுதோம்!

"விதி!" என்று இரண்டே எழுத்துக்களில் என் வேதனையைச சுருக்கினேன், பதிலாக.

இல்லை சக்கு, வீணர்களின் சதி என்ருர் மூர்த்தி. அவருடைய கருத்து எனக்குப் பிடிக்காவிட்டாலும் அதில் கலந்திருந்த உருக் கம் என் மனப்புண்ணை ஆற்றியது .....போலியாக ஒரு விளிம்பைப் புலப்படுத்தும் வானத்தை எத்தனையோ தடவைகள் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறேன். ஆனுல் அப்போதெல்லாம் எத் தனையோ விதமான விநோதங்களையும் வேடிக்கைகளையும் மிதக்க விடுகிற வானத்துக்கு அவற்ருல் ஏதாவது பலன் உண்டா என்ற சந்தேகம் எழுந்து எனக்கு சஞ்சலத்தைக் கொடுத்ததில்லை.

"சக்கு! விழிகளிலிருந்தும் பார்க்காமலிருப்பது, செவிகளி லிருந்தும் கேட்க மறுப்பது, இளமையிருந்தும் இன்பத்தை ஒதுக்கி வைப்பது இவை அத்தனையும் ஒரேவிதமான மடமைகள்தாம் என்ருர் மூர்த்தி.

புனிதமே உருவான பெண்மையைச் சிதைத்துச் சித்திரவதை செய்வதைப்போலத் தோன்றின அவருடைய அந்தச் சொற்கள்!

"மூர்த்தி! நான் ஒருபெண் என்றுதானே நாக்கில் கொஞ்சங் கூடக் கூச்சமில்லாமல் பேசுகிருய் உலகின் வலிவற்ற தன்மை யைச் சாதகமாக்கிக்கொண்டு சூறையாடும் எவரையும் நான் வெறுக்கிறேன் என்று சொல்லும் நீயா என்னிடம் இப்படி...?"

"பைத்தியமே! உலகை உண்டாக்கி அதில் உன்னைப் படைத்த கடவுள் உலகுக்குப் பருவ வேறுபாடுகளையும் உனக்கு உணர்ச்சிகளையும் உண்டாக்கித்தானே வைத்திருக்கிருர். பாத் திரம் சூடேறும்போதும் குளிரும்போதும் அதற்குள்ளே இருக்கும் பால்மட்டும் மாருமல் அப்படியே இருக்குமோ? கோடையில் குளிர்ச்சியையும் மாரியில் கதகதப்பையும் எந்த உடலும் தேடத் தானே வேண்டும்!"

தடித்து மரத்துப்போன உடலும் உள்ளமும் படைத்த ஒரு வேசியிடம் பேசவேண்டிய பேச்சையா மூர்த்தி என்னிடம் பேசி யது......! பட்டுப்போயிருந்த என் உள்ளம் பற்றியெரியத் தொடங்குவதை உணர்ந்தேன்.

"மூர்த்தி! வெறி உன்னை அலைக்கழிக்கிறது."

"இல்லை சக்கு! விவேகம் உன்னை கரையேற்றத் தூண்டு கிறது"

வீசியெறிந்த பந்து எதிலோ மோதித் திரும்பி வருவதைக போலான இந்தப் பேச்சுக்கள் எனக்கு ஆத்திரத்தையும் அவ மானத்தையும் உண்டாக்கின.

"சீ! போவெளியே! வேலியில்லாத் தோட்டங்கள் எங்கே யிருக்கின்றன என்று தேடித்திரியும் வெறிபிடித்த ஆட்டுமந்தை யைச் சேர்ந்த உனக்கு இந்த வீட்டில் நுழையும் உரிமைகூடக் கிடையாது!"

உள்ளத்தில் கொழுந்துவிட்ட தீயிலிருந்து கிளம்பிய கனல் பொறிகள் என்னையும் அறியாமலே வெளியே தெறித்துவிழுந்தன. முகத்தை மூர்த்திக்கு எதிர்ப்பக்கம் திருப்பிக்கொண்டேன்.

"போகிறேன் சக்கு! ஆனால் ஒன்றேயொன்றை உன்னிடம் சொல்லிவிட்டுப் போகிறேன்—நீ கேட்டாலும் கேட்காவிட்டாலும் சிறுவயதிலிருந்தே நாம் இருவரும் சேர்ந்தே வளர்ந்தோம். ஒத்துப் பழகினோம். உள்ளம்விட்டு உறவாடினோம். என்னுடைய தேவைகளை நான்கூட உணர்ந்ததில்லை. நீதான் தெரிந்துகொண்டாய் நீ யில்லாத நான் நீரில்லாத ஓடை...... நானில்லாத நீ முட்களற்ற கடிகாரம்......... நாம் இருவரும் ஒன்றுபடாத நம் வாழ்க்கை மகரந்தப்பொடியை இழந்த மலர்!"

இதை சொல்லிவிட்டுப் பதிலுக்காக வெகுநேரம் காத்திருந்தார் மூர்த்தி. என் இதயத்தில் சிலைகளாக இருந்த சீதையும் சாவித்திரியும் இந்த உருக்கமான பேச்சில் நான் தடுமாறிப் போகாமல் தடுத்தனர்.

"சரி சக்கு! நான் போகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் எப்போதும் மறந்துவிடாதே! கட்டில்லாத பெண்களுக்கு இருக்கும் கட்டழகு அவர்களுடைய அழிவுக்குத் தூண்டில் முள்!"

இத்தோடு மூர்த்தி போய்விட்டார். ஆனால் அவர் சொல்லி விட்டுப்போன வார்த்தைகள் மட்டும் என்னைவிட்டுப் போக மறுத்தன.

சிதைந்துபோன அந்த மலர்த் தோட்டத்திலேயே என் சிந்தனைகளையெல்லாம் செலுத்தி வேறெந்த நினைவும் என் உள்ளத்தில் புகாமல் கவனித்துக்கொண்டேன். காலைக் கதிரவன் உதித்தவுடன் அருகிலிருந்த குளத்துக் கமலமும் மலர்ந்தது. இதழ் அத்தனையையும் ஒன்றுகூட விட்டுப்போகாமல் விரித்துத் தன் இதயத்தையே பகலவனுக்குத் திறந்து காட்டினாள் பத்மாவதி! அவள் உள்ளத்தை ஆண்ட கதிரவனுக்கு இந்த உலகத்தைக் கட்டியாளுவது கடினமாத் தோன்றவில்லை, உலகின் இளமை உணர்ச்சிகளுக்கெல்லாம் உயிர்கொடுத்து எண்ணத்துக்குட்படாத அரும் பெரும் செயல்களைக்கூடச் செய்ய வைத்தான் ஆதவன். கடைசி

யில் அவனும் களைத்துப்போனான். உடனே ஒளியை அவனிடமிருந்து இரவல் வாங்கிக்கொண்டு ஓடோடி வந்தது வெண்ணிலா சொந்த ஒளியில்லாத அந்த மந்த மதியைக்கூடக் காதலிக்க ஒரு அல்லி காத்திருந்தது. சின்னஞ்சிறு மலரின் சிந்தையைக் கவர்ந்து சிரிக்கவைத்த சந்திரன் மனித இதயத்தின் மென்மையின் உணர்ச்சிகட்குப் போதையூட்டி இன்பத்துக்கு மெருகு தீட்டினான். குளத்து மலர்களான அல்லிக்கும் தாமரைக்கும் அந்தஸ்தைக் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் போட்டி போட்டுக்கொண்டு முனைந்தது. கரையில் வளர்ந்திருந்த ஒரு பவள மல்லிகைக்கு வேதனையைக் கொடுத்தது.

அது மலரும் நேரம் உலகம் அயரத் தொடங்கும் இராக் காலம். ரசனைக்குத் தேவையான பொறுமையோ நிம்மதியோ இல்லாத பாவநினைவுகள் 'உலகத்தைப் படையெடுக்கும் அந்தக் காலத்தில் அனாதையாகப் பருவமடைந்த அந்த மலர்...! ஏக்கம் அந்த மலரின் இதயத்தை வெடிக்கச் செய்ததால் இரத்தங்கசிந்து அதன் உடல் எல்லாம் உதிரச்சிவப்பாக உருமாறியது! ஆனால்...! அதற்கு தோழியாக நானொருத்தி இருக்கிறேன் என்பதை ஏன் தான். அந்த மலர் மறந்து போனதோ தெரியவில்லை!

லேசாக வேதனை படர்ந்த வேட்கை என்னை உலகிலுள்ள அத்தனை பொருள்களையும் வெறிக்க வெறிக்கப் பார்க்கத் தூண்டியது. உரிமையோடு கவிழ்ந்திருக்கும் என் தலையைக் கன்னங்களின் விரல்கள் படும்படி முகவாய்க்கருகே பிடித்து நிமிர்த்த ஒரு கரம்—முகத்தைப் பதித்து என் காதுகள் வழியாக உள்ளே ஓடும் கடிகாரம் நிதானந்தவறாமல் ஓடுகிறதா என்று கவனிக்க ஒரு மார்பு—வெப்பத்தால் உலர்ந்து போகும் உதடுகளை உமிழ்நீரால் நனைத்துத் தண்மைப்படுத்த ஒரு ஜோடி உதடுகள்-அரவணைத்து ஆதரித்து வாழ்வின் அல்லல் தெரியாமல் என்னை காக்க ஒரு மனித இதயம்-இதுவரையில் எனக்குப் புரிந்திராத அந்தப்புதிரை உடல் உள்ளம் உயிர் ஒன்றும் நோகாமல் விளங்கவைக்க ஒரு...! என்னைச் சுற்றிப் படையெடுத்த பாவ நினைவுகள் எப்படியாவது என் இதயத்துக்குள் நுழைந்துவிட என்னென்னவோ முயற்சிகள் செய்தன!

## 5

கோடை கொப்பளித்தது, கண்களுக்கு முன்னுல் கானலைக் காட்டிகருத்தை அலைக்கழிக்கும் கடும் வெய்யில், வெப்பத்தால் நீர்வறண்டு போனதால் உலகிலுள்ள அத்தனைப் பொருள்களும் நிறங்குன்றிக் காணப்பட்டன. தளிரிலைகள் கூடத் தணலால் தகிக்கப்பட்டுச் சருகுகளாயின. என் உடலை ஓவியமாக ஆக்கிக் காட்டிய அந்த அழகை அழிக்க நானும் கோடையை என்வாழ்வில் புகுத்தினேன். உபவாசம்-பூஜை ஓய்வில்லாத உழைப்பு! எண்ணெயைக் காணமற் போனதால் என் தலைமயிர் இரத்தஞ்செத்து வெளுத்தது. ஆண்களுடைய பார்வையைப்பற்றி யிழுக்கும்படிப் பெண்கள் இருக்கக்கூடாது! "என்று ஆனந்தியின் தந்தை சொன்ன அந்தச் சொற்களை என் வாழ்வில் அமைத்தேன். என் உடல் ஒடியும் எலும்புக்கூடானது-உள்ளம் உணர்ச்சியற்ற கற்பாறையாக உறைந்தது! எங்கள் வீட்டில் மாட்டப்பட்டிருந்த காளிதேவியின் உருவத்துக்கும் கண்ணுடியில் தெரிந்த என்தோற்றத்துக்கும் வேற்றுமையே இல்லாமல் போனது. கொதிக்கும் கண்கள்-கோரைப்பற்கள்-குருதியைக் கொப்பளிக்கும் கொடுமையே உருவான நாக்கு! என் வாழ்வு அழிந்ததுபோலவே உலகில் உள்ள அத்தனை பேருடைய வாழ்வும் ஏன் அழிந்துபோகக் கூடாது என்ற எண்ணம் என் இதயத்தில் மெல்ல மெல்ல உருவாகி. உயிர்பெற்றது!

அறிவுக்கும் அனுபவத்துக்கும் இடையிலிருந்த அந்தத் திரை கிழிந்த அந்தநாள்...!

நீண்ட இடை வேளைக்குப் பிறகு ஒருநாள் ஆனந்தியின் தந்தை என்னைத் தேடிவந்தார்.

"அம்மா சக்கு! அழுது பலன் என்ன? அவரவர் கொடுத்து வைத்தபடிதானே நடக்கும்"

தேடித்திரியும் கலங்கரை விளக்கு தென்படாமல் போகவே திகைத்து நிற்கும் கப்பல் மாலுமிபோலக் கலங்கி நிற்கும் எனக்கு ஆறுதல் எப்படி ஏற்பட முடியும்?

''இன்றைக்கு ஆண்டவன் திருப்பணிக்காக ஆட்டக்கச்சேரி வைத்திருக்கிறோம். நம்ம ஆனந்தி தான் ஆடப்போகிருள் நீயும் ஒரு டிக்கட்...''

அதற்குமேல் என்னென்னவோ சொன்னார்-என் காதுகளில் விழவில்லை. ஆண்டவனுக்காக ஆனந்தி ஆடுகிருள்! ஆண்டவனுக்கு பணந்திரட்ட ஆட்டக்கச்சேரி ஏற்படுத்தவேண்டிய அளவுக்கா உலகின் அறிவு அஸ்தமித்துவிட்டது? மற்ற ஆண்கள் முகத்தை நிமிர்ந்து பார்த்தாலும் பத்தினித்தன்மை பறந்தோடி விடும் என்ற பாடத்தை எனக்குக் கற்பித்த அவர் தன் மகளைப் பல ஆண்களுக்கிடையில் உடலை நெளித்து வளைத்து......சீச்சீச்சீ—... இதென்ன அவமானம்?

''ஆனந்தி ஆடப்போகிருளா?''

''என்னம்மா இதில் ஆச்சரியம், ஆண்டவனே தில்லையில் ஆடவில்லையா?''

இதைச் சொன்னதோடு அவர் சும்மாயிருந்திருந்தால் ஏதும் நடந்திருக்காது. பைக்குள்ளிருந்து ஒரு துண்டுப் பிரசுரத்தை எடுத்தார். அதில் அச்சிடப்பட்டிருந்த ஆனந்தியின் உருவத்தை! புயல்—பூகம்பம்—எரிமலை இவைகளே உருவான ஒரு பிரளயமே என்மனதில் உருவாகியது. கழுத்துக்கும் இடுப்புக்கும் இடையில் மறைப்பு ஏதுமில்லாத அந்தப் பாகத்தில் இறுக்கிக்கட்டப்பட்டிருந்த ஒரே சாண் அளவுள்ள கச்சை ''குளோசப்'' காட்சி போலத் தோன்றியது. இதைப் பார்த்தவுடன் என் உடல் வெட்கத்தால் குறுகிச் சிறுத்தது.

''இதென்ன அலங்கோலம்? பார்வையைப் பற்றியிழுக்கும் ரோஜாவைப்போலப் பெண்கள் இருக்கக்கூடாது என்று சொன்ன நீங்களா உங்கள் மகளை......?''

''என்னம்மா பைத்தியமாக இருக்கிறாய்? உடலைப்பார்த்து மயங்கும்படி இருந்தால்தானே ஓடோடி வந்து பார்க்க உலகமே முன்னுக்குவரும். கடவுள் கைங்கர்யத்துக்கும் பணம் சேரும்!''

"அதற்காக உம் மகளை உடலைத் திறந்துபோட்டுக் காட்டச் சொல்கிறீரா? விவஸ்தைகெட்ட ஜாதி என்று எனக்குத்தெரிந்திருந் தால் உம் முகத்தைக்கூடப் பார்க்க துணிந்திருக்கமாட்டேனே!"

"சீ! என்னடி இது குரங்குக் குட்டியாக ஆனுல் தாய் தாண்டி ஞலும் தடுமாறினுலும் அதைக் கட்டிப் பிடித்துக்கொண்டுதான் இருக்கவேண்டும்! நாங்கள் சொல்வதைப் பின்பற்றுவதாயிருந் தால் எல்லாவற்றையுந்தான் கேட்கவேண்டும். ஒன்றுகசக்கிறது, மற்ருென்று இனிக்கிறது என்று சொல்லலாமோ?"

சுரீர் என்று தைத்த அந்தச் சொற்கள் என் உயிரையே சுருட்டின. திடீரெனக் கிடைத்த பணம்—பணத்தால் உயர்வைத் தேடிய நாங்கள் என் இதயத்தைக் கவர்ந்த மூர்த்தி-அறிவுக்குத் திரையிட்ட, அந்தஸ்து-வாழ்வுக்கு வேலியிட்ட ஆச்சாரங்கள்-வானத்திலிருந்து ஒளிவிட்ட அருந்ததி! உதிரும் தாரகை உடனே மறைந்து போவதைப்போல ஒவ்வொன்ருக உருவாகி அழிந்தன!

நீர் நிறைந்த விழிகளை வானத்துக்கு நேரே நிமிர்த்தினேன்! பால்வண்ணநிலா என்னைப் பார்த்துச் சிரித்தது. குளத்துத்தாமரை என்னைப்போலத் துவண்டுகிடந்தது. காலைக் கதிரவன் ஒளிகண்டு மலர்ந்திருந்த அந்தத் தாமரையிடமிருந்து ஒரு புன்சிரிப்பை வர வழைக்கப் போதுமான சக்திகூட இல்லை அந்தப்போலி நிலாவுக்கு.

என்னென்னவோ நினைவுகளால் படுக்கையில் படுத்துப்புரண் டேன். கசிந்த கண்ணீரால் நனைந்த அதைத் தலையணிகூடக் கற்பாறைபோலக் கடினமாக இருப்பதை உணர்ந்தேன். யாரோ ஆதரவோடு என் முதுகைத்தொட்டார்கள். திரும்பிப் பார்த்தேன் மூர்த்தி!

"கேள்விப்பட்டேன் சக்கு எல்லாவற்றையும்! அந்தக் கூட் டமே அப்படித்தான்! இரும்புப் பிடியாக எதையும் பற்றிக்கொண்டு நம்மைப்போலப் பாழாகமாட்டார்கள். அடுத்த சிகரட்டைப் பற்றவைத்துக்கொண்டு புகைத்து முடித்த சிகரட்டை வீசியெறி வதுபோலத்தான் அவர்களுடைய ஒவ்வொரு பண்பும், செயலும், பழக்க வழக்கமும்!"

"மூர்த்தி! அதனுல் நான் வீணுகத்தான் போகவேண்டுமா?"

“சக்கு! புரிகிறது உன் பேச்சு. ஆனால் நான் எடுத்திருக்கும் அந்த வேலை...! இந்தச் சமுதாயம் இரண்டே ஜாதிகளைத்தான் உண்டாக்கியிருக்கிறது. ஒன்று மானத்தைப் பறிகொடுத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் ஜாதி-மற்றொன்று தேவைகளைத் தியாகம் செய்து மானத்தைக் காக்கும் ஜாதி! மானத்தையும் விடாமல் தேவைகளையும் பூர்த்திசெய்து எவராலும் புது ஜாதியை உண்டாக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறேன். அந்த வேலை முடியட்டும். பிறகு பார்த்துக்கொள்ளலாம்.”

இதைச் சொல்லிவிட்டு மூர்த்தி மேலே நடந்தார். அவர் என்னிடமிருந்து விலக விலக உளைச்சேற்றில் ஒவ்வொரு அங்குலமாக உயிரோடு என்னை யாரோ திணிப்பதைப்போலத் தெரிந்தது!

என் உள்ளத்திலிருந்து ஒரு குரல் அதை உடைத்துக் கொண்டோடி வர என்னென்னவோ முயற்சிகள் செய்தது. அதைத் தடுத்து நிறுத்திக்கொண்டேன்.

“இரு மூர்த்தி நானும் வருகிறேன். ஒத்து வளர்ந்த நாம் சேர்ந்து வாழாவிட்டாலும் தொண்டு செய்வதிலாவது ஒன்று படுவோம்!”

நான் வெளியில் சொல்லாத அந்தச்சொற்கள் வேதனையைத் தணித்தன. பிணமான மனிதன் எலும்புக்கூட்டைப் பக்குவப்படுத்திப் பள்ளிக்கூடத்தில் பாடங்கற்பிக்கப் பயன்படுத்துவதைப் போல நாலும் நலிந்துபோன என் வாழ்வை......!

# தெளிவும் முடிவும்

"இந்தக் கதை, வசனங்கள், 'எக்ஸ்ட்ராக்கள்' இவை மூன்றையுந் தவிர ஏழ்மைக்கும் நம்முடைய உலகத்துக்கும் எந்த விதத் தொடர்பும் இருப்பதில்லையே, லீலா!" என்றேன் நான்.

லீலா சிரித்தாள். 'மேக்கப்' சரியாகக் கலைக்கப்படாததால் அவள் முகம் வர்ணக் கலவை வைத்திருந்த தட்டைப்போலத் தோன்றியது. இழக்க மனமில்லாமல் அவள் இழுத்துப் பிடித்திருந்த இளமை, அவளுடைய இதழ்களிலும் விழிகளிலும் மட்டுமே குடியேறியிருந்தது. மற்றப் பகுதிகளைத்தான் இஷ்டம்போல் மாற்றிக் கொள்ளலாமே!

"எவரும் உங்களை ஏழையாக மாறச் சொல்லவில்லை, வாசு; நடிக்கத்தான் சொல்லுகிறார்கள்" என்றாள் லீலா.

"குமட்டலெடுப்பதை எடுத்துக்குடி என்பது......"

உடனே என்னை எரித்து விடுவதைப்போலப் பார்த்தாள் லீலா. நானும் அயர்ந்துபோனேன்.

"அந்தக் குமட்டலெடுப்பதுகள் கொடுக்கும் காசுதான் குளிர்ச்சியான வாழ்வை உங்களுக்குத் தந்திருக்கிறது, வாசு, வாடிக்கிடக்கும் அவர்களுக்கு வாழ்வுதேடிக் கொடுப்பது நாம் தெரிவிக்கும் நன்றியே தவிர வேறொன்றுமில்லை."

பணக்கார உலகத்துக்கு 'பாஷை'க் கற்றுக்கொடுக்கும் அந்த நடிகையின் உள்ளத்தில், ஏழை உலகமும் இடம்பெற்றிருப்பது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. கனிந்த தக்காளிப் பழத்தைம்போலக் காட்சியளித்த அவளையே கூர்ந்து கவனித்தேன். எதிரே வட்டமிட்டு வசீகரிக்கும் புறுவைப் பார்ப்பதைப் போல, அவள் தன் இலட்சியத்தை வானவெளியில் உருவாக்கிப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தாள். அவள் வாழ்வில் அடிக்கடி குறுக்கிடும் வல்லூறுகள், அந்தப் புறுவை எப்படி உயிரோடு விட்டுவைத்தன என்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

''விறுவிறுப்பான வசனங்களை வேகமாகப் பேசிவிடுவ தாலேயே ஏழைக்கு விமோசனம் கிடைத்துவிடுமா, லீலா !''

நரம்பு என்று நான் மீட்டிய இடம், துடிக்காத இரும்பு என்று நான் தெரிந்துகொள்ள நெடுநேரம் பிடிக்கவில்லை. அகநானூறு படித்து முடித்தவன் அ, ஆவில் ஆரம்பிப்பவனைப் பார்ப்பதைப் போல என்னைப் பார்த்தாள் லீலா.

''கலையின் நோக்கம் எதையும் தெளிவுபடுத்துவதே தவிர தீர்த்து வைப்பதல்ல.''

மையிருட்டு மண்டியிருந்த என் மனதில், மின்மினியாகத் தோன்றிக் கலங்கரை விளக்காகப் பதிந்தன லீலாவின் சொற்கள். அந்தரத்தில் தொத்த முயற்சிக்கும் தாரகைகள் துடித்துக்கொண் டிருந்தன. முன்பாதி அம்புலி 'போக்கஸ்' விளக்காக மாறி, லீலா வின் முகத்தில் மட்டும் ஒளியைப் படியவைத்திருந்தது. எதிரே ஓலமிட்டுக்கொண்டிருந்த அலைகடல்போல இருந்த என் உள்ளம் சற்று ஓய்ந்தது.

லீலா விடைபெற்றுச் சென்ற பிறகும் வெகுநேரம் அந்தக் கடற்கரையிலேயே நான் உட்கார்ந்திருந்தேன்.

'வறுமையின் கொடுமை' என்ற படத்தில் நான் நடிக்கவேண் டும் என்று கேட்டபோது நான் மறுத்துவிட்டேன். தொழில் துறையில் தேர்ந்த படமுதலாளிகள் எளிதில் தோல்வியா காணுவார்கள்? விடாது தொல்லைப்படுத்தி என் வெற்றியை விரட்டியடித்து விட்டார்கள். ஒப்பந்தமும் கையெழுத்தாகி விட்டது. ஆனால் அதைத் தொடர்ந்து நான் அனுபவித்த வேதனை......

'வளமையின் வசீகரம்' என்பது மட்டும் அந்தப் படத்தின் தலைப்பாக இருந்திருந்தால்......! வாரிப் பூ முடித்து வசீகரிக்கும் சிங்காரியே தேவை என்பவனுக்குச் சிக்கலெடுத்த கொண்டைக் காரியிடம் மனம் எப்படிச் செல்லும்? என்னைச் சிதைத்துச் சித்திரவதை செய்த ஏழ்மையின் சாயலுக்கே இடங்கொடுக்கக் கூடாது என்று நான் செய்திருந்த உறுதி என்னை உறுத்திற்று.

முகத்தைச் சுளித்தபிறகு யாருக்குத்தான் முத்தங்கொடுக்க மனம் வரும்? இந்த வறுமைக்கு என்னைவிட்டால் வேறு வழியே இல்லை போலிருக்கிறது; துளைக்காவிட்டாலும் தொத்திக்கொண்டாவது இருப்பேன் என்று என்னைத் துரத்தித் தொடருகிறது.

தொல்லையாகத் தொடங்கி முல்லையாக மலர்ந்த என் வாழ்வின் முதல் அத்தியாயத்தை என்னைக்கொண்டே புரட்டச் செய்வது... படிக்கக்கூடச் சொல்லவில்லை அவர்கள்; நடிக்கச் சொல்லி விட்டார்கள்.

நத்தை வயிற்றிலேதான் பிறந்தேன் நான்; சமுதாயம் கோர்த்து அணிந்துகொள்ளும்வரை நாதியற்றுத்தான் கிடந்தேன். பாலுக்கழுதது... கூழுக்கலைந்தது... பரிவைத் தேடித்துளாவி யது...... இவையெல்லாம் என் வாழ்வில் இறந்தகால வினைச் சொற்கள்! இப்போது...? என்னைப் பார்த்தாலே போதும் என்று அலையும் பைத்தியக்காரர்களின் எண்ணிக்கை அளவுக்குமீறியே வளர்ந்திருந்தது. ஒப்பந்தப்படி பாதியும், ஒருவருக்குந் தெரியா மல் பாதியுமாகச் சேர்த்துக் குவித்த பணம் செல்வாக்கை எனக்குச் சேவகம் செய்ய வைத்திருந்தது.

ஒட்டுப்போட்ட கந்தல், பட்டுச் சட்டையாக ஆகும்போது ஆடை மட்டுமா மாறுகிறது? அந்தஸ்து மல்லவா உயர்ந்து விடுகிறது! எதிரிருக்கும் கதிரவனிடம் இதயத்தை இழந்துவிட்ட தாமரைக்குத் தனக்கு உருவளித்த சேற்றின்நினைவு உண்டாவதே இல்லை. நீரில் மூழ்கி நிலத்தைத் துளாவிப் பார்க்க அதற்கு நேரந் தான் ஏது? தப்பித் தவறி அந்தச் சேறு தன் பார்வையில் பட்டு விடுமோ என்ற பயத்தால்தானே, தனக்கும் தண்ணீருக்குமிடையே வட்டத்திரையை அமைத்திருக்கிறது அந்தத் தாமரை!

நாதியற்றவன் என்ற காரணத்தாலே நாடக உலகில் திணிக் கப்பட்டவர்களில் நானும் ஒருவன். தின்பதற்காக வாழ்வதா அல் லது வாழ்வதற்காகத் தின்பதா என்ற பிரச்னையில் தெளிவான முடிவு கண்டவர்கள் அந்தக்காலத்து நாடகக் கம்பெனி முதலாளி கள்தான். இவன் வாழ்ந்து தீரவேண்டிய தேவை நமக்கல்லவா ஏற்பட்டுவிட்டது என்ற பயம் காரணமாகத்தான் எங்களுக்குச்

சோறு போடுவார்கள். எதுவும் கிடைக்காத நிலைமாறி, இதற்காவது வழி கிடைத்ததே என்ற எண்ணந்தான் எங்களையும் பொறுத்துப் போகச் செய்யும். பசி தணிந்தது என்றவுடன் ருசி தொடங்குவது இயற்கைதானே! என்னதான் நாடகக் கம்பெனி முதலாளிகள் எங்களைப் பட்டுப்பூச்சிகளாக ஆக்கமுயற்சித்தாலும், நாங்கள் காலப்போக்கில் வண்ணாத்திப் பூச்சிகளாகத்தான் மாறுவோம். ஒவ்வொரு கம்பெனியாக நாங்கள் உள்ளே நுழைவதும், அங்கேயிருக்கும் சிலந்திகளுக்குச் சிலர் பலியாவதும், பலர் தப்பி வெளியேறுவதும் வழக்கமாக நடைபெறும் நிகழ்ச்சிகள். பால வேடத்தில் தொடங்கி, தோழியாக மாறி, துணைவி வேஷம் வரை போடுபவர்கள், தொண்டை 'உடைந்த' பிறகு வில்லனாகிக் கதாநாயகனாக நடிப்பார்கள். அதற்குப் பிறகுதான் விசிறிகள்...வெள்ளிக்கூஜாக்கள்...வெற்றிலைப் பாக்குப் பெட்டிகள்!

இந்தப் பலகட்ட நெருக்கடிகளைக் கடந்தான பிறகுதான் என் படவுலக வாழ்வு தொடங்கியது. மின்னாத தாரகைக்கு அந்தப் பொன்விளையும் பூமியில் இடமே இருப்பதில்லை. மெருகு தீட்டிக் கொண்டு மின்மினிகளாகவாவது தோற்றமளிப்பார்கள் அந்த உலகைச் சேர்ந்தவர்கள். நான் இப்போது ஒரு உண்மையான தாரகை...உருவாகிவரும் நிலவு! விண்ணில் மண்ணுக்கே இடமில்லாதபோது அதில் நெளியும் புழுக்களுக்கு வேலையேது? இந்த ஏழ்மைமட்டும் அங்கே எப்படிப் புகுந்தது என்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

அந்த அரைப்பகுதி அம்புலியும் அடியோடு அழிந்துவிட்டது. வெகுதூரத்தில் எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்கு வரிசைகள், ஏதோ தங்களாலான சிறு ஒளியை அங்கிருந்து கடற்கரையில் தூவிக்கொண்டிருந்தன. குழம்பிக்கொண்டே அங்கே உட்கார்ந்திருக்க என் மனம் இடங்கொடுக்கவில்லை. எழுந்து மெல்ல நடந்தேன். எட்டிப் பாய்ந்துவந்து கரையில் மோதிய அலைகள் என் கால்களைத் தழுவித் தாழ்ந்ததால் ஏதோ ஒருவித இதமான உணர்வு உண்டாகியது. தொடர்ந்து கடலோரமாகவே இயங்க என் கால்களுக்கு இடங்கொடுத்தேன். எவ்வளவு தூரம் நடந்திருப்பேன் என்பது தெரியவில்லை. மிக அருகே நாய்கள்

குரைப்பது கேட்டது. திரும்பிப் பார்த்தேன். இருளுக்கு நிழல் போல, அதைவிடக் கருமையாக சில குடிசைகள் காணப்பட்டன. எதையோ நினைத்துக்கொண்டு அந்தக் குடிசைகளை நோக்கி நடந்தேன்.

அந்த நாய்களைப்பற்றி நான் கவலை கொள்ளவே இல்லை. அவை குரைப்பதற்காகப் பழக்கப்பட்டவையே தவிர, கடிப்பதற்காக வளர்க்கப்பட்டவை அல்ல. புதிதாக யாராவது வந்தால் அந்தப் பொது எதிரியைப் பார்த்து எல்லாமே குரைக்கும்; வந்தவன் போனபிறகு ஒன்றையொன்று பார்த்து உறுமிக்கொள்ளும்.

சேறும் நீருமாக இருந்த அந்த ஒற்றையடிப்பாதையில் கால் வைக்கவே எனக்குப் பிடிக்கவில்லை. துர்நாற்றம் வேறு என் மூக்கைத்துளைத்தது. ஒழுங்கற்றுக்கிடக்கும் கற்பாறைகளைப்போலக் காணப்பட்ட அந்தக் குடிசைகளின் கதவுகள் எல்லாம் அடைக்கப் பட்டுக்கிடந்தன.

எங்கெங்கோயிருந்து ஓடிவந்து ஒன்றுகூடி குரைக்கத் தொடங்கிய நாய்கள் என்னிடம் நடுக்கத்தை உண்டாக்கின. யாராவது விழித்துக்கொண்டு என்னை ஒரு திருடன் என்று எண்ணி விட்டால்...? அருகிருந்த குடிசை ஒன்றின் கதவை லேசாகத் தட்டினேன்; திறந்துகொண்டது. உள்ளே நுழைந்து கதவை மூடித் தாள்போடத் துளவினேன். தாள் இருந்தாலல்லவா போட முடியும்!

''யார்?''

ஒலித்துத் தணிந்தது வீணை. தீப்பெட்டி எடுக்கும் ஓசை கேட்டது. பளிச்சென்று உண்டான வெளிச்சம் ஒருசில விநாடிகளில் மறைந்தது. உருவாகி மறைந்த அந்த ஒளிபட்டு என் விழிகள் தடுமாறின. அவற்றின் நிலை தெளிந்தபோது, ஒளித்துண்டு ஒன்று தரையிலிருந்து அந்தரத்துக்கு உயர்வது தெரிந்தது. ஏந்திப் பிடிக்கப்பட்ட அந்தச் சிறு மண்ணெண்ணை விளக்கு எழிலை எனக்கு எடுத்துக் காட்டியது. குறுகிய அளவிலேயே அதன் ஒளிக்கு ஆதிக்கமிருந்ததால் முகம் மட்டுந்தான் எனக்குத் தெரிந்தது. பூமிக்கு மேலேயும் பொன்விளையும் என்பதை அப்போது

தான் உணர்ந்தேன். சிரிப்பை இதழாக்கி, ஒளியை விழியாக்கி, எழிலை முகமாக்க எப்படித்தான் முடிந்ததோ தெரியவில்லை! அத்தனை அங்கங்களையும் அளந்தெடுத்து உருவாக்கி மெருகுதீட்டி அப்படியே இணைத்திருந்தார்கள். உயிரோடு எதிர்நின்ற அவளை, என் உள்ளத்தில் ஓவியமாகத் தீட்டி முடிக்க எனக்கு நெடுநேரம் பிடிக்கவில்லை.

"யார் அது?"

ஒரு ஆண் குரல்; வயோதிகத்தின் நடுக்கம் அதில் கலந்திருந்தது. சுவரோரமாக விரித்திருந்த பாயிலிருந்து எழுந்து நின்றார் அந்தக் கிழவர்.

என்னை ஒரு நடிகன் என்று எப்படிச் சொல்லிக்கொள்ளுவது? சொன்னால் இங்கேயிருக்கும் என் விசிறிகள் என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டால்...

"வெளியூர்க்காரன்; வழிதவறி வந்துவிட்டேன்; அந்த நாய்கள் என்னை விரட்டியதால்..."

அந்தப் பெண்ணின் கையில் இருந்த விளக்கை வாங்கி என் முகத்தை ஆழ்ந்து ஆராய்ந்தார் அவர்.

"நல்ல பிள்ளை போலிருக்கிறது இந்தப்பக்கமாக ஏன்வந்தாய், தம்பி? ஏதாவது இருந்தால் பிடுங்கிக்கொண்டு உதைத்து விரட்டி விடுவார்களே இங்கே இருப்பவர்கள்."

"என்னிடந்தான் எதுவுமே இல்லையே!"

"இல்லாவிட்டாலும் தொல்லைதான். ஏன் கொண்டுவரவில்லை என்று உதைப்பார்கள்."

சிரிப்பு—வெறுப்பு—பயம், இவை மூன்றும் சேர்ந்தால் எப்படியிருக்கும் என்பது எனக்கு அதுவரையில் புரியாமலிருந்தது; அப்போதுதான் தெளிவானது.

"படுக்க ஏதாவது கொடு, அம்மா. விடிந்ததும் திரும்பிப் போகட்டும்" என்றார் அந்தக் கிழவர்.

மேடுபள்ளமான தரை—கிழித்து உடலைக் குத்திய பாய்—கெட்டிப்பட்ட தலையணை—விளக்கை அணைத்துவிட்டதால் சூழ்ந்த இருள்! தூக்கமா வரும் எனக்கு? எழுந்து போய்விடலாமா என்று கூட நினைத்தேன். அந்தக் கிழவர்மட்டும் உதைக்கும் திருடர்களைப்பற்றிச் சொல்லியிருக்கா விட்டால்... திகில் என்னைத் திணறச் செய்தது!

''விளக்கு எரிந்தாலென்ன?'' என்று கேட்டேன்.

''அதற்கு எண்ணெய் வேண்டுமே, தம்பி'' என்றார் அந்தக் கிழவர்.

அவர் தூங்குவதற்கு முன்னதாக அவரைப்பற்றி நிறையத் தெரிந்துகொண்டேன். அந்த வட்டாரத்தில் பெட்டிக் கடை வைத்து அணுக்கள் அளவிலேயே ஆதாயம் காணுபவர் அவர். மணமாகி நாட்கள் பல கழிந்து இந்தப் பெண்ணை பெற்றுக் கொடுத்துவிட்டு 'நல்லகதி' அடைந்துவிட்டாள் அவர் மனைவி. இந்தப் பெண்ணும் 'மேஜராகி' ஏழெட்டு வருடங்கள் ஆகிவிட்டன. கையில் கொஞ்சம் காசு தங்கியிருந்தபோது எட்டாவதுவரையில் படிக்கவைத்தார். கை நொடித்தவுடன் அவள் படிப்பும் நொண்டியாகிவிட்டது. ஒழுங்கான வாலிபனிடம் அவளை ஒப்படைக்க அவரிடம் பணமுமில்லை; ஒழுங்கற்ற உதிரிகளைத் தேர்ந்தெடுக்க அவருக்கு மனமுமில்லை!

எட்டிக் காயாகிக் கசந்த ஏழ்மை எப்படித்தான் கட்டிச் சர்க்கரை ஆனதோ, தெரியவில்லை. இமைகளைத் திறந்தால் இருளும், மூடினால் அவளுமாக என்னைத் தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தார்கள்!

''கண்டவுடன் காதலா?'' என்றது என் உள்ளம், மெல்லக் கண் சிமிட்டிக்கொண்டே.

''அதுதானே நம்முடைய உலகத்தின் நியதி!'' என்று அதன் வாயை அடைத்தேன்.

''காணாதபோது மறந்து விடுவதுந்தான்...!''

என் உள்ளத்தோடு சேர்ந்து சிரித்துவிட்டேன். இடை வேளை யாகச் சிறிது நேரங்கழிந்தது.

''ஒரே இரவுக்குத்தானே?'' என்று அது தன் தொல்லையைத் தொடங்கியது:

''இல்லை, இல்லை. இறுதி இரவுவரை!'. என்று கோபமாகப் பதிலளித்தேன்.

அலுத்துப்போன என் உடல் ஓய்வுக்காக மன்றுடியது; பொல்லாத உள்ளமோ தன் போக்கிரித்தனத்தை எல்லைமீறி வளர்த்துக்கொண்டே போனது. எப்போது கண்ணயர்ந்தேன் என்பது தெரியவில்லை. விடிந்து வெகுநேரம் கழிந்த பிறகுதான், எனக்கு உணர்வு ஏற்பட்டது. விழிகளைத் திறக்கவே முடியவில்லை; உடல் அளவுக்குமீறிக் கொதித்ததால் நரம்புகள் உருகிக்கொண் டிருந்தன. இருக்கிறேனு அல்லது பறக்கிறேனு என்பது புரியாமல் தத்தளித்தேன்.

நடுங்கிய கரம் ஒன்று என் நெற்றியில் படர்ந்தது.

''கொதிக்கிறதே, அம்மா.''

''அளவுக்கு மீறிய அவதிபோலிருக்கிறது அப்பா, உடல் நொந்துபோய்விட்டது ''

''இவன் நல்லகாலம் நம்மிடம் கொண்டுவந்து சேர்த்திருக் கிறது.''

நீண்ட அமைதி நிலவியது. கஷ்டப்பட்டுக் கண்களைத் திறந்து பார்த்தேன். கழற்றிய மூக்குத்தியை அவர் கையில் கொடுத்துக்கொண்டிருந்தாள் அவள். அவர் அதை வாங்கிக் கொண்டு போனுர். உள்ளங்காலில் தொடங்கி உச்சந்தலைவரை எழுந்தன உணர்வலைகள். நான் கொட்டிக் குவித்திருந்த பணம் எட்டாத தொலைவிலிருப்பது என் நினைவில் பட்டது. நெஞ்சு நெகிழ்ந்தது—பின் மகிழ்ந்தது—தொடர்ந்து நினைவற்றுப்போனது.

மறுபடியும் கண்விழித்தபோது கஞ்சிக்கலயத்துடன் என் எதிரே நின்றுகொண்டிருந்தாள் அவள்; அவரைக் காணும்.

"வெகு நேரம் தூங்கிவிட்டேனே?" கேட்டேன்.

"நேரமா...? இரண்டு நாட்களாகக் கண்ணையே திறக்க வில்லையே!"

லேசாக ஒன்றையொன்று விட்டுப் பிரிந்தன அவளுடைய இதழ்கள்; ஒளி என் பார்வையைப் பறித்தெடுத்தது. அவள் முகத்தில் படிந்திருந்த என் பார்வையை முழு உருவத்திலும் படரவிட்டேன். கைபிடித்து அழைத்துச்செல்ல இருப்பாளா? அல்லது கையெடுத்துக் கும்பிடவேண்டியவளா? எதையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியாமல் என் மனம் திகைத்தது. திரைபோட்டு விழிகளை மறைத்த கண்ணீர்த்துளிகள் என் இமைபட்டு கன்னத்தில் வழிந்தன. கிழிந்திருந்த தன் சேலையின் முந்தானையால் அதைத் துடைத்துவிட்டாள் அவள்.

அதற்குப் பிறகு நான் விடைபெற்றுத் திரும்பும்வரை அவள் என் பார்வையில் படவே இல்லை. உள்ளே இருக்கிருள் என்பதை மட்டும் உணருவேன்; உடனே தோன்றுவாள் என்று காத்துக் காத்து என் மனம் களைத்துத்தான் போகும்!

படப்பிடிப்புத் தொடங்கிவிட்டதால் எப்போதாவது இருட்டிய பிறகுதான் அந்தக் குடிசைக்குப் போவேன். அந்த சமயங்களில் என் மனதைத் திறந்து கொட்டும்போது அந்தக் கிழவர் கூறும் பதில்கள்......

"கல்யாணக்கவலையே இல்லைபோலிருக்கிறது உங்களுக்கு?"

"இல்லையா...! கஞ்சி – கடன் – கவலை-கலியாணம்-கடவுள் விட்ட வழி–காய்ச்சல்! ஏழைகளின் அகராதி, 'க'ுவில் ஆரம்பிக்கும் இந்தச் சொற்களோடு முடிந்துவிடுகிறது, தம்பி!"

எனக்கு என்னவோ போலிருக்கும் இந்தச் சொற்களில், பாதி கூட நாங்கள் பிடிக்கும் 'வறுமையின் கொடுமை'யில் காணப்பட வில்லையே! ஏழ்மையை எல்லோரும் பார்க்கும்படியாக அதற்கு மெருகும் மினுமினுப்புமல்லவா உண்டாக்கிக்கொண்டிருந்தோம்!

"இப்படியே தள்ளிப் போட்டுக்கொண்டிருந்தால்..."

"அதற்கு வேளை வர வேண்டாமா, தம்பி. ஜாதி, ஜாதகம் இரண்டும் வேறு ஒத்துப்போக வேண்டும்"

அதற்குமேல் பேச என்னால் எப்படி முடியும்? உரையாடலைத் துண்டித்துக் கொள்ளுவது என்னவோ முடியாத காரியமாக எனக்குத் தோன்றும்.

"வறுமையின் கொடுமை" என்று படம் பிடிக்கிறார்களே, உங்களுக்குத் தெரியுமா?"

அவர் சிரித்தார்; நான் சிதைந்தேன்.

"ஆமாம். வறுமை எங்களையெல்லாம் வாட்டி வதைக்கிறது; அவர்களுக்கு வருமானத்தை உண்டாக்குகிறது"

ஒன்றுபடுத்த முடியாமல் உடைந்து சிதறிப்போன என் உள்ளத்துக்காக உருகுவதைத் தவிர வேறு வழியே இல்லை. இருண்ட அடுப்பங்கரையில் விளக்காக இருக்கும் அவளை நினைத்து, என்னைச் சமாதானம் செய்துகொள்ளுவேன். எப்படியாவது அந்தத் தங்கக்கட்டியை என் இரும்புப் பெட்டியில் எடுத்து வைத்துவிட வேண்டும் என்ற எண்ணம், பூத்துக் காய்த்துப் பழுத்துப் பறிக்கப்பட வேண்டிய நிலையை அடைந்தது!

படம் முக்கால்வாசி முடிந்துவிட்டது. எடுத்த வரை பலருக்குப் போட்டுக் காண்பித்தார்கள். சிலர் பரவசமடைந்தார்கள் லாபத்தை எண்ணி; பலர் பரிதாபப்பட்டார்கள் ஏழையை நினைத்து! நான் நடித்த படங்களிலெல்லாம் தலைசிறந்தது இதுவாகத்தானிருக்கும் என்று எல்லோருமே சொன்னார்கள்.

"ஏழையாகவே மாறிவிட்டீர்களே, வாசு" என்று எத்தனையோ தடவைகள் லீலா என்னைப் பார்த்துக் கேட்டுவிட்டாள். பத்திரிகைகளின் பக்கங்கள் விளம்பரத்துக்காகக் குத்தகைக்கு எடுக்கப்பட்டன. வறுமையின் கொடுமையை வசீகரமான வர்ணங்களில் விளம்பரப்படுத்தி விட்டார்கள் ஓவியர்கள். பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் தயாரான அந்த "வறுமையின் கொடுமை'யை எதிர்பார்த்து எத்தனையோ ரசிகர்கள் காத்துக் கிடந்தனர்!

ஆனால் இத்தனைக்கும் காரணமான அவள்...? அந்த 'ஈசன்' விட்டவழியில் இயங்கிக்கொண்டிருந்தாள். நிர்மலமான வானத்துக்குமேல் எங்கோ இருந்த அந்த ஏழை பங்காளனும் நீரைப் பொழியாமல் அவளுடைய வாழ்வை நிர்மூலமாக்கிக் கொண்டிருந்தான். நானும் அவளைப்பற்றி நினைத்தே நேரத்தைக் கழித்தேன். வெறும் கற்பனைகளையே கற்களாகக் குவித்தால் கட்டிடங்களும் கனவுகளாகத்தானே உருவாகும்! எப்படியாவது அவளை என் மனைவியாக்கிக் கொள்ளுவது என்ற முடிவுக்கே வந்துவிட்டேன். அப்போதுதான் எட்டியவரை கால்வைக்கும் எனக்கும் ஒரு எல்லை குறிக்கப்படும்.

அந்தக் குறிக்கோளோடுதான் அன்று அவர்கள் வீட்டுக்குப் போனேன். கடலில் கும்மாளம் போடும் அலைகள் கரையோடு கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்தன. இடையே புதராக வளர்ந்திருந்த புற்களின்மேல் களி நடனம் புரிந்துகொண்டிருந்தது காற்று. வெளிச்சம் இருளோடு ஒன்றுகலக்க வேகமாக விரைந்து கொண்டிருந்தது. விளிம்பில் தோன்றி உச்சிக்கு ஊர்ந்த வெண்ணிலா என் இதயம் முழுதும் வெளிச்சம் போட்டது.

அந்தக் குடிசைகளின் அருகே நெருங்கும்போது...தொடர்ந்து நடக்கமுடியாமல் செய்த சொற்கள் என் செவிகளில் விழுந்தன. குரலை அடக்கி யாரோ இருவர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அந்தக் குட்டியை சந்தி சிரிக்க வைக்கணும், தம்பி"

"ஆமாம், அண்ணேன். குனிஞ்சதலை நிமிராத அந்தக் குமரி இப்ப கொஞ்சில்ல குலாவுரு! என்னைப் பார்த்து 'தூ'ன்னு துப்பிட்டு எவனோ ஊரு பேரு தெரியாத பயலோடெ..."

எழுதக் கூசுகிற சொல்லால் கோடிட்ட இடத்தை நிரப்பினான் அந்த மனிதன். ஒரு குட்டிச்சுவருக்கு அப்பால் கீழே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அருகிலிருந்த மரத்தோடு நான் ஒட்டிக்கொண்டேன்.

"அப்படி எதுவும்னு நம்ப தெருவுக்குள்ளேயே வச்சுக்க வேணும். வெளித் தெருக்காரப் பயல் இங்கே வந்து இதெல்லாம் பண்றது நமக்குல்ல அவமானம்? ஊரே சிரிக்காது?"

"ஊருக்கே நியாயம்பேசற அந்தக் கிழவன்கூடவா இதுக்கெல்லாம் எடங் குடுக்குறுன்?"

"ஏதோ வருமானம் கிடைச்சிருக்கும். பார்த்தும் பார்க்காதது போல ஜாடையா அப்படி..."

"குட்டி என்னமோ ஷோக்காத்தான் இருக்கா, அண்ணேன். எனக்குங்கூடத்தான்..."

என் நெஞ்சு நெருப்புப்பற்றி எரியத் தொடங்கியது. புடைத்துக்கொண்ட நரம்புகளுக்குக் கீழே குருதி கொதித்துக் கொப்பளித்தது. வெறியாட்டம் போட்டுக்கொண்டிருந்த கடலலைகளும் தன் வலிவாலே புற்களைச் சாய்த்துத் தாழ்த்திய காற்றும் என்னைச் சுற்றி கோரநர்த்தனம் புரிந்தன. உடனே திரும்பி என் வீட்டை நோக்கி நடந்தேன்.

என்னைக் கொத்திக் கூறு போட்டுக்கொண்டிருந்தது அந்த இரவு. தெளிவைத் தேடிய என்மனம் தீய்ந்ததே தவிர தெளிவடையவில்லை. சூடேறிய பாத்திரத்தில் போடப்பட்ட என்னைப் போல என் நினைவுகள் வெடித்துச் சிதறிக்கொண்டிருந்தன. பார்வைக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பு விட்டுப்போனதுபோல இரண்டும் வெவ்வேறு திசைகளில் இயங்கிக்கொண்டிருந்தன. ஓலமிடுகிற—ஊளையிடுகிற உயிரினங்களைத் தவிர மற்றவை அத்தனையும் அரவமற்றுக் கிடந்தன. கலங்கிப்போன குளத்து நீரைப்போலக் காணப்பட்டது வானம். அள்ளித் தூவப்பட்ட ஒளிப் புள்ளிகளினிடையே தன் உருவைக் காட்டியது வெள்ளி நிலா. செத்துப்போன உலகத்துக்குப் பால் தெளிப்பதைப்போல அது படரவிட்ட ஒளிக் கதிர்கள்...

நிமிர்த்திய பார்வையை அங்கேயே நிலைத்து நிறுத்தி வைக்க என்னால் இயலவில்லை; தன்னாலே தாழ்ந்தது. எழுந்துயர வகையில்லாமல் நிலத்திலேயே சுருண்டு கிடக்கும் அந்தக் கொடிகள்... எட்டிப்—பிடிக்க சுற்றி வளைக்க—கட்டித் தழுவ எதுவுமே கிடைக்காவிட்டால் எல்லாமே இப்படித்தான் ஆகின்றன என்று நினைத்தபோது எனக்கு என்னவோ போலிருந்தது. புழுதியிலேயே பூத்துக் காய்த்துக் கருகிப்போகும் அந்தத் தாவர இனத்துக்கு

மட்டும் இது ஏன் புரியவில்லை? அடர்ந்து மண்டிக்கிடக்கும் அந்தக் கொடிகளுக்கு மத்தியில் அடைக்கலம் புகுந்திருக்கும் விஷ ஜந்துக்கள்...

வேதனை தாங்காமல் வெள்ளியெழும் வரை வெந்துகொண்டிருந்தேன். காலையும் இடை வேளையும் கழிந்துவிட்டன. இனி எதையும் ஒத்திப்போட நான் தயாராக இல்லை அவளையே கேட்டுவிட்டால்...?

மாலை பாதிதான் தொடுக்கப்பட்டிருந்தது. கடுமையைக் குறைத்துக்கொண்டு வெண்ணிறத்தை மஞ்சள் நிறத்துக்கு மாற்றிக் கொண்டான் கதிரவன். என் எண்ணங்கள் கயிறாகி இதயத்தை மத்தாக்கிக் கடையத் தொடங்கின. விட்டுப் பிடிக்கும்போது சுற்றி வளைத்துவிட்டு, பிடித்திழுக்கும்போது பேசாமல் திரும்பிவிடும் அந்தக் கயிறுகள்...

வானம் சிவந்தது. உலைக்களத்தில் உருக்கப்படும் இரும்புத் துண்டைப்போல ஒளிவிட்டான் கதிரவன். அவள் வீட்டை நோக்கி நடந்தேன்.

தட்டினேன்—கதவு திறந்தது—அழகு வெளியே எட்டிப் பார்த்தது!

"அப்பா இல்லை. சிறிது நேரம் கழித்து வாருங்கள்"

"இல்லை, உன்னிடம்தான் பேசவேண்டும்"

"என்னிடமா? இப்போதா...?"

மிரட்சி மின்னிற்று அவள் விழிகளில் மெல்லப் பின்னால் நகர்ந்தாள்; நானும் உள்ளே நுழைந்தேன். எப்படித் தொடங்குவது என்பது புரியவில்லை எனக்கு.

"சீக்கிரம் சொல்லுங்கள்; எனக்கு வேலை இருக்கிறது"

"வெகு நாட்களாகவே உன்னிடம் சொல்லவேண்டும் என்று நினைத்துக்கொண்டே இருக்கிறேன்..."

"இப்போதுதான் அதைச் சொல்லி விடுங்களேன்!"

எனக்குந்தான் ஆத்திரம் இருந்தது ; ஆனால் அவளைப்போல அவசரப்படவில்லை !

''நானே உன்னை என் மனைவியாக...''

அவள் உரத்துச் சிரித்தாள் ; ஒளிகள் உருண்டு ஓடின !

''தங்கை அண்ணனையா கல்யாணம் பண்ணிக்கொள்ளு வாள் ? நாமென்ன 'மாமன் மச்சான்' கூட்டமா ?''

ஆழந் தெரியாமல் குதித்துவிட்டதால் அடித்தளத்துக்கே போய்விட்டதை அப்போதுதான் உணர்ந்தேன். நீந்திப் பழக்க மில்லாததால் நிலை தடுமாறிக்கொண்டிருந்தேன்.

அந்த வீடு என் சொந்த வீடுபோலத் தோன்றியது எனக்கு. ஏதோ ஒருவித புதுமையை அவளிடம் அதுவரையில் எதிர்பார்த்த என் உள்ளம் புரிந்துகொண்டு ஆவலைத் தணித்துக்கொண்டது. விழிகளுக்கு இருந்த கூச்சம் விடைபெற்றுச் சென்றது. காதல், அன்பு என்ற நிலைக்கு மாறியபோது 'அந்தத் தங்கை' என் சொந் தத் தங்கையாகவே ஆகிவிட்டாள்.

''எத்தனை நாளாக இந்த நாடகம்?''

குரல் வெளியே இருந்து வந்தது. ஏழெட்டு பேர் வெளியே நின்றனர். நீண்ட தடிக்கம்புகள் சகிதமாக நின்ற அவர்களுடைய கண்களில் வெறுப்பும் பொறுமையும் கலந்து காணப்பட்டன.

''பத்தினித் தங்கம்...பகல் நேரத்திலே!'' ஒருவன்.

''வாட்டச்சாட்டமா ஆள் கிடைச்சா கற்புக்கரசிகூடக் கண் ணடிக்க ஆரம்பிப்பாள்''-இன்னொருவன்.

உள்ளே நுழைந்து எதுவும் செய்துவிடுவார்களோ என்ற பயத்தால், வாயிலை மறைத்துக்கொண்டு நின்றேன். ஒரு கல் என் உச்சந்தலையை உரசிச் சென்றது.

''வெளியே வாடி தடிச்சிறுக்கி. உன்னை வெட்டித் தீர்த்துடு றேன்''-வேறொருவன்.

''இரண்டு பேரையும் செங்கக் காளவாயிலே வச்சு வேக வைக்கணும்''-எவனோ ஒருவன்.

ஆத்திரமும் அவமானமும் என்னைப் பிடுங்கித்தின்றன. நானோ தனி மனிதன்...ஆனால் நான் ஒரு ஆண்! சூழ்நிலை தெரியாமல் சிக்கிக்கொண்டால் என்ன ஆவது என்ற அச்சமும் என்னை அடுத்து நின்றது.

என்னை இழுத்து உள்ளே தள்ளிவிட்டு, அவள் வெளியே வந்தாள். அத்தனை வாய்களும் அடைபட்டுப் போய்விட்டன. தாங்காத வேதனையால் தடுமாறிக்கொண்டே அவளருகில் வந்து நின்றேன்.

''என் இஷ்டம்; நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன்; நீங்கள் யார் கேட்பதற்கு?''

குரல் குமுறியது—விழிகள் கண்ணீர்விட்டன—உடல் தடுமாறியது. ஆனாலும் துணிவைத் தளர்த்திக்கொள்ளாமல்தான் அவள் நின்றாள்.

''சரி, உனக்கு இவ்வளவு திமிரா? ராத்திரி பஞ்சாயத்திலே பார்த்துக்கலாம்; வாங்கடா போவோம்.''

அந்தக் கூட்டம் கலைந்து போனது, என் பக்கம் திரும்பினாள்.

''உடனே போய்விடுங்கள். நீங்கள் இங்கே இருந்தால் வம்பு அதிகமாகும்.''

''உன்னைத் தனியாக விட்டு விட்டா.....?''

''உங்களுக்கு கோடி புண்ணியம்; கும்பிடுகிறேன்; போய் விடுங்கள்.

வெளியே வந்தேன்; கதவு மூடியது; உள்ளிருந்து பொருமி யழும் குரல் கேட்டது. என் நினைவுகளே கணைகளாகி நெஞ்சைத் துளைத்தன. தள்ளாடி நடந்தேன்: ''நடிகர் வாசு, டோய்'' எவனோ ஒருவன் கத்தினான். அதற்குப் பிறகு வீட்டையடைந்து தான் திரும்பிப் பார்த்தேன்.

மறுநாள் முழுதும் நான் மரண வேதனையை அனுபவித்தேன். அடுத்த நாள் காலையில் பத்திரிக்கையில் வந்த செய்தி! ''அவமானத்துக்கு அஞ்சி பருவப்பெண் தற்கொலை'' என்ற கொட்டைஎழுத்

துக்கள் என்னைக் கிட்ட அழைத்தன. அதே வட்டாரம்—அதே குடிசை—அவளேதான்......! அலறியே விட்டேன்!

சில நாட்கள் கழிந்தபிறகு இன்னொரு செய்தி வெளியிடப் பட்டது தினத்தாட்களில். என்னுடைய எல்லா சொத்துக்களையும் ஏழைகளின் உதவிக்கு எழுதி வைத்துவிட்டு, நான் பொதுவாழ்வில் புகுந்துவிட்டேன் என்பதை என் ரசிகர்களுக்குத் தெரிவித்திருந் தார்கள் செய்தித்தாள் நிருபர்கள்!

படவுலகம் பழுதுபட்டுவிட்டதே என்று பரிதாபப்பட்டார்கள் அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள்; கலையுலகிற்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கணக்கிட்டனர் ரசிகர்கள்; நான் நடித்த 'வறுமை யின் கொடுமை' என்னையே திருத்திவிட்டது என்று எழுதினர் விமர்சகர்கள்!

விசாரித்துவிட்டுப் போகிறவர்களில் ஒருத்தியாக, லீலா வந்தாள். அனுதாபந் தெரிவிக்கும் வகையில் என்னோடு பேசினாள்.

''கலைஞன் தன் கலை மூலமாகவே சமூகசேவை செய்யலாம், வாசு. கலைஞர்கள் அரசியலில் ஈடுபடுவது இரண்டு துறைகளுக் கும் ஏற்படும் நஷ்டம்.''

எண்ணெய் குறைந்த விளக்குகளைப்போல ஒளிவிட்ட அவள் விழிகளைப் பார்த்தேன். அவைகளின் இடையே ஒருமுழக் கயிற் றில் தொங்கிக்கொண்டிருந்த உடல் மட்டுந்தான் தெரிந்தது எனக்கு.

''ஆமாம். கல்லைக் கடவுள் என்று சொல்லும் பூசாரிகளைப் போலத்தான், நீங்களும் உங்கள் பிழைப்பைக் கலை என்று சொல்லி ஏமாற்றுகிறீர்கள். வசூலுக்காகச் செய்யப்படும் எதுவும் சமுதாயத்தின் வரட்டத்தைப் போக்கிவிடாது!''

அவள் என்னை முறைத்துப் பார்த்தாள்; நான் எங்கோ வெறித்துப் பார்த்தேன்!

# கடவுளால் ஆகாதது!

மணி அடித்தது. கூச்சலும் குழப்பமும் ஒருவாறு அடங்கி அமைதி நிலவ ஆரம்பித்தது. ஆசிரியர் உள்ளே நுழைந்தார். கதாநாயகனை எதிர்பார்த்து கதாநாயகி "எப்போ வருவாரோ?" எனக் காத்திருப்பதுபோல யாருடைய வரவுக்காகவோ எல்லோரும் காத்திருந்தனர். கட்டுப்புத்தகங்களை மார்போடு கட்டி அணைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள் அந்தப் பெண்கள். இடத்தில் போய் உட்காரும் வரையில் பார்வையை துணைக்கனுப்பி உட்கார்ந்தவுடன் இழுத்துக்கொண்டனர் அத்தனை ஆடவர்களும், பாடம் ஆரம்பித்தது.

நான் அன்றுதான் புதிதாக அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தேன். நான் படித்த பள்ளிக்கூடங்களெல்லாம் ரயில் வண்டி, சினிமாக்கொட்டகை, பிரசவ ஆஸ்பத்திரி மாதிரி பெண்களுக்கு பள்ளிக்கூடங்களும் தனியாகவே இருக்கவேண்டும் என்ற திட்டமான கொள்கையைக் கொண்டவை. எதிர்பாராத விதமாக உள்ளே நுழைந்து வரிசையாக அமர்ந்திருந்த அந்த "கொலுப் பொம்மைகள்" என் மனதில் இன்பத்துடிப்பை உண்டாக்கின. ஆசை அடிக்கடி என் கண்களை அந்தப் பக்கம் திருப்பியது. வெட்கம் அதைக் கொஞ்சம் மட்டுப்படுத்தியது; பயம் அறவே வேண்டாம் எனத்தடுத்தது. அறிமுகமே ஆகாத அந்த மாணவர்கள் மத்தியில் இந்த மூன்றுவித உணர்ச்சிகளோடு உறவாடிக்கொண்டிருந்தேன்,

தமிழ்ப்பாடம் நடத்திக்கொண்டிருந்தார் ஆசிரியர். கேலிகள் விளையாட்டுகள், இடையிடையே ஆசிரியரின் அதட்டல்கள், எங்கேயும் வழக்கமாக நடப்பது போலத்தான் நடந்தது.

"கற்பென்பது மாதர்க்கணிகலம்" என்று ஆசிரியர் படித்தார்,

"அப்படியென்றால் என்ன அர்த்தம்?" என்று ஒரு மாணவன் எழுந்து கேட்டான்.

"கற்பு என்பது மாதர்க்கு ஒரு சிறந்த ஆபரணம் போன்றது" என்று விளக்க உரை கொடுத்துவிட்டு பாடத்தைத் தொடர்ந்து நடத்த ஆரம்பித்தார் ஆசிரியர். முதலில் கேட்டவன் எழுந்து நின்ருன். அவன் கண்களில் குறும்பு நிறைந்திருந்தது. புத்தகத்தி லிருந்த பார்வையை அவன்மேல் செலுத்திஞர் ஆசிரியர்.

"எல்லாப் பெண்களுக்குமா?" என்ருன். அத்தனை பையன்களும் அந்தப் பக்கம் பார்த்து சிரித்தார்கள். மற்ற பெண் கள் அவளை கர்வமாகப் பார்த்து புன்னகை புரிந்தனர். அவள் தலை குனிந்திருந்தது, இதயத்தில் வரப்பு கட்டி, வேலி போட்டு அடக்கி வைத்திருந்த வேதனை கட்டுகளையும் மீறி கண்ணீராக வெளிப்பட்டு விரித்து வைக்கப்பட்டிருந்த புத்தகத்தில் விழுந்தது.

"உன் கண்ணில் நீர் வழிந்தால், என் நெஞ்சில் உதிரங் கொட்டுதடி" என்ற பாடலின் அடிகள் என் முன்னே உரு வெடுத்து நின்றன.

என் மனம் பாடத்தில் செல்லவில்லை. அவளையே சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தது. முத்துப்பல், மோகனமான முகம், பச் சைப்பட்டுச்சேலை, பளபளப்பான உடல், பார்த்து ரசிக்கக்கூடிய உருவம்! அவள் உதடுகளில் ஒரு புன்னகை மட்டும் பூத்திருந் தால் எவ்வளவு நன்ருக இருக்கும்? ஏதேதோ சிரித்துக்கொண் டிருந்தேன். சிரிப்பும் கூச்சலும் என்னைச்சுற்றி குடியேற ஆரம் பித்தவுடன்தான் வகுப்பு முடிந்துவிட்டது எனத் தெரிந்துகொண் டேன். அந்த இடத்தைப்பார்த்தேன். "கண்காட்சி சாலை" காலி யாக இருந்தது.

எழுந்து வெளியே வந்தேன். மாணவிகள் போய்க்கொண் டிருந்தார்கள். அவர்களோடு அவள் இல்லை. சுற்றிலும் திரும்பிப் பார்த்தேன். அப்போதுதான் ஆசிரியர்கள் அறையிலிருந்து வந்து கொண்டிருந்தாள் அவள். குனிந்த தலையும், கலங்கிய கண்களும் என்னை ஏதேதோ செய்தன. நான் நிற்கும் பக்கமாகத்தான் அவள் வரவேண்டும், கலக்கம் நிறைந்த மனதிற்கு ஆறுதலான வார்த்தைகள் நல்ல மருந்தாக உதவும் என்று எனக்குத் தெரியும்.

என்னை நெருங்க நெருங்க என் மனதிலே இருந்த இரக்கம் ''பேசு'' எனக் கேட்டுக்கொண்டது. ''வேண்டாம்'' எனக் கட்டளையிட்டது மனம். ''பேசினால் என்ன?'' என்று எதிர்த்துக்கேட்டது அறிவு. ''நாலுபேர் கேலி செய்வார்கள்.'' என்று பதில் சொன்னது பயம். இதற்குள் அவள் என்னைத் தாண்டிப்போய் விட்டாள்.

ஏதோ சாப்பிட்டுவிட்டு எழுந்து பள்ளிக்கூடத்திற்கு ஓடோடி வந்தேன். எவரும் வரவில்லை. இடத்திலேயே உட்கார விடாமல் மனந்துடித்துக்கொண்டிருந்தது. எழுந்து வெளியே வந்து நின்றேன் சில பையன்கள் வந்துகொண்டிருந்தனர். உலாவப்போகிறவர்கள் போல மெள்ள மெள்ள நடந்துவந்தனர். அவர்கள் பின்னால் பரிகாசம் செய்தவனும் இன்னும் இரண்டு பேரும் பேசிக்கொண்டு வந்தனர். சிரிப்புங் கூத்துமாய் அவர்கள் வந்தது எனக்குப் பிடிக்கவேயில்லை. என்னை யறியாது அவன்மேல் ஒரு வெறுப்பு தோன்றியது. அவனும் எனக்கருகில் வந்துவிட்டான் நான்-என் கண்களை திருப்பிக்கொண்டேன். ''இவர்தான் இன்று புதிசாச் சேர்ந்தவர்'' என்று மற்றவர்களுக்கு என்னை அறிமுகப் படுத்தினன். ''உங்கள் பெயர் என்ன?'' என்று என்னைக் கேட்டான். சொன்னேன்.

அவனே ''என் பெயர் டி. துரைராஜு'' என்று கையெழுத்துப் போடுவதுபோலச் சொல்லித் தன்னை தானகவே அறிமுகப் படுத்திக்கொண்டான். கொஞ்சங்கூட கலக்கமோ கவலையோ அவன் முகத்தில் காணப்படவேயில்லை. சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் மனதைத் தொந்தரவு படுத்திக்கொள்ளும் எனக்கு இது ஒரு ஆச்சரியமாகப்பட்டது. குறும்பு நிறைந்த அவன் கண்கள் என் வெறுப்பை எங்கேயோ விரட்டி ஓட்டின. ''போகலாமா'' என்று என் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டு நடந்தான். நானும் அவனேடு நடந்தேன். எல்லோரும் போய் வகுப்பில் உட்கார்ந்தோம். மணி அடித்தது. மறுபடியும் காலை நிகழ்ச்சிகள். மணி ஒலி, நிம்மதி, ஆசிரியர் நுழைதல், எதிர்பார்த்தல், காட்சி அளித்தல், அவள் மட்டும் வரவில்லை.

மாலையில் என் மாமா ''பள்ளிக்கூடம் எப்படி?'' என்று. கேட்டபோது என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

"பிடிக்கிறதா?" என்று மறுபடியுங் கேட்டார் "மனந்துடிக்கிறது" என்று வாய்வரையில் வந்த வார்த்தைகளை வெட்கமும் பயமும் கயிறுகட்டி உள்ளே இழுத்துக்கொண்டன. ஏதோ சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

அந்த ஊருக்கு நான் வந்து சில நாட்கள்தான் ஆகியிருந்தன கால்கள் போனபடி நடந்துகொண்டிருந்தேன். எதிரே நீலநிற மடித்து தன்னை தனித்துக் காட்டிக்கொண்டிருந்த வீடுகூட எனக்குப் புதிதாகத் தோன்றவில்லை ஆனால் அந்த வீட்டு மொட்டை மாடியில் உட்கார்ந்து ஏதோ யோசித்துக்கொண்டிருந்த அவள் தான் என்னை திடுக்கிடச் செய்தாள். காலையில் கலங்கியிருந்த அந்தக் கண்கள் மாறியிருந்தன. ரயில் வண்டியில் போகும்போது சிறு பிள்ளைகள் ரயில் ஓடுகிறதா, சுற்றிலுமுள்ள மரங்கள் ஓடுகின்றனவா என்று சண்டை போட்டுக்கொள்வதைப் போல எனக்கும் நான் நடக்கிறேனு அல்லது அந்த வீடு என்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறதா என்பது புரியவில்லை. எதிரே மூட்டை தூக்கிக்கொண்டு வந்த கூலியாள் தன்னை மறந்திருந்த என்னைச் சுய நினைவுக்கு வரச்செய்தான்.

தினந்தினம் கட்டாயம் பார்க்கவேண்டியவைகளில் அந்த வீடும் ஒன்றுக ஆனது. சில சமயங்களில் அவள் அங்கேயே இருப்பாள். நான் பார்த்துக்கொண்டே நடப்பேன். எங்கேயும் தன் உருவத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிடாமல் என் முன்னேயே வைத்துக்கொண்டிருப்பாள். சில சமயங்களில் ஏமாற்ற மளிப்பாள். அவளோடு எப்படியாவது பேசவேண்டும் என்ற உறுதியோடு வருவேன். ஆனுல் அந்த வீட்டின்மேல் பூசியுள்ள சாயம்தான் ஒரு தனிரகம் என்று காட்டிக்கொண்டது. என் உறுதியும் இடிந்து மண்ணுகப் போனது.

ஒன்று சொல்ல மறந்துவிட்டேனே! துரைராஜுவும் நானும் இணைபிரியாத் நண்பர்களாக ஆகிவிட்டோம். அவனைப்பற்றி நான் அவனிடம் பேச ஆரம்பித்தால் என்னைப் பரிகாசம் செய்வான். அவளைக் கேவலமாகப் பேசுவான். அந்த வருஷம் நான் பரிட்சையில் தேறவில்லை. ஊர் சுற்றி உருப்படாமல் போய்விட்டேன்

என்று சொல்லி என்னை என் மாமா அப்பாவிடமே திருப்பி அனுப்பி விட்டார். புறப்படும்போது நான் அடைந்த வேதனை, அப்பப்பா! சொல்லவே முடியாது.

காலத்தைச் சக்கரம் என்று சொல்லுவார்கள். அது சக்கர மாக இருக்கமுடியாது. சக்கரத்தால் ஓடத்தான் முடியுமே தவிர பறக்க முடியாது. தேவன் என்பார்கள், தேவன் என்றால் அழிந்து போகாதவன் என்றுதானே அர்த்தம். அழிந்து போகக்கூடியதை எப்படி இதற்கு உவமையாக சொல்லமுடியும்? எதையும் உவமையாகச் சொல்லவேண்டாம். காலம் என்றே அழைப் போம்.

இப்போது நான் ரயில்வேயில் ஒரு குமாஸ்தா. குமாஸ்தாவின் உருவத்தைச் சற்று மனதில் எண்ணிப்பாருங்கள். அலுத்து சலித்துப் போன வாழ்வு; விடாப்பிடியாக வாட்டி வதைக்கும் உலகம். கைகட்டி வாய் பொத்தி கவனிக்கும் வேலை. மாதம் பிறந்த முதல் தேதி அவனுக்கு விழாநாள். இரண்டாந்தேதி இழவு நாள், மீதி தேதிகள் அவனுக்கு நலிவு நாட்கள். ஒருநாள் "வளர் பிறையும்" மற்ற முப்பது நாட்களும் "தேய் பிறையுந்"தான் அவன் வாழ்வில் மாறி மாறி வரும் அத்தியாயங்கள். ஆண்ட வனால் எழுதப்பட்டதாக நம்பப்படும் "தலை எழுத்து!'

ஆறரை மணி வரைக்கும் வேலை செய்துவிட்டு அவசர அவசரமாக வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். அன்று "வாழ் வாவது மாயம்" என்ற பாட்டு காதில் விழுந்தது. குமஸ்தா வர்க்கத் துக்கே அடிக்கடி மனதில் தோன்றி பதிந்துபோன இந்த "உண்மை"யைக் கேட்டு சத்தம் வந்த திக்கை நோக்கினேன். சினிமா கொட்டகை; "கண்ணகி" என்ற விளம்பரப்பலகை தொங்கிக் கொண்டிருந்தது. முன்னாலேயே ஓடிக்கொண்டிருந்த குதிரை சண்டித்தனம் செய்து வந்த பக்கமே திரும்பி ஓடுவது போலானது என் மனமும். கலங்கிய முகம் ஒன்று என் முன்னே தோன்றியது. பைக்குள் கை நுழைந்தது. இருந்த சில்லறைகளை எல்லாம் வெளியில் எடுத்தேன். ஒரு நாலணா, இரண்டு ஓரணாக்கள், மூன்று அரையணாக்கள், இரண்டு காலணாக்கள். கட்டிக் வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தேன்.

கண்கள் திரையில் இருந்தன. நினைவு எங்கேயோ இருந்தது நான் கொடுத்த காசு வீணாகிக்கொண்டிருந்தது.

' அவள் என்ன ஆனாள் ?'' என்று கேட்டது என் மனம்.

''என்ன ஆகியிருப்பாள்? தொழில் நடத்திக்கொண்டிருப் பாள்'' என்று அதுவே சமாதானம் சொன்னது.

''அவளுக்கு உடலைப் பெற்றோர் கொடுத்தார்கள். உயிரைக் ''கடவுள்'' கொடுத்தார். ஆனால் நல் வாழ்வை...? இருவராலும் கொடுக்க முடியவில்லையே! ஏன்?'' என்று கேட்டுக்கொண்டேன்.

''அவளுக்கா இழிந்த வாழ்வு? கடவுளைத் தூக்கவேண்டு மானால் அன்னக் காவடிகளுக்கு காசு கொடுத்து அழைக்க வேண்டும். அவளைத் தூக்க எத்தனை சீமான்கள் அவள் விட்டு வாயிலில் காத்திருக்கிறார்கள் தெரியுமா?'' என்று என்னையே கேலிசெய்தது என் ''குமாஸ்தா'' மனப்பான்மை விளக்குகள் எரிய ஆரம்பித்ததும் இருட்டிலேயே இருந்த என் கண்கள் கூச ஆரம் பித்தன. கசக்கிக்கொண்டு சுற்றிலும் பார்த்தேன். எல்லோரும் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். நான் மட்டுந் தனியாக, பேச யாருமில்லாமல் கவலைப்பட்டுக்கொண் டிருந்தேன். ''சோடா, சோடா'' என்று ஒருவன் விற்றுக்கொண்டு போனான். பைக்குள் என்னை மறந்து கைவிட்டேன். இரண்டு காலணாக் களும் இதோ இருக்கிறோம் என்று அகப்பட்டன. பேசாமல் கையை வெளியிலெடுத்துக் கொண்டேன். பின்னாலிருந்து யாரோ என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தேன். முதலில் அடையாளம் தெரியவில்லை. மறுபடியும் கூர்ந்து கவனித் தேன். அவன்தான் துரைராஜு! தன் பக்கத்தில் வந்து உட்காரும் படி என்னை அழைத்தான். அவனருகில் உட்கார்ந்ததும் எனக்கு அப்போதைய நிலையே மறந்துவிட்டது. பக்கத்திலிருந்த துரை ராஜு, திரையில் ஓடிய ''கண்ணகி'', அப்போதுதான் உண்டாகிய தொல்லை கொடுத்த அவள் நினைவு, சிறுவயது நினைவுகள் என்னைத் தம் வசமாக்கிக்கொண்டன. மரத்துப்போயிருந்த என் மனம் உணர்ச்சி பெற்று ஓடி ஆடி விளையாடத் தொடங்கியது.

''எங்கே இருக்கே'' என்றான்.

"இங்கேதான்" என்று நான் உட்கார்ந்திருந்த இடத்தைக் காட்டினேன்.

"என்ன வேலையிலே?" என்று என் பரிகாசத்தை ரசித்து சிரித்துக்கொண்டே மறுபடியும் கேட்டான்.

"ரயில்வே குமாஸ்தாவாக" என்று பரிதாபமாக அடங்கி ஒடுங்கி பதில் சொன்னேன். "ரயில்லேயா ரயில்லேயா?" என்று அவன் கேட்டபோது ஏதோ "முதல் மந்திரியா" என்று கேட்பது போல இருந்தது.

நானும் அவனைப் பற்றி விசாரித்தேன். இரண்டு பேரும் பேசிக் கொண்டே இருந்தோம். படம் ஓடிக்கொண்டே போனது, பக்கத்தில் ஒருவர் "ஷ்" என்று படமெடுத்தார். சற்று நேரம் மௌனமாக படம் பார்த்தோம். மறுபடியும் ஏதோ பேச்சு. "கொஞ்சம் மெள்ள பேசுங்கோ சார்" என்று எங்களைக் கேட்டுக் கொண்டார். மௌனம் திரும்பவும் ஆரம்பித்து விட்டோம். அவரும் பேசாமல் எழுந்து எங்கேயோ போய் உட்கார்ந்து விட்டார்.

படம் முடிந்ததும் எழுந்து வெளியே நடந்தோம். "இன்பக் கதைகளெல்லாம் உன்னைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ?' என்று பாரதியார் சிறு குழந்தையைப் பார்த்துக் கேட்டார். நான் சென்று போன நாட்களைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டேன். பேசிக்கொண்டே வந்த துரைராஜு திடீரென்று நின்றான்.

"இதுதான் என் வீடு" என்று தன் வீட்டைக் காட்டினான்.

"அப்ப நான் வரவா?" என்று உத்தரவு கேட்டேன்.

"கொஞ்சம் உள்ளேவந்து போயேன்" என்று அழைத்தான். நானும் ஒத்துக்கொண்டு உள்ளே போனேன். என்னை உட்காரச் சொல்லிவிட்டு அவன் எதற்கோ உள்ளே போனான். வீடு முழுதும் ஒருமுறை கண்ணோட்டம் செலுத்தினேன். அந்தப் போட்டோ என்னை சினிமாக் கொட்டகைக்குள் வாட்டி வதைத்தவள்; அதே கண்கள்! ஆனால் கலங்கியிருக்கவில்லை, கவர்ச்சி அளித்தன. எழுந்து சென்று அருகில் நின்று கூர்ந்து கவனித்தேன்.

“என்ன பார்க்குறே?” என்று துரைராஜு கேட்டுக் கொண்டே என்னருகே வந்தான்.

“இவள்......” என் வாய் குழறிற்று.

“என் மனைவி” என்று சாதாரணமாக பதில் சொன்னான். ஒரே வினாடியில். புயல், கொந்தளிப்பு, எதிரே நெருங்கியிருக்கும் ஒரு பெரிய பாறை இவற்றிடையே சிக்கிய கப்பல் போலானது என் மனமும்.

“நீயா இவளை கல்யாணஞ் செய்துகிட்டே?” என்று ஆச்சரி த்தோடு கேட்டேன். அவன் கையை நீட்டி எதையோ காட்டினான். திரும்பிப் பார்த்தேன். ராமசாமி நாய்க்கர் படம்! “*ராமசாமி நாய்க்கரா?*” என்று ஒன்றும் புரியாமல் தட்டுத்தடுமாறிக் கேட்டேன்.

“*பெரியார் என்று சொல்லு*” என்று என்னைத் திருத்தினான். நான் ஒன்றும் பேசாமல் அவனையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

“அவரால்தான் அவள் வாழ்வு பெற்றாள். நான் மட்டும் சுயமரியாதைக்காரனாக மாறாவிட்டால் அவள் பொதுச் சொத்தாக ஆகியிருப்பாள்’! என்றான்.

திரும்பி அந்தப் படத்தைப் பார்த்தேன். கண் சிமிட்டாமல் அவர் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். எத்தனையோ நாட்களாக என் இதயத்திலே இருந்து எரிந்து புகைந்து கருகிப் போன அந்தச் சாம்பலை ஊதித் தள்ளினேன்.

“வணக்கம், வாருங்கள்” என்ற குரல் கேட்டது. திரும்பினேன், அவளேதான்! அதே அழகு, அதே உருவம் ஆனால் வளர்ச்சியில்தான் மாறுதல்! கையில் காப்பி நிறைந்த டம்ளர், முகத்தில் போட்டோவில் இருந்த கவர்ச்சி! “*பெரியார்*” என்று என்வாய் முணுமுணுத்தது. மனம் உண்மைதான் என ஒத்துக் கொண்டது. என் இரு கைகளும் ஒன்று சேர்ந்து குவிந்தன. அவளைப் பார்த்து அல்ல, “அந்தக் கிழவர்” படத்தை நோக்கி!

---

# ஐயோ அம்மா!

''யாருடா அவன், வாயில்லா ஜீவன்கள் குடிக்கிற தண்ணியை எச்சி பண்றது?''

என்ற முரட்டுக்குரல் ஒன்று கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். ஓங்கி ஒரு அறை ''பளார்'' என்ற சத்தம். அதைத் தொடர்ந்து ''ஐயோ அம்மா'' என்ற அவலக் குரல்! விறைக்க விறைக்கத் தண்ணீர் குடித்துக்கொண்டிருந்த இரண்டு மாடுகளும் நிமிர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் குடிக்க ஆரம்பித்தன. கன்னத்தைத் தடவிக்கொண்டே நின்ற இவனுடைய கைகளை அவள் மெல்லப் பற்றினுள். பரிவாக அடிபட்ட அந்தக் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள். இரண்டு துளி கண்ணீர் அந்தக் கையை நனைத்தன.

''அழுவாதே. அவனுங்களே அப்படித்தான். மொரட்டுப் பசங்க'' என்று அன்போடு சொன்னுள்.

அவர்கள் இருவரும் எப்படியோ அறிமுகமானவர்கள். இவன் அழைத்து வரவேண்டியது. கூட்டு வியாபாரம்! அதுகூட அந்த இரண்டு நாட்களாக மந்தம். வீடு வீடாக நின்று தங்கள் குறைகளை முறையிட்டார்கள். வீதி வீதியாக நின்று கெஞ்சிப் பார்த்தார்கள் நெஞ்சிலே இரக்கமுள்ள புண்ணியவான்களில் எவரும் கண்ணில்படவே இல்லை. அலுத்து சலித்து அயர்ந்து தண்ணீரையாவது இரண்டு வாய் குடிக்கலாம் என்று வந்தபோதுதான் அந்த அறையும் அவதியும்!

வெகுநேரம் கையை நீட்டி கெஞ்சிக்கொண்டே நின்ருர்கள். எத்தனையோ பேர் காப்பி சாப்பிட்டுவிட்டு திரும்பிக்கொண்டிருந்தார்கள். ஒருவருக்காவது ஒரு காலணு கொடுத்தால் கடவுள் காப்பாற்றுவார் என்பதில் நம்பிக்கையே இல்லை. விதம் விதமான நிறங்களில் வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருந்த அந்த தின்பண்டங்கள் இவர்கள் இருவரையும் பார்த்து புன்னகை புரிந்தன. கலாரசிகர்கள் யாராவது அவைகளைப் பார்த்திருந்தால் ''கடைக்

காரர் தருங் காட்சி'' என்று கட்டுரை எழுதியிருப்பார்கள். இவர்கள் இருவரும் படிக்காதவர்கள்தானே. அவைகளைப் பார்க்கப் பார்க்கப் பசிதான் அதிகமாயிற்று.

யாரோ ஒரு "நாகரீகமான'' மனிதர், எங்கே முகத்தில் வழியும் வியர்வை பவுடரைக் கலைத்துவிடப்போகிறதோ என்ற கவலையால் வியர்வையைத் துடைக்க கைக்குட்டையை எடுத்தார். ஒரு காலணா நழுவிக் கீழே விழுந்தது. இவன் ஓடி அதை எடுத்தான். சுற்றிலும் திரும்பிப் பார்த்தான். உலகமே அவனை உற்று நோக்கிக்கொண்டிருப்பதைப்போ லிருந்தது. அறை வாங்கிய கன்னத்தில் குடியேறியிருந்த அந்த வலி அப்போதுதான் காலி செய்து கொண்டிருந்தது. அவர் பின்னாலேயே ஓடினான்.

"ஐயா...............'' என்று இழுத்தாற்போலக் கூப்பிட்டான்.

"எட்டிப்போடா. சீ! பிச்சைக்கார நாயே,'' என்று சொல்லிக்கொண்டே அவர் வேகமாக நடந்து போனார்.

இவன் கையில் இருந்த அந்தக் காலணாவை என்ன செய்வதென்று இருவருக்குமே புரியவில்லை. காப்பிக் கடையில் இருந்த எந்தத் தின்பண்டமும் அந்த செப்புக்காசை மதிப்பதாக இல்லை. பக்கத்தில் வெற்றிலைப்பாக்குக் கடையில் தொங்கிக்கொண்டிருந்த வாழைப்பழக் குலை அவர்கள் கண்களில் பட்டது. காசை எடுத்துக்கொண்டு இவன் அந்தக் கடைக்கு ஓடினான்.

"ஐயா காலணாவுக்குப் பழந்தாங்கோ.'' என்று அந்தக் காலணாவை நீட்டினான்.

"ஒரு "வில்ஸ்'' தாங்கோ'' என்று யாரோ ஒருவர் ஒரு அணாவை நீட்டினார்.

"இந்தாங்கோ வில்ஸ், பாக்கி அரையணா'' என்று கடைக்காரன் சிகரட்டையும் சில்லறையையுந் தந்தான்.

"ஐயா வயத்தைப் பசிக்குது. காலணா பழந்தாங்கோ'' என்று உரக்கக் கூவினான்.

"அசோகா காலணா, வெற்றிலைக் காலணா'' என்று ஒருவர் அரையணாவைத் தூக்கிப் போட்டார்.

“அசோகா இல்லியே, வேற எதாவது தரட்டா” என்று கடைக்காரன் தன்னை நாணயமாகக் காட்டிக்கொண்டான்.

‘,அப்போ காலணுவுக்கு வெற்றிலைப் பாக்குத் தந்துடுங்கோ” என்ருர் அவர்.

“ரொம்ப நாழியாக் கேக்குரேனே” என்று இவன் கத்தியே விட்டான்.

“ஏண்டா கத்துறே? கொண்டா காசை” என்று காசை வாங்கிப்பெட்டியில் போட்டுவிட்டு “என்ன வேணும்?” என்று கடைக்காரன் கேட்டான்

“காலணு பழந்தாங்கோ” என்று இவனும் பழைய பாடத்தைப் படித்தான்.

“பழம் ஒண்ணு அரையணு, பாக்கி தா” என்று கடைக்காரன் கையை நீட்டினன்.

பரிதாபமாக அந்தப் பழங்களை இவன் பார்த்தான். அவைகளும் “அவளுக்கு நான் என்ன மட்டமா?” என்று காப்பிக்கடை. தின்பண்டங்களைக் காட்டின. “இல்லை” என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தான். வீசி எறியப்பட்ட அந்தக் காசு உருண்டோடி எதிரில் உட்கார்ந்திருந்த முடவன் முன்னல் விழுந்தது. அவனும் “நல்லாயிருப்பீங்க சாமி! மகராஜன ” என்று வழக்கம் போல வாழ்த்தினன். விழுந்து கிடந்த காசை இவன் ஓடி எடுத்தான்.

“சீ! பிச்சைக்காரக் கழுதை” என்று திட்டிக்கொண்டே அந்த முடவன் விட்டான் ஓங்கி ஒரு அறை. “பளார்” என்ற சத்தம் கேட்டது. உங்களுக்குத்தான் தெரியுமே “ஐயோ அம்மா” என்ற அலறல் அதைத் தொடர்ந்தது. கடைக்காரன் பார்த்துக்கொண்டுதா னிருந்தான். வெற்றிலைப் பாக்குப் போட்டவன் காரி உமிழ்ந்தான். சிகரட் வாங்கியவன் சுருள் சுருளாக புகைவிடப் பழகிக் கொண்டிருந்தான். அடிவாங்கிய இவன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் !

வெகு நேரம் இந்த விசித்திரமான உலகத்தை வேதனையோடு பார்த்துக்கொண்டே இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். யார் யாரோ போய்க் கொண்டிருந்தார்கள். சிலர் "ஐயோ பாவம்" என்று அனுதாபந் தெரிவித்தார்கள். சிலர் "பிச்சைக்காரர்கள் தொல்லையைப்"பற்றி குறிப்புரை கூறினார்கள். சிலருக்கு இவர்கள் இருவரும் அங்கு இருப்பதாகவே தெரியவில்லை!

"இந்தக் கண்றாவியை என் கண்ணால் பார்க்க முடியாது" என்று மனங் கசிந்து சூரியனும் மறைந்து போனான்.

"தம்பி! இன்னைக்காவது யாரும் கெடைப் பாங்களான்னு போய் பார்த்துட்டு வா" என்று சொன்னாள் அந்த இவனுடைய அக்காள்.

அவள் குரலிலே வெட்கம் துக்கம் ஏதுங் காணப்படவில்லை. தெளிவாக ஏதோ பழக்கப்பட்ட பொருளைப்பற்றிப் பேசுவது போல தொனித்தது. வாடிக்கைக்காரர்கள் அல்லது வருகிறவர் போகிற வர்கள் யாரும் அகப்படமாட்டார்களா எனத் தேட இவனும் போனான்.

வரும்போது எவனோ ஒருவனை அழைத்துக்கொண்டு வந்தான். உடலில் பட்டுச்சட்டை இருந்தது கையில் கட்டப்பட் டிருந்த கடிகாரம் ஓடிக்கொண்டிருந்தது. பையில் பௌண்டன் பேனா கூட இருந்தது.

"இங்கேயே இரு தம்பி! வந்துடுறேம்" என்று வந்தவனோடு எங்கேயோ போனாள் இவன் அக்காள்.

சுற்றிலுஞ் சூழ்ந்திருந்த அந்த இருள் நிம்மதியை உலாவவிட் டிருந்தது. தளர்ந்து போன உடலும் அயர்ந்து போன கண்களும் இவனை ஒரு நிலையில் இருக்கவிடவில்லை. பல முறைகள் இவ னுடைய அக்காள் யார் யாருடனோ போயிருக்கிறாள். "எங்கே போகிறாள்?" என்று இவன் கவலைப்பட்டதே இல்லை, "ஏன் போகிறாள்?" என்பது இவனுக்குப் புரிவதே இல்லை. "எப்போது வருவாள்?" என்பதை மட்டும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருப்பான்.

ஏதோ குரல் கேட்டது. உற்றுக் கவனித்தான். "சும்மா இருடி தேவடியா முண்டே! கூச்சல் போட்டா போலீஸிலே புடிச்சுக் குடுத்துடுவேன்." இது ஒரு ஆண் குரல்.

"சும்மா நிறுத்தய்யா. காசைக் குடுத்துட்டு அப்பாலே போய்யா!" இது பெண் குரல்.

ஆம்! இவன் அக்காளின் குரல். குரல் கேட்ட திசையை நோக்கி ஓடினான். கால்கள் தள்ளாடி, உடல் கட்டுமீறி "கொஞ்சம் இளைப்பாற விடு" எனக் கெஞ்சிற்று. இவன்மட்டும் ஓடிக் கொண்டே இருந்தான். உருவங்கள் தெளிவாகத் தெரிந்தன. அந்தக் கிழிசல் சேலைக்காரியின் தலைமயிரை ஒரு கையால் சுற்றிக் கொண்டு வயிற்றில் எட்டி உதைத்தான் அந்தப் பட்டு சட்டைக் காரன். "ஐயோ அம்மா"! என்று கத்திக்கொண்டே அடிபட்ட இடத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள் அவள். ஓடிவந்த இவன் பற்களால் தலைமயிரைப் பிடித்திருந்த அந்தக் கையைக் கடித்தான் எட்டி ஒரு உதை! இவனுடைய உடல் எங்கேயோ பறந்து சென்றது. "ஐயோ அம்மா" என்ற அலறல் நிம்மதியைப் பிளந்துகொண்டு பாய்ந்தது!

விழுந்து கிடந்த இவன் உடலை மெல்ல அவள் தூக்கினாள். பேச்சில்லை. மூச்சில்லை. உயிரைப் பரமண்டலத்துக்கு அனுப்பி விட்டு அழுக்கேறிய அந்த உடல் அலங்கோலமாகக் கிடந்தது. அழுதாள். கண்ணீர்விட்டாள். கதறினாள். நிமிர்ந்து பார்த்தாள். பட்டுசட்டைக்காரன் வேகமாகப் போய்க்கொண்டிருந்தான் கண்ணீருங் கண்ணுமாக அவளும் ஏதோ நினைத்துக்கொண்டு எங்கேயோ நடந்தாள். இருள் அவள் உருவத்தை மூடி மறைத்துக்கொண்டது.

பாற்கடலில் பள்ளிக்கொண்டிருந்த பரந்தாமன் திடுகிட்டுக் விழித்தெழுந்தார். பக்கத்தில் படுத்திருந்த லட்சுமி,

"ஏன் இவ்வளவு சீக்கிரம்?" என்று குழைவாகக் கேட்டாள்.

"அர்த்த ஜாம பூஜைக்கு நேரமாகிவிட்டது" என்று ஆத்திரத் தோடு பதிலளித்தார் ஸ்ரீமந் நாராயணன்.

மெள்ளத் திருமகள் அவருடைய தோளைப்பற்றினள் ஏக்கமுந் தாபமும் நிறைந்த குரலில்,

''இன்றைக்கு ஒரு நாள் போகாவிட்டால் என்ன?' என்று ஏக்கத்தோடு கேட்டாள்.

''அரைமூட்டை அரிசிபோட்டு வடித்திருப்பார்கள். அத்தனை யும் வீணகப் போகுமே'' என்று கவலையோடு கூறினர் பெருமாள்.

''ஐயோ அம்மா! அரைமூட்டை அரிசியா?'' என்று ஆச்சரி யத்தோடு கத்தியேவிட்டாள் பூமகள்.

அவள் ஆச்சரியம் திடீரென மறைந்தது. ''அத்தனையும் ஜீரணமாகாவிட்டால் ஆபத்தாயிற்றே!'' என்ற கவலை தோன் றியது; திரும்பிப் பார்த்தாள். திருமால் மறைந்து விட்டார். கவலை யோடு தலையணையைக் கட்டி அணைத்துக்கொண்டு கண்களை மூடினள் அந்த ''அனாதை ரட்சகனின்'' வாழ்க்கைத் துணைவி. பாம்பும் தாமரையும் ஒன்றையொன்று பார்த்து கண்சிமிட்டிக் கொண்டன!



# அறுந்த கயிறு

இளமையை அள்ளி வீசிக்கொண்டு பொன்னி அம்மாள் உள்ளே நுழைந்தாள். வானத்திலே வளைந்து வட்டமிடும் மாடப் புறுவை மனங்குளிரப் பார்த்து ஜோடிப்புறா ஒன்றைத் துணைக் கனுப்பித் தன்னிடத்தில் இழுக்க எண்ணமிடும் புறுப் பிடிப்பவனைப் போலச் சோமசுந்தரம் அவளைப் பார்த்தார். கண்கள் அவள் உரு வத்தை இதயத்திற்கு இழுத்துச் சென்றன. மட்டரகமான காகி தத்தில் மனதை உருக்கும் ஓவியம் ஒன்றை எழுதி விட்டுக் காகி தத்தால் கைத்திறனின் எழில் மங்கிவிட்டதே எனக் கவலைப்படும் சித்திரக்காரன் நிலை போலானது அவர் மன நிலை!

அவர் எதிர்பார்க்காத உருவம் எதிரே நின்றது. ''மாமா'' என்று மழலைமொழி பேசி மடியில் உட்கார்ந்து விளையாடிய சிறு பிள்ளை இன்று அவர் மஞ்சத்தில் உட்கார்ந்து மயக்க மொழிகள் பேசப்போகிறது. அவள் அவருக்கு இப்போது மனைவி. பிஞ்சுக் கைகளால் அவர் இலையில் இருந்த உணவை எடுத்துச் சாப்பிட்ட போது இருந்த இன்பத்தின் ருசிதான் அவரை அவளை மனைவீ யாக்கிக் கொள்ளத் தூண்டியது, அந்தக் கை வாழ்வில் துணை புரியப் போதுமான நிலையிலிருக்கிறதா என்ற மனத்துடிப்பு அவரைத் திடுக்கிடச் செய்தது.

ஆசையோடு தன் மாமன் தன்னை அழைத்து அன்புடன் அழைத்து பொன்னி அம்மாளுக்கு எப்பொழுதும் அவர் மேல் ஒரு தனி அன்பு இருந்தது. மாமன் வீட்டிற்குச் செல்வதென்றால் அலாதி இன்பம் உண்டாகும். அவர் வாங்கித்தரும் விளையாட்டுச் சாமான்களைக் கட்டிப் காப்பாள். வீட்டிற்குத் திரும்பிவிட்டால் அவரைப்பற்றி அடிக்கடி தன் தோழிகளிடம் சொல்லிச் சொல்லி மகிழ்வாள். அவரே தனக்கு மாலையிடப் போகிறார் எனத் தெரிந்த வுடன் சென்றுபோன நாட்களை மறுபடியும் வரவழைத்துக் கொஞ்சி விளையாட ஆரம்பித்தாள்.

0-, 3 N5\1, N
1161



திருமண நாளன்றுகூட அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. மாமா வீட்டில் செல்வக் குழந்தையாக விளையாடிய அந்த நினைவுகள் எல்லாம் அவளை வானத்தில் நீந்தவிட்டு வேடிக்கை பார்த்தன. அவர் முதுகின்மேல் ஏறிக் குதிரை சவாரி செய்த அந்தப் பழைய நிகழ்ச்சிகள் அவளைப் பரவசப்படுத்தின. "என்னமோம்மா, நீ பாக்கியம் செய்தவள். எங்கண்ணன் ஒன்னை ராஜாத்தி மாதிரி வச்சிருப்பார்" என்று அவள் தாய் தன் அண்ணனைப்பற்றிக் கூறியபொழுது முதல் முதலில் மேடை ஏறிப்பேசுந் தோழருக்கு வரவேற்பும் வாழ்த்தும் மலர் மாலையும் தொடர்ந்த காட்சிகளாகத் தோன்றினால் எப்படி இருக்குமோ அதே நிலையில் தான் அவளும் இருந்தாள்.

அன்றுதான் முதன் முதலில் அடைபட்ட வாழ்க்கையிலிருந்து விடுபட்டுத் தன் மாமனைத் தனிமையில் காணவந்தாள். ஒரு கையில் வெற்றிலைத் தட்டும் மறுகையில் பால் பாத்திரமும் முகத்தில் எப்போதும் தோன்றாத வெட்கமும் அவளோடு துணைக்கு வந்திருந்தன. வழக்கப்படி கதவை மூடித் தாழிட்டுவிட்டார்கள். கழுத்தைச் சுற்றிக் கைகளைக் கோர்த்து காதைப் பிடித்துக் கிள்ளி "மாமா இன்னைக்குப் பொம்மை வாங்கித் தாரேன்னு சொன்னீங்களே ஏன் வாங்கிட்டு வரல்லே?" என்று கேட்ட காட்சி கண்ணெதிரே நின்று அவளைக் கைநீட்டி அழைத்தது.

அவள் நெருங்கச் சோமசுந்தரத்தின் அங்கங்கள் சோர்வுற ஆரம்பித்தன. ராஜாமாதிரி ஒருவனுக்கு அவளைக் கொடுத்து ராணிமாதிரி வைத்திருக்கத் தன் தங்கையுடன் எத்தனையோ முறைகள் திட்டம் போட்டிருக்கிறார். இன்று அந்த ராஜா மாதிரி தன்னை நினைத்துக்கொள்ளக்கூட முடியாமல் தவித்தார். பெனாரஸ் புடவையும், மஞ்சள்பூசி அதைப் பட்வுரால் மெருகு கொடுத்த முகமுங்கொண்ட அந்த உருவம் குனிந்த தலை நிமிராமல் தன்னெதிரே வந்து கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரத்திலே அவள் தன் பக்கத்திலே அமர்ந்துவிடப் போகிறாளே என்ற அச்சம் அவருக்கு அவரை அறியாமல் ஏற்பட்டது.

தன்னை உயிர் என மதித்த மாமன் "வா" என்றுகூட அழைக்கவில்லையே என்ற வருத்தத்தால், சோபை நிறைந்த

105247

அவள் முகத்தில் ஏக்கத்தின் சாயல் இடம்பெற்றது. ஒருவேளை யாருமே இல்லாமல் தான்மட்டும் தனியாக இருக்கிறேமோ என்ற சந்தேகம் தோன்றியது நிமிர்ந்து பார்த்தாள். அன்பின் ஒளியை எதிர் பார்த்துவந்த அவள் கண்கள் கட்டிலில் உட்கார்ந்திருந்த அந்த உருவத்தைப் பார்த்தன. அன்பு காட்சி அளித்தது. ஆனால் ஒளிமட்டும் இல்லை.

காலம் மட்டும் தன் காரியத்திலேயே கண்ணுயிருந்தது. அவள் நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய மாமன் உட்கார்ந்து கொண்டிருந்தார். பத்துப்பேருக்கு மத்தியில்கூடக் கூச்சமோ வெட்கமோ துளிகூட இல்லாமல் பரிகாசம் செய்து பழக்கப்பட்ட அவர்களுக்கு அந்தத் தனிமையில் ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடத் துணிவேற்படவில்லை. சோமசுந்தரத்திற்கு எப்போதுமே அவளுடனிருப்பதில் வெட்கம் இருந்ததே இல்லை. பொன்னி அம்மாளுக்கு அதுவரையில் இருந்த வெட்கம் எங்கேயோ ஓடிவிட்டது. இருவரும் புதிதல்லவே, பின் உபசாரம் என்பது எப்படிக் குறுக்கே நிற்கமுடியும்? இருவரும் பார்த்துக்கொள்வதற்கு முன்னால் சகஜமான நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று என்றுதான் எண்ணினார்கள். பார்த்த பிறகு ஏதோ புதிதாக, நடக்கக்கூடாததாகத் தோன்றிற்று. வீட்டில் இருந்தவர்கள் அத்தனைபேரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார்கள். நிம்மதி சுற்றிலும் தன் முழு ஆட்சியையும் பூரணமாகச் செலுத்திற்று. கடிகாரத்தின் முட்கள் நகர்ந்துகொண்டே இருந்தன.

காலையிலே அவளுடைய தோழி ஒருவிதமாகப் பார்த்துப் புன்சிரிப்போடு கண்ணைச் சிமிட்டியபோது கோபத்தோடு அவளைப் பார்த்தாள். மறுமுறையும் அவளுடைய விஷமம் நிறைந்த அந்தப் பார்வையை எதிர்பார்த்தது பொன்னி அம்மாளின் மனம். அன்று வீட்டிலுள்ளவர்கள் அத்தனைபேரும் இவளை விசேஷமாகக் கவனித்தார்கள். நாடகத்தில் கதாநாயகி வேஷம் போடுபவளுக்கு எப்படி மரியாதையும் புகழுரைகளும் "அட்வான்ஸாக"க்- கிடைக்குமோ அதேபோலத்தான் இவளிடம் எல்லோரும் அக்கறை காட்டினார்கள். அவள் தாய் "ஏம்மா இப்படி அலையறே? கொஞ்சம் படுத்துத் தூங்கேன்" என்று சொன்னபோது அவள்

தாய் வார்த்தையைத் தட்ட முடியாமல் படுத்தாள். தூக்கம் என்ன அவ்வளவு விரையில் வருகிறேனென்கிறதா? வருந்தி வருந்தி அழைத்துப் பார்த்தாள். சாக்குப்போக்குக் காட்டி அது அவளிடமிருந்து தப்பித்துக்கொள்ளவே முயன்றது. கண்ணை மூடினுள். அவள் மாமா அன்பும் ஆதரவும் நிறைந்த பார்வை யோடு வந்து நின்ருர். இவள் ஓடி அவர் கைகளைப் பிடித்து இழுத் தாள். இரட்டை மாட்டு வண்டியில் ஒரு மாடு மெள்ளப் பின் தங்கவே அடுத்தமாடும் வேகமாகப் போகமுடியாமல் தத்தளிப் பதைப் போலச் சின்னஞ் சிறு கால்களால் அளந்து அளந்து நடை போடும் இவளோடு அவள் மாமன் நடக்க முடியாமல் தவித்தார். இரண்டு கைகளாலும் அவளைத் தூக்கித் தன் கைகளில் ஏந்திக் கொஞ்சி முத்தங் கொடுத்தார். இவளும் ''மாமா நாளைக்குப் பொம்மை கல்யாணம். நான், அடுத்த வீட்டு அக்கா எல்லாரும் சேர்ந்து பண்ணப்போகிரேும்; பணங்கொடு,'' என்று கேட்டாள். ஆசையோடு ஒரு ரூபாயை எடுத்து அவர் அவள் கைகளில் வைத்தார். ''நீங்க என்னுண்ணேன் சின்ன பிள்ளை கையிலே பணங் கொடுத்துக் கெட்ட பழக்கம் உண்டாக்குறீங்க'' என்று அவள் தாய் அந்த ரூபாயைத் தட்டிப் பிடுங்கிக் கொண்டாள். ஏக்கம் நிறைந்த இவள் பார்வையும், கோபம் நிறைந்த இவள் அம்மாவின் பார்வையும்—பரிகாசம் நிறைந்த இவள் மாமாவின் பார்வையும்—அந்தக் காட்சி இவளுக்குப் பிடிக்கவே இல்லை. பிடிக்காத தொடர்கதையைச் சலித்துப் போய்ப் பாதியோடு படிக்காமல் விட்டுவிடுவதுபோல, இவள் விழிகளுக்கு மூடிபோட் டிருந்த அந்த இமைகளைத் திறந்துவிட்டாள். மாலையானதும் ஐயர் இவளிடத்திலே இதுவரையிலே இருந்த தோஷங்களை எல்லாம் என்னென்னவோ சொல்லி விரட்டினுர். இரவு நெருங்க நெருங்க இவள் மனமும் சொன்னபடி கேட்க மறுத்தது, இரவும் வந்தது. இவளும் அந்த அறைக்குள்ளே நுழைந்தாள்.

''ஏம்மா வெட்கப்படுறே, இந்தா இந்தப் படுக்கையிலே வந்து படுத்துக்கோ'' என்று சொல்லிக்கொண்டே சோமசுந்தரம் எழுந்து நின்ருர். இவளுக்கு அந்தப் படுக்கை எப்போதும் போலத்தான் காட்சி அளித்தது. ஆனுல் அதில்போய்ப் படுக்க

மட்டும் மனம் வரவில்லை. மெள்ளக் கையைப் பிடித்து அழைத்துச்சென்று படுக்கையிலே படுக்கவைத்தார். அவருடைய அந்தக் கை சற்று நடுங்கிற்று. "ராத்திரி எல்லாம் முழிச்சா உடம்புக்கு ஆகாது, படுத்துத் தூங்கு" என்று சொல்லிவிட்டு அவர் பக்கத்திலிருந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கண்களை மூடினார்.

சூரியன், சந்திரன், ராகு, கேது, சனி அத்தனை கிரகங்களும் அவர் முன்னாலே வந்து நின்றன, மங்கள வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. எதிரே சில சுள்ளிகளைப் போட்டு ஐயர் எரித்துக்கொண்டிருந்தார். அரிசியும் மஞ்சளும் கலந்து வைக்கப் பட்ட தட்டு சுற்றிலும் இருப்பவர்களிடம் நீட்டப்பட்டது. ஒவ்வொருவரும் ஒரு பிடி எடுத்துக்கொண்டனர் அது முடிந்ததும் ஐயர் மஞ்சள் நனைக்கப்பட்ட கயிறைக் கையில் எடுத்து இவரிடங் கொடுத்தார். குனிந்து கொண்டிருந்த அந்தச் சிறிய தலையை யாரோ ஒரு பெண் பின்னாலிருந்து நிமிர்த்தினாள். "கெட்டி மேளம்," "கெட்டி மேளம்" என்று எல்லாரும் கத்தினார்கள். ஏதோ ஒரு ராகத்தை அப்போதுதான் தொடங்கித் தன் கைத் திறமை அத்தனையும் காட்டிக்கொண்டிருந்த நாதஸ்வரக்காரன் அலுப்போடு நாதஸ்வரத்தைக் கீழே வைத்தான். மேளக்காரன் வேகமாகத் தட்டினான். அந்தக் கயிற்றை அவள் கழுத்தருகே கொண்டுபோனார் சோமசுந்தரம். கயிறு கையில் இல்லை. கூரான வாள் ஒன்று அவர் கையிலே மின்னிற்று. ஒரு கல்லின் மேல் அந்தத் தலை கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது. கத்தியை ஓங்கினார், மறுநிமிடம் அந்தக் கத்தி அந்தச் சின்னஞ் சிறிய கழுத்தை...! "ஐயோ பொன்னி" என்று அலறிக்கொண்டே விழித்துப் பார்த்தார். அவளும் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தாள். கொடுமையான உணர்ச்சியின் ரேகை அவளுடைய கண்களிலே காணப்பட்டது. கலவரமும் கலக்கமும் நிறைந்த பார்வையோடு தன்னைப் பார்த்த பொன்னியை மறுமுறையும் கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தார். பொன்னி இன்னும் கன்னியாகத்தா னிருந்தாள்! இரண்டுபேரும் மறுபடியும் தலையைச் சாய்த்தார்கள். மணி மூன்று அடித்

தது. பிறகு என்ன நடந்ததோ? இருவரும் அத்தனைநேரம் கண் விழித்திருப்பதற்கு உடல் நிலை இடங்கொடுக்கவில்லை!

இவர் அறையைவிட்டு காலையில் வெளிவரும்போது, எல்லோருக்கும் ஒன்றும் புரியவில்லை. பொன்னியின் தம்பி யாருக்கோ ஏதோ ஒரு புத்தகத்தை உரக்கப் படித்துக்கொண்டிருந்தான்.

"பேடகன்ற அன்றிலைப்போல் மனைவி செத்தால்
பெருங் கிழவன் காதல் செயப் பெண் கேட்கின்ருன்.
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தாற் பின் மணத்தல் தீதோ?"

இந்த அடிகள் தெளிவாகவும் அழுத்தமாகவும் இவர் காதுகளில் விழுந்தன. ஆறு வருடங்களுக்கு முன்னால் தவறிவிட்டதால் பழிக்கஞ்சித் தூக்குப்போட்டுக்கொண்ட இவருடைய தங்கை—பொன்னியின் சிற்றன்னை—உத்திரத்திலே கட்டப்பட்ட கயிறு கழுத்தை நெருக்கிக்கொண்டிருக்கக் காட்சி அளித்தாள்' அந்தக் கயிற்றைவிட அதிகமாகவே பொன்னியின் கழுத்திலே இவர் கட்டிய கயிறு இறுக்கிப் பிடித்து அவளைச் சித்திரவதை செய்து கொண்டிருந்ததுபோல் இவருக்குத் தோன்றியது. வேகமாக உள்ளே நுழைந்தார். பொன்னி கழுத்திலிருந்த அந்தக் கயிற்றை வெடுக்கெனப் பிடித்து இழுத்தறுத்தார். "இனிமேல் நீ என் மகளம்மா, நான் தான் தவறு செஞ்சிட்டேன்ஞ, நீ ஏனம்மா என்னைக் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னு சொல்லக்கூடாது?'. என்று அமைதியான குரலிலே அழுத்தமாகக் கேட்டார். அந்த அணைப்பு பொன்னியின் உடலிலே புதுவிதமான உணர்ச்சியை உண்டாக்கியது. பேசாமல் மாமன் மார்பில் தன் தலையைவைத்து அன்போடு அவர் முகத்தைப் பார்த்தாள். அவர் கண்களிலிருந்து ஒரு துளிக்கண்ணீர் இவள் கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துணைக்கழைத்துக்கொண்டு கீழே விழுந்தது. சுற்றிலும் நின்றவர்கள் ஆத்திரமும் ஆச்சரியமும் நிறைந்த பார்வையோடு இந்தக் காட்சியை கவனித்துக்கொண்டிருந்தார்கள். அறுந்துபோன அந்தக் கயிறு கீழே விழுந்து கிடந்தது!

---

# லீலாவுக்கு நளினி

**லீலா!**

'ஆசை' லீலா, பிரியமுள்ள' லீலா, 'அன்புள்ள' லீலா என்று அடைமொழிகள் சேர்த்து எழுதலாம் என்றுதானிருந்தேன். ஆனால், ''லீலா'' என்ற இரண்டு எழுத்துக்களையும் எழுதும்போது என் மனதில் மலரும் மகிழ்ச்சியே போதும். தேவையில்லாமல் வார்த்தைகளைக் கொட்டுவானேன் என்று விட்டுவிட்டேன்.

நீ எழுதிய கடிதத்தைப் படித்தேன். வெட்கங்கெட்டவள் இழிவுருவானவள் என்று ஏற்கனவே உன் மனதில் உருவாகி யிருந்த சில அருவருப்பான வார்த்தைகளை அள்ளிக் கொட்டியிருக் கிறாய். புனிதமான தெய்வத்தைத் தேடிச் செல்லும் உண்மை யான பக்தன் இருட்டறையிலும் குமட்டும் வாடையிலும் சிறைப் பட்ட அழுக்கேறிய சிலையைக் கண்டால் எப்படி வருந்துவானோ அப்படியே ஆனேன்!

தோழி! இளமையிலிருந்தே நீ என்னை நன்றாக உணர்வாய் மனமொத்து வாழ்ந்தோம். உன் புத்தகம் காணமற் போனபோது என் உயிர்போனதுபோல நான் துடித்தேன். நான் கீழே விழுந்து என் முழங்காலில் அடிபட்டபோது நீ அழுதே விட்டாய். வளரும் பருவத்தில்கூட உள்ளங்களை மட்டும் ஒத்த அளவிலேயே விட்டு வைத்திருந்தோம். ''அன்று'' என்று நீ நினைப்பாய். ''இன்று'' எனத்தான் என் மனம் இன்னும் எண்ணிக்கொண்டிருக்கிறது. பிணைப்புற்ற நம்மிருவர் உள்ளங்களும் பிடிப்புத் தளராது உற வாடிக்கலந்த அந்த நாட்கள் இன்னும் என் கண்முன்னே மறை யாமல் நிற்கின்றன.

மலர்ந்த பருவத்தில்கூட மனங் கொஞ்சங்கூடப் பிணங்கா மல் காலங் கழித்தோமே! எதிர் காலத்தை மனதாலேயே எட்டிப் பிடித்தோமே! நம் கண்ணால் காணமலே நமக்கென்று பிறந்து வளர்ந்துகொண்டிருந்த வாலிபர்களை உருவகப்படுத்திப் பார்த் தோமே! நம்மில் யாராவது ஒருவர் ஆணாக இருந்தால் இந்நேரம்

"அப்பா", "அமமா" என்று நம்மை அழைக்கும் ஆசைக்குழந்தை களோடு கொஞ்சிக்கொண்டிருப்போம். அப்படியிருந்தும் இப் படிக் கடிதம் எழுத உனக்கு எப்படியடீ மனம் வந்தது?

ஏதோ ஒரு சினிமாவில்தான் "ரயில் ஒரு பெரிய ஸ்டேஷனை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. வழியில் பலப்பல சின்ன ஸ்டேஷன்களில் நின்று நின்று போகிறது' என்று சொல்லக் கேட் டிருக்கிறேன். அதுபோலத் தானம்மா மனிதர்களும் எங்கேயோ எதையோ நோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். மரணத்தை நோக்கிப் போவதாகப் பொய்ச் சொல்லுவார்கள். உண்மை அப்படித்தானிருந்தாலும் எவரும் அதை நோக்கிச் செல்லுவதே இல்லை! இன்ப வாழ்வு, ஆதிக்க ஆசை, மதிப்பு, பெருமை இவற்றில் ஏதோ ஒன்றை நோக்கித்தான் ஒவ்வொரு வரும் போகிறார்கள். வழியில் எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள், சந்திப்புகள், உறவாடுதல்கள், இவற்றையெல்லாம் வெகு சீக் கிரம் உதறித் தள்ளிவிட்டு உணர்ச்சியற்ற ரயில்வண்டியைப் போலத்தான் எல்லோரும் நடந்துகொள்கிறார்கள். நாம் இருவரும் அப்படி இல்லையே, லீலா! ஒரே குறிக்கோளை எண்ணித்தானே கைகோர்த்துக்கொண்டு நடந்தோம், பிணைப்புற்ற இரு கரங் களையும் இவ்வளவு எளிதில் வெட்டித் துண்டிக்க எப்படியம்மா உனக்கு மனம் வந்தது?

என்னை விட்டு நீ பிரியும்போது வெகு நேரம் அணைத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தோமே! எத்தனை எத்தனை வாக்குறுதி கள், மீண்டும் மீண்டும் பல முறைகள் பார்ப்போம், பேசுவோம், உறவாடுவோம், என்ற நம்பிக்கை நிறைந்த உறுதிமொழிகள்— இவைகளெல்லாம் என் நெஞ்சில் இன்னும் சதிராடிக்கொண் டிருக்கின்றனவே!

என்னைத் தனிமையில் இருந்து தவிக்க விட்டு விட்டு நீ போய் விட்டாய். உன்னைத் தவிர வேறு எவரோடும் ஓரிரண்டு வார்த்தைகளுக்குமேல் பேசினதே இல்லை. தேவைக்கு மேல் பேசினால் தேன் சிந்திப்போகுமோ என்று என்னை எல்லோரும் கேலி செய்வார்களே, நினைவிலிருக்கிறதா? மனம் விட்டுப் பழக நீ

ஒருத்திதான் இருக்கிருய் என்று எண்ணியிருந்தேன், ஒளியாமல் சொல்லுகிறேன்: உன்னை என் மனம் இறுகத் தழுவியிருந்தது. முன்புறம், பின்புறம் திரும்பிப் பார்க்குமளவு கூடத் தளரவில்லை. அவைகளை எல்லாம் நீ மறந்துவிட்டாய். ஒளியை அணைத்துவிட்டு விழியைத் திறந்தவள்போல மாறிவிட்டாய்!

நீ என்ன, உலகமே என்னை தூற்றும், கேலி செய்யும், உதாசீனமாக வெறுத்துப் பேசும். என்னிடத்தில் தற்காலிகமாக அன்பு காட்டும் ஆண்களெல்லாம் என்னென்ன சொல்வார்கள் தெரியுமா? காந்தக்கல்லை ஆட்டினால் பக்கத்திலிருக்கும் இரும்புத் தகடும் ஆடுமே அதைப்போல என் சுழலும் கண்கள் அவர்கள் மூளையையே சுழற்றுகின்றனவாம்! கலங்கரை விளக்கு கடலில் வருங் கப்பல்கள் கல்லில் மோதிச் சிதறுவதைத் தடுக்க இருக்கின்றதாம். ஆனல் மூடி மூடித்திறக்கும் என் விழிகளோ அவர்கள் இதயங்களை என் மோகன உருவத்தில் மோதிச் சிதறச் செய்கின்றனவாம்! அவர்கள் சிங்கங்களாம்! நான் அவற்றை ஆட்டிவைக்கும் சர்க்கஸ்காரியாம்! இன்னும் என்னென்னவோ சொல்வார்கள். நான் மட்டும் இவைகளில் மயங்கினதே இல்லை. பலரிடம் கேட்டுப் பழகிப் போனதால் புளித்துக்கூடப் போய்விட்டது. பணம் அதிகமாகக் கொடுத்தால் பரிவோடு நடப்பேன். குறைந்தால் குமுறலைத்தான் காணலாம். அவர்களும் என்னைக் கண்டபடி ஏசுவார்கள். "வெட்கங் கெட்டவளே" என்று ஏசி இந்தக் கடிதத்தை வீசி எறிந்துவிடாதே! என் உணர்ச்சிகளெல்லாம் கருகித் தீய்ந்து போய்விட்டன. என் வாழ்வு ரூபாய் அணு பைசா வியாபாரமாக மாறிவிட்டது!

நீ எனது உயிர்த் தோழி! ஆதரவு என்று நான் நினைக்கும் ஒரே பெண்! மனதைத் திறந்து பேச உன்னைத் தவிர எனக்கு வேறு எவரும் இப்போது—எப்போதும்—இல்லை. நீயும் நிந்தித்து என்னை உதறித் தள்ளிவிட்டால்.....! *லீலா*! கேள் என் வாக்கு மூலத்தை.

எனக்கு மணம் முடிந்தது. என் கணவர் என்னை அவர் மனதில் பொங்கும் மகிழ்ச்சியாகவே மதித்தார். பிரியமாயிருந்தார்.

நீகூட அடிக்கடி சொல்லுவாயே "நீ சிரித்தாலேபோதும், ஆயிரம் பொன்தரலாம்" என்று, அவரும் அதையே அப்படியே சொல்லு வார். அவர் சொல்லும்போதெல்லாம் உன் உருவத்தில் கூடு விட்டுக் கூடு பாய்வதுபோல எனக்குத் தோன்றும். உன்னைப் போலவே அவரும் என்னைத் தன்னந் தனியே விட்டு விட்டு வெகு சீக்கிரம் இறந்தார். நான் விதவையானேன்.

ஒரு முழந்தானடி அவர் கட்டிய கயிறு! அது அறுந்து, அவர் என்னைவிட்டு மறைந்துபோன பிறகுகூட ஒரு மைல் தூரத்துக்கு என்னைச் சுற்றி வளைக்கப்பட்ட முள்வேலியாக இருந்தது. என் உடலின் இளமை அப்படியே இருந்தது. உள்ளத்தில் எண்ண எண்ணத் தெவிட்டாத இன்ப நினைவுகளெல்லாம் தலைதூக்கி நின்றன. என் கணவர் காட்டிய அன்பும் அவைகளில் பதிந்திருந் தது. தாவித் தாவி ஓடும் மனதையும், தன்னைமீறி அலையும் எண்ணங்களையும் கட்டுப்படுத்தி அடக்கினேன். அவைகளும் அலுத்து ஓய்ந்துபோயின.

இரவு வேளைகளில் இருண்ட வானத்தில் எங்கேயோ இருந்து கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டிக் காதல்மொழிகள் பேசும் அந்த நட்சத்திரங்களில் மனதைப் பறிகொடுத்து உட்கார்ந்திருப்பேன். அவைகளுக்கு மேலே ஏதோ ஒரு உலகத்தில் இருக்கிறார் என் கணவர்! அதற்கும் மேலே அவதி நிறைந்த வாழ்வை எவரும் அழிக்கமுடியாமல் என் தலையிலெழுதிய ஆண்டவன்! அவ்வரை நோக்கித்தான் நல்ல கதி கிடைக்கிறதா என்று பிரார்த்தித்தேன், கண்ணீர் நிறைந்த கண்களோடு. என்னைக் கண்திறந்து பார்க்கும் படி வேண்டிக்கொண்டேன். மாலை நேரங்களில் கடவுள் சந்நிதி யில் நின்று என் குறைகளைக்கூறி அழுவேன். காலை நேரங்களில் உதிக்கும் சூரியனிடம் மறுஜன்மத்திலாவது என் தலையெழுத்தை மாற்றி எழுத ஆண்டவனிடம் போய்ச்சொல்லும்படி கேட்டுக் கொண்டேன். உன்னிடத்தில் கொண்டிருந்த அன்பு, என் கணவரிடம் காதலாக மாறி, கடவுளிடத்தில் பக்தியாகப் பரிண மித்தது!

பெருமாள் கோவிலில், "சீதா கல்யாணம்" காலட்சேபம் ஏற்பாடு செய்தார்கள். இம்மையிலும் மறுமையிலும் எல்லை

யில்லாத இன்பம் ஏற்படும் அதைக் கேட்டால் என்று சொன்ஞர்கள். நாள் தவருமல் அங்கே செல்லத் தொடங்கினேன். என்னைப்போன்ற எத்தனையோ சமூகத்தின் ''அவமானச் சின்னங்கள்'' அங்கே வருவார்கள். நாங்கள் கூடுவதைப் பார்க்க எத்தனையோ இளைஞர்கள்! பாகவதர்கூட எங்களுக்குத்தான் அது தேவை என நினைப்பார். எங்களைக் கரையேற்றுவதில்தான் அதிக அக்கரை காட்டுவார்! கதை பூராவையும் எங்களுக்கே, எங்கள் பக்கம் பார்த்தே சொல்லுவார்!

ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியின் உடல் அமைப்பை அழகாக வர்ணித்தார். இவருக்கு எப்படித்தான் தெரியுமோ? ஒவ்வொரு அசைவிலும் அவர் எப்படி இருப்பார் என்று அவர் விளக்கும்போது என் மனம் நெகிழ்வடையும். பாலைவனம் போலிருந்த என் மனதில் பச்சைப் பசேலென்று ராமர் கொடியாக. செடியாக, மரமாக, சோலையாக வேர்விட்டார். அவர் உருவத்தோடு என்னை ஐக்கியப் படுத்திவிட்டேன்.

அன்று சீதையை ராமர் தன்னந்தனியே சந்தித்தார். மகாவிஷ்ணுவின் அவதாரமாயிருந்த போதிலும் ஸ்ரீராமர் சீதையிடம் எப்படி நடந்துகொண்டார் என்று நினைக்கிருய்? என் கணவர் அன்று முதல்நாளிரவு நாங்கள் இருவருந் தனிமையில் இருந்தபோது நடந்துகொண்டதைப் போலத்தான்! மூடிக்கட்டி முடிச்சுப் போட்டிருந்த நினைவுகளெல்லாம் மெள்ளத் தலைதூக்கின. கடும் வெய்யிலில் காய்ந்து ஓய்ந்து நடக்கும்போது நிழலின் நினைவு தோன்றிஞல் எப்படி இருக்கும்? அதே நிலை அடைந்தேன்!

ஸ்ரீராமர் சீதாதேவியின் எதிரில் வந்து உட்கார்ந்தார். சீதை தன்னை மறந்தாள். நடுங்கும் கைகளோடு சீதையின் உடலை ராமர் பற்றிஞர். சீதை அவரைத் தழுவிஞள். விரிந்து காற்றில் மிதக்கும் குடையோடு கயிறுகளால் பிணைக்கப்பட்டு ஆகாயத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் விமானியின் உடலைப்போலப் பிணைப்புற்ற இரு கைகளுக்கிடையே சீதையின் உடல் ஊசலாடியது. அவள் உடலில் இருந்த அத்தனை நரம்புகளும் முறுக்கேறின. வேகம் வேகமாக ஓடிக்கொண்டிருந்த இரத்தம் அவளை தத்தளிக்க

வைத்தது. மத்தளத்தையும் தபேலாவையும் ஒரே நேரத்தில் ஓங்கி ஓங்கித் தட்டித் தாளம் போடுவதுபோல இருவர் இதயங்களும் அடித்துக்கொண்டன; துடித்துக்கொண்டிருந்த மெல்லிய உதடுகளை முரட்டு உதடுகள் அழுத்தித் துடிப்பை அடக்கின. தாகத்தால் தவித்தவன் தண்ணீர் கிடைத்தால் தன்னை மறந்து அனுபவித்துக் குடிப்பதைப்போலச் சீதை அள்ளி அள்ளிப் பருகினாள் அந்த இன்பத்தை! இப்போது நினைத்தால்கூட என் நெஞ்சு புல்லரிக்கிறது. மணிமுடி பூங்கோதையைத் தழுவிய போது, ''அத்தான் விடாதீர்கள் என்றாள்'' என்று கவியரசர் பாரதிதாசன் எழுதியிருக்கிறாரே, அதன் கவி நயத்தைச் சொல்லியா புரிந்துகொள்ள முடியும்? சுவைத்து அனுபவிப்பதல்லவா அது களைத்துப்போய் ராமர் கைகளைத் தளர்த்தினார். மூடியிருந்த கண்களைச் சீதை திறந்தாள்!

எவருமில்லை. இருள் சூழ்ந்திருந்தது. சந்நிதானத்தில் எரிந்த விளக்கு ஒளியைப் புகையாக மாற்ற நேரம் பார்த்துக்கொண்டிருந்தது. என்னெதிரே பக்கத்துவீட்டு ஷண்முகசுந்தரம் நின்றுகொண்டிருந்தான். கலைந்துபோயிருந்த என் ஆடை, அவிழ்ந்து தரையில் படிந்திருந்த என் கூந்தல், படபடத்துக்கொண்டிருந்த உடல் இத்தனையும் என்ன நடந்தது என்பதை எனக்கு விளக்கின. முள்ளில் விழுந்த உடலைப்போல என்மனந்துடித்தது. நான் கட்டிக் காப்பாற்றிய அந்தப் பொருள் எட்டாக காாக்கில் பயந்து எங்கேயோ மறைந்தே போய்விட்டது!

''அப்பாவி'' என அவனைச் சபித்தேன்.

''எவரிடமும் சொல்லமாட்டேன். பயப்படாதே'' என்று சொல்லி மறுபடியும் என் கையைப்பற்றினான். வெடுக்கெனக் கையைப் பிடுங்கிக்கொண்டேன். ஆண்டவனைப் பார்த்தேன். விழித்த கண்களை மூடாமல் என்னையே பார்த்துக்கொண்டு அவர் நின்றார். ஓங்கி ஓங்கித் தலையிலடித்துக் கொண்டேன். விளக்கும் அணைந்து இருளை வெளிப்படுத்தியது!

நான் ஒழுக்கங் கெட்டவள், உன் நினைவில்! ஊரார் பேச்சில்! ஆண்டவன் சந்நிதியில்! ஆண்டவன் கண்ணெதிரிலேயே, அவர்

மகிமையை விளக்கும் கதை தந்த போதையால, பலிபீடம் என்று தெரிந்தோ தெரியாமலோ பக்தியின் பேரால் என்னை என் பெற்ளுேர் மனமுவந்து அங்கே அனுப்பியதால் கெட்டுப் போனேன்! கடுங்காவல் வைத்து கட்டுப்படுத்தியிருந்த என் மனதை மயங்கச் செய்ததே அந்த "சீதா கல்யாணம்" அதைப்பற்றி எவரும் நினைப்பதில்லை.

மலர்ந்த மலரென்றுதானே பறித்துத் தலையில் சூடிக்கொண்டேன். மறைந்திருந்த "பூநாகம்" என்னைத் தீண்டியதற்கு நானு பொறுப்பாளி? கொழுந்துவிட்டு எரிந்த நெருப்பைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தணித்து அவித்தேன். சாம்பலாகப் போகும்போது சத்கதா காலட்சேப மண்ணெண்ணெயை அதன்மேல் கொட்டியது. மறுபடியும் தணல் எரிய ஆரம்பித்தது. அதற்கு நானென்ன செய்வேன்? வயிறு பசிக்கும்போது குலுங்கும் மாங்கனிகள் கண்ணில்பட்டால் சுவரேறிக் குதித்தாவது பறித்துச் சாப்பிடமாட்டோமா? தனியாகத் தன்னை மறந்திருந்த என்னை ஷண்முக சுந்தரம் கனியாக எண்ணிவிட்டான்!

ஏற்கனவே எவராலோ தயாரிக்கப்பட்ட முடிவுகளை நீ விழுங்கிவிட்டாய். தயவு செய்து வாந்தி எடுத்துவிடு. நான் நிரபராதி, குற்றஞ் செய்யாதவள்! என்று எதிர் வழக்காட வரவில்லை. நீ கடிதத்தில் எழுதிய ஆபாசம் நிறைந்த சொற்கள் அடுக்காதம்மா என்று கூற வரவில்லை. வீட்டுக்குள் சிறைபட்டு வெளி உலகம் இன்னதென்று தெரியாமல் எட்டுத் திக்கையும் உணர்ந்தவள் என்று எண்ணிக்கொண்டிருக்கும் உன்னை இப்போது கேட்கிறேன். உன் முடிவு சரியா? நானு குற்றவாளி?

"உன் அன்புள்ள", "உனதாசை", "உன் பிரியமுள்ள" என்ற வார்த்தைகளை வீணுக்காமல் என் நெஞ்சிலிருந்தே ஐந்து எழுத்துக்களையும் வெளியிலெடுத்து வைக்கிறேன்.

---

# பதிவு செய்யப்படாதவள்!

“அதோ! அந்த ஜன்னலைப் பாருங்கள். கம்பிகளுக்கிடையே காணப்படும் அவள் முகம் கவலை நிறைந்திருப்பானேன்? அவள் வாழ்வில் ஒளிமறைந்து விட்டதே! அவளைப் பார்த்துக்கொண்டே போகும் பலரில் எவராவது அவள் வாழ்வில் படிந்த தூசியைத் துணிந்து தட்டிவிட எண்ணினீர்களா?”

இதைத்தான் அவன் அந்த வீட்டுப்பக்கம் போகும்போதும் வரும்போது உலகத்தைப் பார்த்துக் கேட்க நினைத்தான். வாயைத் திறந்து கேட்கவில்லை; அவளைப் பரிவாகப் பார்ப்பதும் உலகை ஆத்திரமாக நோக்குவதும் அவன் எண்ணத்தை வெளிப்படுத்தின.

அவள் யார் தெரியுமா? எதிர்வீட்டு ஜன்னலருகே நின்று இரக்கமற்ற உலகத்தைப் பார்த்துகொண்டிருந்தாளே அவளே தான்! பருவத்தில் பாழாக்கப்பட்ட பாவை; மலரும் வேளையில் சருகாக்கப்பட்ட மலர். அவள் கண்களில் கவர்ச்சி மறையவில்லை, அதரங்களில் இன்பத்தின் துடிப்புகளிலிருந்துகொண்டு தான் இருந்தது. ஆனால், உலகம் இன்ப எல்லையிலிருந்து அவளை நீக்கிவிட்டது. மஞ்சளும் குங்குமமும் மட்டும் அவள் முகத்தில் இருந்திருந்தால், சுமங்கலி பூஜைக்கு அவளுக்குத்தான் முதல் தாம்பூலம் வைத்து அழைத்திருப்பார்கள்.

அவன் அவளைப் பார்த்தான். பார்வையில் இரக்கந்தானிருந்தது. இரக்கம் காலப்போக்கில் வேறொரு உருவடைந்தது. வேறொன்றுமில்லை; சாதாரண அன்புதான். எப்போதும் சாதாரண அன்புதானே காதலாக மாறும்! அதுபோலத்தான் நடந்தது. அவன் கவியாக இருந்திருந்தால், சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை ஒத்திருந்த அவள் முகத்தினைப் பற்றி ஒரு காவியம் புனைந்திருப்பான். சித்திரக்காரனாக இருந்திருந்தால் அள்ளிவிழுங்கும் அவள் விழிகளையும், அருகே வரவேற்கும் அதரங்களை

யும் ஓவியமாகத் தீட்டியிருப்பான். சிற்பியாக இருந்திருந்தால் அங்கலட்சணங்கள் அத்தனையும அமைந்த அந்தப் பேசும் சிலையைப் பேசாச் சிலையாக்கியிருப்பான். மூவரில் ஒருவராகவும் இல்லாத காரணத்தால் அவளைப் பார்த்து மகிழ்ந்து, மகிழ்ச்சியால் நெகிழ்ந்து, நெகிழ்ச்சியால் தூண்டப்பட்டு, அவளைப் பார்ப்பதையே அன்றாட நடவடிக்கைகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டான்.

அவளுக்குத்தான் என்ன இவன்மேல் திடீர்க் காதலா? தன் தலையில் அழிக்க முடியாமல் எழுதப்பட்ட எழுத்தை எண்ணி எதிரிலிருக்கும் ஏகாம்பரநாதரைத் துதித்துக்கொண்டிருந்தாள். ரயில் வண்டியில், ஒரு பெட்டியில் இடமில்லாவிட்டால் அடுத்த பெட்டியிலாவது கிடைக்குமா என்று தேடுவோமே, அதைப்போல இந்த ஜன்மத்தில் கிடைக்காத இன்பம் அடுத்த ஜன்மத்திலாவது கிடைக்க வேண்டுமே என்று ஆண்டவனுக்கு மனு செய்துகொண் டிருந்தாள். கேட்பாரற்றுக்கிடந்த அந்தக் கோயிலுக்குத் திடீ ரெனக் கிராக்கி ஏற்பட்டது. தனிமையிலேயே இருந்து பைத்தி யம்பிடிக்கும் நிலைக்கு அந்த ஆண்டவன் வந்ததும் எல்லோரும் துணைக்கு அங்கே கூட ஆரம்பித்தார்கள். எனக்குமட்டும் உயர்ந்த பண்பு என்கிறார்களே, அது இருந்தால் எதிர்வீட்டு எழில் வல்லியின் பலமான பக்திதான் அந்தக் கோவிலுக்கு அத்தனை மகிமையைக் கொடுத்தது என்று எழுதியிருப்பேன். ஆனால் சாதாரண அறிவு படைத்த என்னால், அழகி ஒருத்திக் கண்முன்னால் காட்சி அளிக்கிறாள் என்றால், இதைப் பார்ப்பதைத் தவிர ஊர்க்காளைகளுக்கு வேறென்ன வேலை, என்று கேட்கத்தான் தோன்றுகிறது.

தன்னை ஈடேற்றி வைத்த அவளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றுதான் அந்த ஏகாம்பரநாதர் எண்ணியிருக்க வேண்டும். அவன் அவளைப்பார்த்தான்; ஏகாம்பரநாதன் மன்ம தனைப் பார்த்தான்; மன்மதன் தன் பாணத்தைப் பார்த்தான்; பாணம் இருவர் உள்ளங்களையும் ஊடுருவிப் பார்த்தது. பாணம் பாய்ந்தவுடன் இருவர் கண்களும் ஒன்றுக்குள் ஒன்று பார்த்தன! காதல் தெய்வத்தின் ஸ்தலபுராணமல்ல இது. "ரசிகமணிகள்" ஸ்டைலில் எழுதினால் எப்படியிருக்கும் என்பதற்கு ஒரு சாம்பிள்!"

எது எப்படி யிருந்தாலும் விதவையாயிற்றே என்று அவளை அவன் வெறுக்கவில்லை. "சட்டையில் கிழிசல் இருந்தால் ஒட்டுப் போடுகிறோம்; அதைப்போல விட்டுப்போன அவள் வாழ்வை சுட்டுப்போடுவோம் அதற்கு ஈடாக அவள் இதயம் நிறைந்த அன்பை நமக்களிப்பாள்" என்ற எண்ணத்தின் சாயல்தான் பலர் அவளைப் பார்த்தும் இவன் பார்வையை மட்டும் தனித்துக்காட்டி யது. காதல் வளர ஆரம்பித்தது. முதலில் கண்கள் பேசின; பின்னர் கடிதங்கள் பேசின; காதல் வளர்ச்சியின் கடைசீ கட்டமாகிய உதடுகள் பேசுவதற்குத் தடையாக அந்த ஜன்னல் கம்பிகள் இருந்தன!

இவர்கள் இருவரும் தமக்கிடையே இருந்த தூரத்தைக் குறைத்துக்கொள்வது, ஏகாம்பரநாதருக்குத் திடீரென ஏற்பட்ட அந்தப் பக்தர்களுக்குப் பிடிக்கவில்லை. அந்த ஆண்ட வனுக்கு அத்தனை கஷ்டப்பட்டு ஆராதனைகள் நடத்தியும், அந்தச் "சாமியும்" வரந்தரவில்லை, இந்த "அம்மாளும்" சரி சொல்ல வில்லை என்றால் ஏன் அவர்களுக்கு கோபம் வராது? கூடிக் கூடிப் பேசினர். பேசியதோடு நிற்கவில்லை; வீதியெல்லாம் தூற்றினர். விதவையின் விழிகளில் ஒளி தோன்றலாமா" என வாதிட்டனர். தாலியறுத்தவள் தகாதன செய்ய நினைக்கலாமா எனத் தத்துவம் பேசினர்; மஞ்சளோடு மங்களமும் மறையவேண் டாமா என்று மதவாதம் பேசினர். இவர்களுக்குத் தெரியாது மலரும் பூவின் மணத்தைத் தடுக்க எந்த வேலியும் பயன்படாது என்று!

இதற்கிடையில் அவளும் அவனும் இன்பக்கற்பனைகளை எழுப்பி மகிழ்ந்திருந்தனர்.

வெடுக்கென ஜடையைப் பிடித்திழுத்தான்.

"என்னை விடுங்கள்" என்றாள்.

இது ஒன்றும் அவளுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. "என்னைத் தொடுங்கள்? என்று ஒரு பெண் வாய்விட்டுச் சொல்வாள்? வேதனையைப் பொருட்படுத்தாது வெட்கத்தை வெளிப்படுத்தும் அவள் விழிகள் அவளுக்குத் தெம்பையளித்

தன. குனிந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்தி விழிகளுக்குள் பார்வையைப் பாய்ச்சினுன். குளிர்ச்சியாலே மலர்ந்திருந்த குதூகலம் அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. தொட்டிழுத்தான்—கிட்டவந்தாள்—கட்டிப்பிடித்தான்—துவண்டு விழுந்தாள். பிறகு......? எல்லோருக்கும் தெரிந்த நிகழ்ச்சிகளை எடுத்துருவாக்கிவேறு படித்துத் தொலைக்கவேண்டும்?

இது ஒரு காட்சி—அவன் கற்பனையில் நடந்தது.

உங்களுக்கு நேரம், நாழியே கிடையாதா? வீட்டு வேலை பாக்கியிருக்கு விடுங்கள்.''

''நீ இருக்கும்போது நேரமே தெரிவதில்லை கண்ணே?''

''பைத்தியம்பிடிச்சுடப் போது''

''முந்தியே பிடிச்சுட்டுதே. அதனுலேதான்......

''ஐயோ! இப்பபாருங்க, அத்தைகிட்டபோயி இதையெல்லாம் சொல்றே.''

''என்னுன்னு சொல்லுவே?''

''சீ! இந்த ஆம்புள்ளைங்களுக்கே வெட்கம், மானம் ஒன்றும் கிடையாது. நாக்கை பாரு நாக்கை! எது பேசுகிறதில்லைன்னு தெரியறதே இல்லை!''

இது ஒரு காட்சி—அவள் கற்பனையிலே தோன்றியது. இருவரும் நினைத்துப் பார்த்தார்களே தவிர, நேரடி நடவடிக்கைகளில் இறங்கவேயில்லை!

இதற்குள் ஊரே அவர்களுக்கு எதிராகத் திரண்டுவிட்டது. எங்கள் வீடு அவள் வீட்டுக்கு எதிர்வீடுதான். ஒருநாள் நான் அறைக்குள் உட்கார்ந்திருந்தேன். பக்கத்துவீட்டுக் கிழவர் என் தம்பியோடு பேசிக்கொண்டிருந்தார் அது என் காதுகளில் விழுந்தது.

"தம்பி! அந்த எதிர்த்தவீட்டு முண்டை, இருக்கிருளே......?

"என்ன தாத்தா, வயசானவங்க வாயிலே வந்தபடி பேசலாமா?"

"இல்லை தம்பி. அவன் அவகிட்ட கடுதாசி குடுத்தான். என் கண்ணுலே பார்த்தேன்."

"வெளியிலே பறந்து வந்திருக்கும், எடுத்துக் குடுத்திருப்பான்."

"இதெல்லாம் ஒனக்குத் தெரியாது தம்பி. நீ சின்னபுள்ளே. எனக்கு இதிலே எல்லாம் ரொம்பப் பழக்கம். நம்ப தெருவிலே இப்படி நடக்கலாமா?"

தெருப்பற்று அந்தக் கிழவருக்கு அளவுக்கு மீறி ஏற்பட்டு விட்டது. குப்பைத்தொட்டிகளில் குழந்தைகளைக் காண விரும்பினுர்களே தவிர, தொட்டிலில் தவழவேண்டும் அந்தக் குழந்தைகள் என்று நினைக்கவேயில்லை. எல்லோரும் சேர்ந்து அவளுடைய அப்பாவிடம் தூது போனுர்கள். "அநீதி நடக்கிறதே அடக்கவேண்டாமா?" என்று முறையிட்டார்கள். ஆனல் அவள் அலட்சியம் செய்துவிட்டாள்.

ஒருநாள் அவன் வந்தான். கையில் இருந்த கடிதத்தை வீட்டுக்குள் வீசியெறிந்துவிட்டுத் திரும்பும் நேரம். "டேய்" என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். குச்சியை எடுத்துக்கொண்டு ஒரு கிழவன் ஓடோடி வந்தான் ஓங்கியடித்தான் இவனை. இவன் கைகள்மட்டும் பூப்பறிக்கப் போகவில்லை அல்லவா! போட்டான் ஒரு போடு. கிழவன் மண்டை பிளந்தது. "ஐயோ, அப்பா என்று அலறிக்கொண்டே ஓடிவந்த தகப்பன் மேல்விழுந்தாள் இவனுடைய அவள். கூட்டம் கூடிவிட்டது. ஆனல் ஏகாரம்பரநாதர் மட்டும் மூடிய கண்களைத் திறக்கவே இல்லை!

தூக்குமேடை அருகே கருப்புத்துணி போர்த்துக்கொண்டு நிற்கும் அவன்மேல் வைத்த பார்வையைத் திருப்பி அந்த

வீட்டைப் பாருங்கள். ஜன்னலுக்கப்பால் திரை விழுகிறதே ஏன் தெரியுமா? வீட்டிலே இன்பங் காணாதவன் எவனோ அவளைத் தேடிவந்திருக்கிறான். அனாதையான அவள், வாழ்வை நடத்த வழுக்கி விழுந்துவிட்டாள். படிக்காத எந்தப் பெண்ணும் மூல தனம் இல்லாமல் நடத்தமுடியும் தொழில் இது ஒன்றுதானே இன்றைய சமுதாயத்தில்! கதாசிரியர்கள் உரிமைகள் பதிவு செய்யப்பட்டது என்பார்களே அது முன்பு—இப்போது அவள் உரிமைகள் பதிவு செய்யப்படாதவள்!

# ஒரு பிடி அரிசி!

ஒரே ஒரு படி அரிசி போதும். என் பொஞ்சாதி சாகக் கிடக்கிரு, பட்டினிக் கொடுமையாலே. ஒரே ஒரு பிடி அரிசி தாங்கய்யா. ஒங்களுக்கு ரொம்ப புண்ணியமுண்டு.

துண்டு துண்டாக ஒடிந்து விழுந்தன இந்தச் சொற்கள் முனியன் வாயிலிருந்து இல்லை. உள்ளத்திலிருந்து! பந்துமித்திரர்கள். பழக்கப்பட்டவர்கள். பார்த்துப் பேசியவர்கள் ஒருவரைக் கூட விட்டுவிடாமல் வேண்டினுன். குமுறும் உள்ளத்தின் கொதிப்பைச் சூழ்நிலை காரணமாகக் குழைவாக மாற்றிக் கேட்டான் கெஞ்சினுன். மன்ருடினுன்.

"இல்லையே அப்பா! புளியங்கொட்டைக்கு ஆலாப்பறக் குறுங்க. அரிசி கேட்குறியே!

இந்த பதிலைக் கேட்டுக் கேட்டு அலுத்துப் போனது அவன் உள்ளம். உடலை-உள்ளத்தை உயிரை இவனை நம்பி ஒப்படைத்தவன் சாவோடு போராடிக்கொண்டிருந்தாள்- இழுத்துக்கொண்டிருக்கும் உயிரைத் தடுத்து நிறுத்த அல்ல அவன் பல்லைக் காட்டிக் கெஞ்சியது. சாகும்நேரத்திலாவது அவள் நிம்மதியோடு உயிர் விடட்டுமே என்றுதான்!

வீட்டுக்குத் திரும்பினுன் முனியன் வெறுங்கையோடு உள்ளே நுழைந்தான். மூலையில் அந்த உடல் கிடந்தது. உயிர் பிரிந்து வெகு நாழிகையாகிவிட்டது. அழுகையோ அலறலோ அவனிடம் அண்டவில்லை. உள்ளம்மட்டும் அவனிடமிருந்து கழன்று விழுந்து காணுமலே போய்விட்டது.

அந்தக் குடிசைக்குள்ளே குவிந்து கிடந்த காரிருளில் சாவின் சாயல் படிந்திருந்தது. வெறிக்க வெறிக்க அவளுடைய உடலைப் பார்த்தான்; பிணம் அவன் மனதுக்குள்ளே உயிர்பெற்று உலவத் தொடங்கிற்று. அந்த நாட்கள்...! அன்பும் ஆசையுந் தவிர வேறு

எந்த உணர்ச்சிக்கும் இதயத்தில் இடங்கொடுக்காது கடந்து போன அந்த நாட்கள் ...!

சிவந்த ரோஜா...மலர்ந்த மல்லிகை—விரிந்து மணந்தந்த விதவிதமான மலர் வகைகள்...! ஆடும் கிளைகள்—அவற்றிலிருந்து பாடும் கிள்ளைகள்...தவழ்ந்துவரும் தென்றல்—அதிலே மிதந்து வரும் நறுமணம்...

வாழ்க்கை வளமுள்ள சோலையாயிருந்தபோது மகிழ்ச்சி மலர் களாகப் பூத்தது முனியனுக்கு இளமை, எழில் மெருகு தீட்டிற்று. இன்பம், மணமாகி மனதைப் பரவசப்படுத்திற்று.

போகும்போது காளியாத்தா கோவிலே விபூதி எடுத்துப் பூசிக்கிட்டுப்போ மச்சான்—என்று முனியன் மறக்காமலிருக்க நினைவுபடுத்தினாள் மாரி,

திரும்பி வரும்போது ஒனக்குக் குங்குமமும் எடுத்துக்கிட்டு வர்றேன்.' பரிவையும் பரிகாசத்தையுங் கலந்து பதிலாக அளித் தான் முனியன்.

ஜிண்டான் மாத்திரைகளைத் தின்றதைப் போன்ற ஒரு லலித மான உணர்ச்சி இருவருடைய உடலெங்கும் பரவி உள்ளங் களிலும் நிறைந்தது.

அவ்வளவுதானா...?

"அதை மறந்து விடுவேனா? நெருக்கமாக்கட்டுன கதம்ப மாப் பார்த்து ஒரு முழம்..."

இரண்டு ஜோடி விழிகளும் பார்வையை ஒன்றிலிருந்து மற்றொன்றில் பதித்தன. முனியன் நடந்தான் வெளியில்.

நிதானந்தவறாது ஓடும் ஓடைக்கும், நிம்மதி ததும்பும் அவர்கள் வாழ்வுக்கும் வேற்றுமையே இருந்ததில்லை. மாரி முனியனுக்கு மனைவியாகமட்டும் இல்லை? தோழியானாள்—ஞானா சிரியையாக இருந்தாள். வழிகாட்டியாக எதிலும் இருந்து காட் டினாள்.

ஆண்மை நிறைந்த உடல் அன்பும் அனுதாபமுமே உருவான உள்ளம், நெஞ்சை நெகிழவைக்கும் நளினமான நடைநொடி

பாவனைகள்—இவை மூன்றும் ஒரு ஆணிடமிருந்தால் எந்தப் பெண்ணும் அவளுக்கு அடிமையாகி விடுவாள். விதி விலக்கில்லாமல்! கணவன் கடவுள் ஆவான் - மனைவி பக்தையாக இருப்பாள். இடையிலே எந்தப் பூசாரியாவது நுழைந்தால்தான் இன்னலுந் தொல்லையும்!

பூத்துக்குலுங்கிய 'மாரி-முனியன் மலர்த் தோட்டத்திலே' திடீரெனப் புயல் புகுந்து அதைச் சிதைத்து சின்னுபின்னமாக்கி விட்டது...தமிழ் நாட்டில் பருவ மழை தவறிவிட்டது. நீர் நிலைகள் வரண்டன. நிலங்கள் பாளம்பாளமாக வெடித்துப் பாழப்பட்ட சமுதாயத்தின் படப்பிடிப்பு போலத் தோன்றின. மரம்முறிந்து விழும்போது அதைச் சுற்றியுள்ள கொடியும் அலைந்து விடுவதைப் போல வானம் மோசம் செய்ததால் பலர் வாழ்வுநாசமாகி விட்டது.

முனியனின் கட்டான உடல் துரும்பாக இளைத்தது கவலையால். கட்டித் தங்கமாயிருந்த மாரி கறுத்து வதங்கிப்போனுள் வறுமையால். பஞ்சம்—பசி—பாழ்பட்ட வாழ்வு! அலைந்தான்—சுற்றினுன்—ஓரிடம் விடாமல் வேலையைத் தேடித் துளாவினுன். மூட்டை சுமப்பது—கூலிவேலை செய்வது. கல்லுடைப்பது—கிடைத்த காசை வீட்டுக்குக் கொண்டுவருவான். அப்போதெல்லாம் அலுப்பும் களைப்பும் அவனை அண்டத்தான் செய்தன "காட்டில் விறகொடித்தேன்—பழைய கஞ்சியின்றி நெஞ்சொடியக் கல்லை உடைத்தேன். மூட்டை பல சுமந்தேன். முதுகெலும்பு முறியப் பாடுபட்டேன்." வேலைக்காரி சினிமாவிலே கேட்ட அந்தப் பாட்டை, வேதனையைத் தீர்க்கும் மருந்தாக எண்ணி ஆறுதலுக்காக அடிக்கடி முணுமுணுப்பான் முனியன்,

கூலி என்னவோ கிடைக்கத்தான் செய்தது. ஆனுல் அரிசி .........?

"வரி கொடுக்கிறோம். எங்கள் வாழ்வு நாசமாவதைத் தடுக்கவில்லை இந்த சர்க்கார். இறக்குமதி செய்தால் என்ன"

உள்ளத்தின் குமுறல் ஒருநாள் வெடித்தது. அதன் எதிரொலி அமைச்சர்களின் செவிகளிலே விழத்தான் செய்தது. ஆனுல் கிடைத்த பதில்......?

"படியளக்கிறோம்! பாராமுகமாக இருக்கிறது மத்திய சர்க்கார்."

கேட்ட கேள்விக்குப் பதில்—அப்போதைய நிலைமையைச் சமாளிக்க ஒரு சமாதானம். உள்ளக் குமுறலுக்கு ஒருவித சாந்தி! பொறுப்பும் திறமையும் புறமுதுகு காட்டி ஓடின அவர்களிட மிருந்து!

அகில உலகக் கண்ணோட்டத்தில் இருந்தார் முதல் மந்திரி—அரச பரம்பரையின் காவலனாக இருந்தார் உதவி மந்திரி—வரி விதிக்கும் திட்டத்தில் மூழ்கி இருந்தார் நிதிமந்திரி-வருமான உயர்வைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தார் போக்குவரத்து மந்திரி-காலியாகும் ஸ்தானங்களைக் கணக்கெடுப்பதில் கவனஞ் செலுத்தினர் மற்ற உறுப்பினர்கள். இந்த விசித்திரங்களையும் ஒரு லீலா விநோதம், என்று சும்மாயிருந்தார் ஈசன்! மக்களைக் கவனிக்க ஒரு நாதியும் இல்லாமலே போயிற்று!

பிணத்தை எரித்துவிட்டுப் பிழைப்புக்கு வழிதேடினான் முனியன். இலங்கைக்குத் திருட்டுத்தனமாக ஆட்கள் ஓடுகிறார்கள் என்று ஒருநாள் உளவு கிடைத்தது. மாரி விட்டுப்போன தாலியைப் பணமாக்கினான்; கிளம்பினான்.

நிலப்பரப்பில் நிம்மதி நிறைந்த நேரம். பார்வைபாயும் அளவுக்குப் பரந்துகிடந்த நிலப்பரப்பில் ஒருபெரும் போராட்டமும் நடந்துகொண்டிருந்தது. காற்றும் கடல்நீரும் கைகலந்து குஸ்தி போட்டன. குமுறல்-கொந்தளிப்பு-உடலைக் குத்தித் துளைபோடும் வாடைக் காற்று! இருள்கவிந்த வானம், உலகத்துக்கு மூடி போட்டதைப் போலத் தோற்றமளித்தது. நீரைக் கிழித்துக் கொண்டு ஓடிற்று அந்த 'ஸ்டீம்லாஞ்சு'

"அண்ணேன், கொஞ்சம் நெருப்புத்தாயேன்" பக்கத்திலிருந்தவனைக் கேட்டுக்கொண்டே காதில் செருகியிருந்த பீடியை எடுத்தான் முனியன். அது நனைந்து நாசமாகியிருந்தது. அவனால் குளிர்தாங்க முடியவில்லை.

கொஞ்சம் கீழேபோயி உக்காந்தா என்ன? என்று கொஞ்சும் குரலில் கேட்டான்.

"அங்கே போகக்கூடாது; அரிசி இருக்கு."

"அரிசியா......?"

"ஆமாம். அரிசியும் திருட்டுத்தனமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போகுது. அதைச் சாப்பிடுகிற ஒன்னேயும் சேர்த்து அழைச்சுக்கிட்டுப் போருேம்" நகைச்சுவைத் ததும்ப பதில் அளித்தான் அந்த நண்பன்.

ஒரே விஞடி! முனியன் உடலில் துவண்டுகிடந்த அத்தனே நரம்புகளும் துண்டித்து விழுந்தன. "ஒரே ஒரு பிடி *அரிசி*" அவ்லமே உருவான அந்தக் குரல்! பேய்க்காற்ருேடு கலந்து பீத்துப் பிடித்துப்போய் அவனேச் சுற்றிக் குதித்து கும்மாளம் போட்டது. இறந்துபோன அவன் மனேவி எதிரிலிருந்து அவனே அன்போடு அழைத்தாள்.

"அடபாவிகளா! '......' இதைச் சொல்லி முடிக்கக்கூட இல்லே. கடல் நீருக்குள் முனியன் உடல் மூழ்கி மறைந்தது.

"ஐயோ" என்று அவன் நண்பன் அலறிஞன்.

கனல்புரளும் ஏழ்மை யென்றும் பெருங்கடலில் அந்தோ, கதியற்ற குழந்தைகளோர் கோடானுகோடி, மனம்பதைக்கச் சாக்காட்டை மருவுகின்ற நேரம், வந்ததொரு பணம் என்ற கொடி பறக்கும் கப்பல், இனத்தவரின் குழந்தைகளோ 'ஏ' என்று கெஞ்ச ஏறிவந்த சீமான்கள் "சீ" என்று போஞர்."

காற்றும் கடலும் கும்மியடித்து பாடின இப்பாடலே!

புரட்சி கவிஞர் பாடலின் அடிகள்-அவைகளுக்கு எப்படித் தான் தெரிந்திருந்ததோ, தெரியவில்லே!

---

# பக்தி

அடுக்கடுக்காக ஒன்றுக்கொன்று ஆதரவாகப் பின்னிப் பிணைந்திருந்த அந்த மலரின் இதழ்களைப் பார்க்கும்போது என் இதயம் மகிழ்ச்சியால் பொங்கிப் பூரித்தது. உதிக்கும் கதிரவன் ஒளிபட்டதும் அவை அத்தனையுமே விதிவிலக்கில்லாமல் மலர்ந்து சிரிக்கும். வட்டமிடும் வண்டு மலரை முத்தமிடும்போது ஒவ்வொரு இதழும் சிரிக்கும். ஒன்றுபட்டு வாழ்ந்த அந்தக் குடும்பத்தைத் துண்டுபடுத்திய அந்தச் சிறு நிகழ்ச்சி...! எவனே ஒரு வேலையற்ற விவேகமில்லாத வீணன் அந்த மலரைச் செடியி லிருந்து பறித்து அதன் இதழ்களைப் பிய்த்துப் போட்டான். சேர்ந்து வாழ்ந்தபோது அவைகளுக்கு. ஜீவசக்தி ஊட்டிய அதே கதிரவன் ஒளியே அவை சிதறி விழுந்தவுடன் கருக்கித் தீய்த்துவிட்டது. என் மனம் இந்த அலங்கோலத்தைக் கண்டு அழுது கண்ணீர் வடித்தது. ஆனல்...! மலரின் இதழ்களுக்கு நாங்கள் ஒன்றும் உயர்ந்து போகவில்லை என்று மனித இதயங்கள் சொல்லிக் காட்டும்போதுதான் வெட்கத்தாலும் வேதனையாலும் துடிதுடித்துப் போனேன்.

பொன்னம்பலக் கவிராயருக்கும் தங்கப்பனுக்கும் இடையே இருந்த அந்த ஆழமான நட்பு கயிறு கட்டிப் பிணைத்த கதம்ப மாலையாக இல்லை, ஒன்ருேடொன்று உருக்கி வார்த்த உலோகக் கலப்பாக இருந்தது ! அந்தக் கலப்பைக் காய்ச்சித் தனித்தனியே பிரித்த நிகழ்ச்சி மிகவும் சாதாரணமானதுதான். ஒருநாள் பேச்சு வாக்கில் தற்செயலாகக் கவிராயர்.

'திக்கற்றவர்களுக்குத் தெய்வந்தானே துணை'' என்று சொன்னர்.

தங்கப்பன் கொஞ்சம் சு. ம. வாடை படிந்தவன் ! அவனும் விளையாட்டாகவே.

''தெய்வமே திக்கற்றுக் கிடக்கிறதே. அது எங்கே துணை செய்யப் போகிறது ?

என்று சொல்லிவிட்டான். இந்த உரையாடலைவிட அது நிகழ்ந்த நேரந்தான் நெருப்பாக இருந்து அவர்கள் நட்பை பிரித்தது. அந்த ஊர்ப்பரந்தாமன் கோவில் பாழடைந்து கிடந்தது. சட்டபூர்வமான'' சோதாக்களுக்குப் பதிலாகச் கள்ளமார்க்கட் சோதாக்கள் அதைப் பஞ்சமா பாதகங்களுக்கும் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். தங்கப்பனுடைய சொற்கள் இந்தச் சோகச் சித்திரத்தைச் சுட்டிக்காட்டுவது போலக் கவிராயருக்குத் தெரிந்தது. ஆபத்பாந்தவன் அவருடைய இதயத்தின் ஆழத்தில் அவதாரமெடுத்து 'அபயம்' அபயம்' என்று கதறினர். அன்றிலிருந்து தங்கப்பனும் கிழக்கும் மேற்கும் ஆனார்கள். இருவர் உள்ளங்களும் ஈட்டி முனைகளாக உருப்பெற்றன!

“ஏமாளித்தனத்தின் சின்னம்'' என்று பரிதாபப்பட்டான் தங்கப்பன்.

''தடிகொண்டு தாக்கப்பட வேண்டிய படமெடுத்தாடும் நச்சுப்பாம்பு' என்று ஆத்திரப்பட்டார் கவிராயர்.

வேத, சாஸ்திர, புராணங்கள் கவிராயர் கைஆயுதங்களாக ஆயின; விடுதலை—திராவிட நாடு — போர்வாள் — கொஞ்சம் சொந்தப்புத்தி—இவைதாம் தங்கப்பனுக்குக் கிடைத்த ஆயுதங்களும். அஸ்திரங்களும்! ஊர் இரண்டுபட்டது. சொற்போரில் தொடங்கி மற்போரில் வந்து முடிந்தது இந்தப் போராட்டம்! மலர்க்குலம் மனித குலத்தைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தது!

இத்தனைக்குமிடையில் அனாதையாகக் கிடந்த அந்த ரட்சகன்''மீது அந்த ஊரில் புதிதாக நிலம் வாங்கிய செட்டியாருக்கு அக்கரை பிறந்தது வண்டி வண்டியாக வந்திறங்கிய கருங்கல்லும் செங்கல்லும் வானளாவும் மதிலாவும் கோபுரமாகவும் உயர்ந்தன. எவனோ எங்கிருந்தோ வீசியெறிந்த வாழைப்பழத் துண்டு எப்படியோ நம் வாய்க்குள் வந்து விழுந்தால் ஏற்படும் திகைப்பும் மகிழ்ச்சியும் கவிராயர் உள்ளத்தைக் கட்டி அணைத்தன. நினைந்து நினைந்து நெக்குருகினார். மகிழ்ச்சியில் மல்கிய கண்ணீர் கசிந்து கசிந்து தரையில் விழுந்து சாய்ந்தது! பக்தர்களை ரட்சித்துத் துஷ்டர்களைத் துவம்சம் செய்யும் அந்தப் பரந்தாமனே செட்டியார் உருவில் அவதாரம் எடுத்துத் தங்கப்பனை மட்டம் தட்டிவிட்டதாக எண்ணி மகிழ்ந்தார்!

அன்று ஆண்டவன் கோவிலில் உட்பிரகாரத்தைச் சுற்றிப பார்த்து வந்தார் கவிராயர். நிமிர்ந்து நின்ற கோபுரத்தின் நிழலில் நிம்மதியாகப் பள்ளிகொண்டிருந்த பரந்தாமனைப் பார்க்கப்பார்க்க அவருக்குப் பரவசமாக இருந்தது. தங்கக் கவசம் – அதில் பட்டுத் தெறிக்கும் பகலவனின் ஒளிக்கதிர்கள்! நீர்வீழ்ச்சியிலிருந்து தெறித்துவிழும் நீர்திவலைகள் உடல்மேல் படும்போது உண்டாகும் கோமளமான உணர்ச்சி கவிராயர் உள்ளத்தைத் தழுவியது.

அதே நேரத்தில் கோவிலின் வாயிற்படியில் நின்ற தங்கப்பனுடைய பார்வை கல்லை உடைத்து உருவாக்கி அதற்கு உயிர் கொடுக்கும் தொழிலாளர்கள் மேல் பதிந்திருந்தது. காய்ந்து வரண்டு போன அவர்களுடைய உடல்கள்—அவைகளை மேலும் மேலும் காய்ச்சிப் பதப்படுத்தும் கதிரவன் வெம்மை!'' இத்தனை உழைப்பும் எவனோ ஒரு தனி மனிதன் புகழுக்கும் பெருமைக்குந் தானே'' என்பதை நினைத்தபோது அவன் நெஞ்சு பிளந்தது.

அவர்கள் இருவரும் கோவிலிருந்து ஒன்றாகவேதான் திரும்பி வந்தார்கள். இரட்டை மாட்டு வண்டியில் பூட்டப்பட்ட காளைகள் வண்டிக்காரன் சாட்டையால் விரட்டப்பட்டு வெருண்டோடுவது போல வேகம் வேகமாக மௌனமாக ஒருவரொடொருவர் பேசிக் கொள்ளாமல் நடந்து கொண்டிருந்தனர்.

“ஐயா! ஏழை காலணுக் கொடுங்கோ! கடவுள் உங்களைக் காப்பாற்றுவார்!''

தீனமான அந்தக் குரல் இருவரையுமே திரும்பிப் பார்க்கச் செயதது. ஒரு பேசும் எலும்புக் கூடு'' பிணமாகாமல் என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று சொல்லாமற் சொல்லி நின்றது.

“கடவுள் உனக்கு நல்லகதி காட்டுவாரப்பா'' என்று உருக்கமாகச் சொல்லிக்கொண்டே நடந்தார் கவிராயர்.

தங்கப்பன் ஒரு காலணாவை எடுத்து அந்தப் பிச்சைக்காரனிடங் கொடுத்தான், கவிராயரைக் குறும்பாக ஒருமுறை பார்த்தான்.

“நல்ல வேளை! கடவுள் இதற்காவது உபயோகப்படுகிறாரே! அதுவரையில் லாபந்தான்!'' என்று சொல்லிக்கொண்டே நடந்தான்.

இந்தச் சின்னஞ்சிறு நிகழ்ச்சி அன்றிரவு தங்கப்பன் வீட்டெதிரே ஒரு பெருங் கூட்டத்தையே கூட வைத்துவிட்டது.

கவிராயர் பக்தியால் தூண்டப்பட்டு ஆவேசத்தோடு கூச்சலிட்டார் அவர் கட்சி ஆட்கள் வெறிபிடித்துக் கூத்தாடினார்கள். செட்டியார் கொடுத்த காசும் அவர்களோடு சேர்ந்துகொண்டு அட்டகாசம் செய்தது. இவற்றால் ஏற்பட்ட உருவான பலன் தங்கப்பன் உடம்பிலிருந்து ஒரு சில எலும்புகள் ஒடிந்து விழுந்ததுதான்! குற்றுயிரும் குலைஉயிருமாக அவனை ஆக்கிவிட்டு அந்தக் கூட்டம் அங்கிருந்து நகர்ந்தது. இந்த நிகழ்ச்சி செய்தியாகி எல்லாத் தமிழ் ஆங்கிலச் செய்தித் தாள்களிலும், "நாத்தீகம் பேசி நாத்தழும் பேறியவனுக்கு அந்த ஊர் மக்கள் நற்பாடம் கற்பித்தனர். என்ற தலைப்போடு வெளியாய்ப் பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்கா வரைப் பரவியது.

அடுத்த நாள் மாலை கவிராயரைத் தேடிச் செட்டியாரே! வந்துவிட்டார்.

'நம்ம கோவிலுக்கு அதன் மகிமையை விளக்கி நீங்கதான் ஒரு ஸ்தல புராணம் எழுதித் தரணும்' என்ற வேண்டுகோளை வினயமாகத் தெரிவித்தார்.

உடலை விட்டுப் பிரிந்த உயிர் எப்படி அந்தரத்தில் ஊசலாடும் என்பது இதுவரைக்கும் எவருக்குமே தெரியாது. ஆனால் அப்போது கவிராயர் அதை உண்மையாகவே அனுபவித்துக் கொண்டிருந்தார். அன்றிலிருந்து கவிராயர் இரவும் பகலும் அகராதியும் நிகண்டுமாகக் காலங்கழிக்கத் தொடங்கினார்!

ஒவ்வொரு செய்யுளாக இயற்ற இயற்றப் பக்கத்து வீட்டுக் காரர்களை அழைத்து அவ்வப்போதே அரங்கேற்றம் செய்த கவிராயருக்கு அந்தப் புது ஸ்தல புராணம் அச்சாகி வந்ததும் எவ்வளவு இன்பம் ஏற்பட்டிருக்க வேண்டும்? அப்போது தான் ஈன்ற கன்றை ஆசையோடு நாவால் தடவிக் கொடுத்தார். ஒவ்வொரு செய்யுளிலும் கற்கண்டும் கனிச்சாறும் கலந்து ஓடுவதைப் போலத் தோன்றியது: அவற்றை எழுதும்போது அவருக்கே புலப்படாத உட்பொருளும் மெய்ப்பொருளும் அவற்றில்

பொதிந்து கிடப்பதை அப்போதுதான் உணர்ந்தார்! கவனிப்பாரற்றுக் கிடந்த அகராதியும் நிகண்டும் ஒன்றையொன்று கட்டிக்கொண்டு கண்ணீர் வடித்தன!

கவிராயர் தமிழுக்குச் செய்த அரும்பெரும் தொண்டைப் பாராட்டித் தமிழ்நாட்டின் தலைசிறந்த பத்திரிகைகள் எல்லாம் விமரிசனம் செய்தன. அவைகளைப் படித்ததும் தாங்க முடியாத மகிழ்ச்சி அவரைத் தன் நிலையில் இருக்கவொட்டாமல் செய்தது. அத்தனைப் புத்தகங்களையும் அப்படியே எடுத்துப்போய் அந்தக் கருணை வள்ளலின் காலடியில் காணிக்கையாக வைக்க வேண்டும் என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டு வேக வேகமாக ஓடினார். செட்டியார் வீட்டை நோக்கி!

உள்ளே செட்டியார் யாருடனோ பேசிக்கொண்டிருந்ததால் கவிராயர் வெளியில் நிற்க வேண்டி ஏற்பட்டது.

'ஏது, இடிஞ்சுக்கிடந்த கோவிலைப் புதுப்பிச்சிருக்காப்போலே யிருக்கே?'

புதுக்குரல் கவிராயர் உள்ளத்தில் அந்தக் கேள்விக்குப் பதில் உருவானது ''ஏதோ இந்த ஊர்க்காரவுங்களுக்குத்தான் அக்கரையில்லாமே இருக்குது. நாமாவது செய்யலாம் என்றுதான்— அப்படியே அதன் எதிரொலியைச் செட்டியார் வாயிலிருந்து எதிர் பார்த்தார் கவிராயர்.

''இல்லை. புதிசா இந்தக் கிராமத்திலே ஒரு இருநூறுவேலி நிலம் வாங்கினேன். இந்தக் காட்டுப் பய ஊருக்கு வந்து போகப் பயமாயிருந்துச்சு. செலவோடு செலவா இதைக் கட்டித்தொலைச்சுட்டா நாலுபேரு வந்து போக இருப்பாங்க. நமக்கும் பயமில்லாமே இருக்கும் என்றுதான்...''

''டணர்'' என்று தொடங்கித் தொடர்ந்து ஒலித்தன ஆண்டவன் ஆலயத்திலிருந்து மணியொலிகள். கவிராயர் கையிலிருந்த புக்தகங்கள் நழுவிக் கீழே விழுந்தன. திரும்பி வேகமாக நடந்தார்—ஓடினார் — பறந்தார். அடிதாங்காது உயிர்துறந்த தங்கப்பன் பிணத்தை எரிக்கச் சுடுகாட்டுக்கு எடுத்துப்போய்க் கொண்டிருந்தனர். அதன் எதிரில் போய்விழுந்து ''தங்கப்பா'' என்று கதறினார் கவிராயர். அப்பன் ஆலயத்தில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். தங்கம் அவர் தலையில் கிரீடமாக ஒளிவிட்டது. கோவில் மணிகள்மட்டும் நிதானந்தவறுமல் ஒலித்துக் கொண்டிருந்தன!

———

# முடியவில்லை ; தொடராது !

ஒன்று...இரண்டு......மூன்று......நான்கு...ஐந்து......ஆறு... ஏழு!

அடுத்தடுத்துத் தொடர்ச்சியாக ஒலித்த அந்தக் கடிகாரத்தின் மணியொலிகள் ஏழும் அடங்கிப் போயின. ஒளி மங்கி விட்டது. வண்ணச் சித்திரங்கள் பலப்பல படர்ந்து பளிச்சென்றிருந்த வானம் மெருகு குலைந்து காணப்படுகிறது. ஊர்ந்து நகர்ந்து வரும் அந்த வெண்ணிலா......வெள்ளி முலாம் பூசிய வெறும் இரும்புத் தகடு...அதுவும் கொஞ்சம் முலாம் உதிர்ந்து போய்த் தேய்ந்திருக்கிறது! ஓடி ஆடித் திரிந்த உற்சாகம் நிறைந்த உடல்களையும் உள்ளங்களையும் ஏதோ ஒருவித மயக்கம் தழுவித் தலைசாய்க்கச் செய்யும் அந்த நேரம்......சத்தமுஞ் சந்தடியும் அடங்கி வெகு நேரம் ஆகிவிட்டது. ஆடாது அசைவற்றுக் கிடக்கும் உலகம் அருவருப்பு நிறைந்த சவம்போல என்னெதிரே காட்சி அளிக்கிறது!

கம்பிகள் பதித்த இரும்புக் கதவுக்கும் கற்களால் எழுப்பிய சுவர்களுக்கும் இடையே கட்டுப்பட்டிருக்கிறேன் நான். காற்றில் பறந்து கதிரவனைக் கட்டி அணைத்து, ஒளி வீசும் தண்ணிலவின் உதடுகளில் முத்தம் விதைத்து, தனித் தனியே சிதறிக்கிடக்கும் தாரகைகளை ஒன்று திரட்டி ஒளிவிடும் சுடர்மாலையாக்கி மார்பில் அணிந்து மகிழ்ச்சி அடையும் என் எண்ணங்களோடு ஒத்துழைக்க முடியாமல் உடல் சிறைவைக்கப்பட்டிருக்கிறது. சிறை.....! அதற்கும் சர்க்கஸ் கொட்டகைக்கும் உள்ள அந்த மாபெரும் முரண்பாடு!...மிருகங்களை மனிதர்கள் பழக்குகிறார்கள் சர்க்கஸ் கொட்டகையில்—மனிதர்களை மிருகங்கள் பழக்குகின்றன இந்தச் சிறைச்சாலையில்!

என் உடலின் ஒவ்வொரு அங்கமும் காய்ச்சி உருக்கப்படுவதைப் போன்ற உணர்ச்சி என்னை யறியாமலே எனக்கேற்படு

கிறது. ''அகலாத இருள்'' என்ற அருமையான நூலுக்கு அமைந்த அழகான முன்னுரைதான் எனக்கும் உலக வாழ்வுக்கும் இடையே இருக்கும் இறுதித் தொடர்பான இந்த இரவு! நாளை...? எனக் கேற்படப் போகாத அந்த நாள்! சாகப்போகிறேன்......இல்லை...... கொல்லப்போகிறார்கள் என்னை! பிறகு...? கடவுள்......மோட்சம். உரத்து வாய்விட்டுச் சிரிக்க வேண்டும்போல் இருக்கிறது. ஆனால்! சிந்தனை அந்தச் சிரிப்பைத் தடுத்து நிறுத்துகிறது.

மோட்சம்...!...சுயநலமே உருவான பிறவிச் சோம்பேறியின் மூளையில் உதித்த பித்தலாட்டம் நிறைந்த கற்பனை! மது இருக் கும்—மங்கை இருப்பாள்—மனோகரமான வாழ்விருக்கும்—ஆனால் இத்தனைக்கும் உழைக்கவோ, பாடுபடவோ வேண்டியதே இல்லை! குவியல் குவியலாகப் பொன்னும் மணியும் கொட்டப்பட்டிருக்கும் குபேரப் பட்டணத்தில்—விற்பனை வரி விதிக்கும் சர்க்காரோ, வரு மான வரி வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களோ இருக்கமாட்டார் கள்! கருத்தில் பட்டதையெல்லாம் கண் முன்னே கொண்டுவரக் காமதேனுவும், கற்பக விருட்சமும் இருக்கும்—ஆனால் பசி தாகம் பற்று இவை மூன்றும் ஏற்படா! உதவாக்கரைச் சரக்குகளும்—உளுத்துப்போன உலுத்தர்களும்! இதைக் கற்பனை செய்த மனித னுடைய உடலில் ஊறிப்போயிருந்த சுயநலமும் சோம்பேறித்தன மும் பேராசையும்...!

என் இதயத்தை மத்தளமாக்கி யாரோ ஓங்கி ஓங்கித் தட்டு கிறார்கள். உடலில் குறுக்கும் நெடுக்குமாக ஓடும் நரம்புகளை மீட்டும் ஒலி கேட்கிறது. கொதிக்கும் குருதியிலிருந்து ஜலதரங்க ஓசை கிளம்புகிறது. அவலமே உருவான இந்தப் பின்னணி...... அதற்குத் தகுந்தாற்போல் என் இதய அரங்கில் படமெடுத்தாடும் பயம்...ஒருவேளை அதன் சீற்றங்கள் தாம் எனக்கு அடிக்கடி ஏற் படும் பெரு மூச்சுகளாக இருக்குமோ? இல்லை இல்லை, உயிரற்ற ஒரு முழக் கயிறுதான் உயிர்பெற்று என் உள்ளத்தில் கூத்தாடு கிறது. கண்களை மூடினால் அது என் கழுத்துக்கு அருகேயே வந்து வட்டமிட்டு வட்டமிட்டுக் கண்ணாமூச்சி விளையாடுகிறது!

என் இதயம்...! இன்னதென்று எவராலுமே விளக்க முடியாத அதிசயமான அந்தப் பொருள்...! மரணத்தின் நினைவு அதைத்

தொடும்போது......உருகும் மெழுகு...கரையும் உப்பு...காற்றில் கலந்து காணுமலே போகும் பீடியின் புகை...சீச்சீச்சீ...இவையெல்லாம் உதவாக்கரை உவமைகள்......சுருக்கமாகச் சொன்னுல் மரணத்துக்குப் பயந்து சாகிறேன்! ஏன்...? அது எனக்குப் பழக்கமில்லாத நிகழ்ச்சி. செத்துத் தொலேந்தவர்களாவது ஒரு முறை வந்து அதை எனக்கு விளக்கியிருந்தால் இந்தப் பயமே ஏற்படாது. அனுபவித்தறியாத எந்த நிலேயும் நமக்கு அச்சத்தைத்தான் உண்டாக்கும்! வாழ்நாள் முழுதும் ஒத்துத்தான் வாழப்போகிருேம் என்பது தெரிந்தும் ஆணும் பெண்ணும் முதல் தடவை சந்திக்கும்போது எவ்வளவு நாணிக்கோணி வெட்கி வேதனேப்படுகிருர்கள்? அப்படியிருக்க, சாவின் சாயலே படாத என்னேச் சாகச் சொன்னுல்...

இரத்தஞ் செத்துச் சோகையேறி வெளுத்துப்போன நோயாளிகளின் முகத்தை நினேவூட்டும் இந்தப் பரிதாபத்துக்குரிய நிலா ஏன் என்னே இவ்வளவு பரிவாகப் பார்க்கிறது? எங்கோ ஒலித்துச் சிறையின் சுவர்களில் எல்லாம் எதிரொலிக்கும் சாவின் குரல் ஏன் என்னேச் சுற்றி நின்று கட்டாமாலே ஆடுகிறது?

எத்தனேயோ ஜீவராசிகளே அணேத்து ஆறுதல் அளிக்கும் அமைதியும் நிம்மதியும் ஏன் எனக்கு மட்டும் பிணக்காட்டை நினேவுபடுத்துகின்றன? லேசாகத்தானே வீசுகிறது காற்று! அது பட்டவுடன் உரோமங்கள் சிலித்து என் உடல் நடுங்குவானேன்? எங்கெங்கோ நடமாடிக்கொண்டிருக்கும் சிறை வார்டர்களின் காலடி ஓசைகள் கடந்துசெல்லும் காலத்தை அறிவுறுத்தும் கடிகார முட்களின் அசைவொலிகளேப் போல என் காதுகளில் விழுகின்றனவே. அது ஏன்? ஏன்...? ஏன்...? அதுதான் எனக்குத் தெரியவில்லே—விளங்கவில்லே—விளக்க எவரும் இல்லே—விளக்கிலுைம் புரிந்துகொள்ளும் நிலேயில் நானில்லே!

ஐயோ! இதென்ன? நான் அழுதிருக்கிறேன். கதறிக் கண்ணீர் சிந்தியிருக்கிறேன். சீ! கையாலாகாதவர்கள் அல்லவா கண்ணீர் சிந்துவார்கள்! சாகவா அஞ்சுவது? அது சகலருக்கும் ஏற்படும் சகஜமான நிகழ்ச்சிதானே? பூச்சி விழுந்த கதிர்களுக்

கும் உறுதியிழந்த இயந்திரங்களுக்கும வாழ்வளிக்க வழி கண்டு பிடித்துவிட்டோம். தேய்ந்து சத்திழக்கும் சதை எலும்பு நரம்பு இவைகளைப் பாதுகாக்க ஒருவித சாதனமும் கண்டுபிடிக்கவில்லை. அதனால்தான் அவை தெம்பிழந்து விழுந்துவிடுகின்றன. சாறற்ற எந்தச் சக்கைக்கும் இயற்கையாக ஏற்படும் இறுதி முடிவுதானே சாவு! இதற்காகவா அழுவது ?

ஆனால்...! நான் சாவதற்கும் மற்றவர்கள் சாவதற்கும் உள்ள அந்த மாறுபாடு...! கிளையிலேயே வாடி வதங்கிக் காய்ந்து சருகாகிக் கீழே விழும் இலைகள் அவர்கள்—காலண்டரிலிருந்து! கிழித்தெறியப்படும் கடந்துபோன நாளைக் குறிக்கும் தேதித்தாள் நான்!

பொறியில் சிக்கிய எலியிடம் எவரும், ‘‘நாளைக் காலையில் உன்னை ஒரு பூனைக்கு முன்னால் திறந்துவிடப் போகிறோம்’’ என்று சொல்வதில்லை—சொன்னாலும் அது புரிந்துகொள்ளாது! ஆனால் என்னை இங்கே அனுப்பும்போதே நாள் குறித்து நல்ல நாழிகை நிச்சயித்து அதை என்னிடமும் தெரிவித்து அனுப்பிவிட்டார்கள். என்னைப் பூட்டிப் பாதுகாக்கிறார்கள். ஏன்? சாக அடிக்க! இவர்களை எல்லாம் ஏமாற்றி விட்டேன் நான். என்னை நாளைக்குக் காலையில்தானே சாகவேண்டும் என்று கட்டளையிட்டார்கள் ஆனால் இவர்கள் கண்களில் எல்லாம் மண்ணைத் தூவிவிட்டு இத்தனைக் கட்டுக்காவலையும் மீறி இப்போதிருந்தே கொஞ்சம் கொஞ்சமாக அணு அணுவாகச் செத்துக்கொண்டிருக்கிறேனே !

நான் சாவதா ? இல்லை! முடியாது ! என் இதயத்துக்குள்ளே மூடிப் பதுக்கி வைத்திருக்கும் அந்த இன்ப நினைவுகள்...! தூக்கம் வராத சில இரவுகளில் என் உள்ளத்திலிருந்து உதிர்ந்து கொட்டிய அந்த இன்பக் கற்பனைகள்...! சத்தற்ற என் வாழ்வைக் கசக்கிப் பிழிந்து வடித்தெடுத்த அந்தத் திட்டங்கள்...! என்றாவது ஒருநாள் இவை யத்தனையும் ஈடேறும் என்றுதானே ஈவிரக்க மில்லாத சூழ்நிலை என்னைக் கொட்டிக் கடித்து என் இதயத்தைக் குமுற வைத்தபோது பொறுத்துக் கொண்டிருந்தேன். அந்த இன்பம் சொட்டும் நாட்கள் நான் செத்துப் பிணமான பிறகு

வந்தால் அனுபவிக்க நானிருக்க மாட்டேனே! ஐயோ! நான் சாகப் போவதில்லை. வாழத்தான் விரும்புகிறேன். ஆனால் சாகச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறதே இந்தச் சதிகார உலகம்!

வாழ்க்கை! இளமை, வளமை, ஜீவசக்தி, நிறைந்த இன்ப வாழ்க்கை! வாழவேண்டும் என்ற ஆசை, குருதியில் கொட்டிக் கிடக்கும் சிவப்பு அணுக்களோடு சேர்ந்துகொண்டு கூத்தாடு கிறது. இதைத்தான் உலகத்துக்குச் சொன்னேன். அதற்காகத் தான் எனக்குத் தூக்குத்தண்டனை! உழைப்பை எல்லோரும் *பகிர்ந்து கொள்வோம்—உல்லாசத்தை அனைவருக்கும் பகிர்ந்து கொடுப்போம்!* மனித ஜாதியின் நல்வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையான இந்தக் கருத்தை நான் வாய்விட்டுச் சொன்ன போது கைதட்டி வரவேற்ற உலகம் அதைச் செயலில் செய்து காட்ட முனைந்தபோது ''செத்துத் தொலை'' என்று கட்டளையிட் டிருக்கிறது. உலகம்...! மிகவும் உயர்ந்தது! பொன்னைப்போல மின்னும் பித்தளைகள் அதை அவர்கள் இஷ்டத்துக்கு ஆட்டிவைக் கிறார்கள்! மதகுருக்கள், புரோகிதர்கள், பாதிரிகள், மௌல்விகள்-இந்த வேலையற்ற சோம்பேறிக் கூட்டம் நரகத்தைக் கற்பித்து உலகத்தைத் தம் கட்டுக்குள் அடக்கி வைத்திருக்கிறது. கொத்துப் பூக்கள் குரங்கின் கையில் சிக்கியிருக்கின்றன! கன்னி மாடத்தின் காவலர்களாகக் காமுகர்கள் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். சீ! இந்த மந்தையோடு சேர்ந்தா வாழவேண்டும்?

நான் செத்த பிறகு...? அந்தக் காட்சி என் கண்முன்னே வருகிறது. என் பிணத்தைச் சுற்றிக் கூட்டம் கூட்டமாக வட்ட மாக வட்டமிட்டு வலம்வரும் அந்தக் கழுகுகள்? அவைகளுக்குந் எவ்வளவு பசி? அவைகள் என் உடலைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொத்திக் கொத்திச் சதைத் துண்டங்களைத் தின்னும்போது என் உடலில் துளிக்கூட வலி இல்லை—உள்ளந்தான் துடிக்கிறது! சாவு! எவ்வளவு புனிதம் நிறைந்த பொதுநலம்! செத்துப் பிணமான உடல் வறண்ட நிலத்தை வளம் நிறைந்த வயலாக்கும்-பாழடைந்த நிலத்தைப் பழத்தோட்டமாக்கும்! ஒருவேளை தன்னல மற்ற தியாகத்துக்குக் கொடுக்கப்பட்ட பயங்கரம் நிறைந்த பெயர்தான் ''சாவு'' என்றிருக்குமா? வாழ்வு...! கொடுமையும்

கொடூரமும் நிறைந்த கலப்பில்லாத சுயநலம்! பலரைப் பாடுபட வைக்காமல் எவராலுமே வாழமுடியாது. நான் சாகத்தான் போகிறேன். சாவதில் பெருமை அடைகிறேன்!

சிறைக் கதவை யாரோ திறக்கிருர்கள்.

"பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறந்தது; சிறுத்தையே வெளியே வா!" என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏட்டில் எழுதி என் எண்ணத்தில் பதித்த அந்தக் கவிதையின் அடிகள் என் காதுகளில் ஒலிக்கின்றன. இரவே! நீ என்னைவிட்டுப் பிரிந்து விட்டாய்—நான் உன்னைவிட்டுப் பிரியப் போகிறேன். உனக்கு என் இறுதி வணக்கம்' வெளுத்துப்போன வானத்தில் ஒளியிழந்து உருவிழந்து நாதியற்றுக் கிடக்கும் நிலவே, உனக்கு என் அனுதாபங்கள்! மானம்-மரியாதை, சடங்கு·சாஸ்திரம், மதம்—கடவுள் இவைகளைக்கொண்டு ஆடப்பட்ட சூதாட்டத்தில் வெட்டி வீழ்த்தப்பட்டு வீணர்களான மனிதப் புழுக்களே! நீங்கள் இருப்பதைவிட அழிந்து போவதேமேல் என்று வாழ்த்துகிறேன்-மனப்பூர்வமாக!

கழுத்தில் கயிறு மாட்டப்பட்டுவிட்டது. கருப்புத்துணியால் முகத்தை மூடி மறைத்துவிட்டார்கள். கடைசி மணி அடிப்பதற்காகக் காத்திருக்கிருர்கள்.

ஆவி பிரியும் அந்த நேரம்...! வாழ்நாள் எல்லாம் அணைத்து ஆலிங்கனம் செய்து அனுபவித்த மனைவி "எனக்கு என்ன ஆதரவு?" என்று கதறி நிற்பாள். வளர்த்து ஆளாக்கிய தாய், "மகனே, நீ மறுபடியும் வந்து என் வயிற்றில் பிறக்கவா போகிருய்?" என்று மாரடித்துக் கொள்வாள். சுற்றி வளைத்தேறிய கொடிகளான பிள்ளைகள், "அப்பா! இனி எங்களுக்கு ஏது பற்றுக்கோல்?" என்று பதறிக் கண்ணீர் வடிப்பார்கள். இதயத்தின் ஆழத்தில் ஒளித்து வைத்திருந்த பாவங்கள், பழிகள்; கொடுமைகள் எல்லாம் ஒன்று திரண்டு ஓருருவாகி யாரோ கற்பித்துக் கொடுத்த அந்த நரகத்தைக் கவனப்படுத்தும். வெளியே கலங்கித் தவிக்கும் கண்கள்—உள்ளே கருக்கித் தீய்க்கும் கருத்து! வாழ்வின் கடைசிக் "கோரஸ்" பாடப் பாடுவதற்கு முன்னுல் நடக்கும் அந்த இறுதிக் கட்டம்...!

இவற்றிலிருந்து நான் தப்பிவிட்டேன். வேதனைப்படுத்தும் சூழ்நிலை என்னிடமிருந்து வெட்டித் துண்டுபடுத்தப்பட்டுவிட்டது. என்னிடம் எஞ்சியிருந்த ஒரே உடமை நான் எவருக்கும் தெரியாமல் கடைசி வரையில் பதுக்கி வைத்திருந்த பீடிகள்தாம்! அவைகளையும் நேற்றிரவே புகைத்துத் தீர்த்துவிட்டேன்! கயிறு கழுத்தை இறுக்குகிறது. இதயத்துக்கும் மூளைக்கும் இடையே உள்ள அந்த இணைப்பு அறுபடுகிறது. மணியொலிகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து கொண்டே வருகின்றன.

ஒன்று...இரண்டு...மூன்று...நான்கு...ஐந்து...ஆ...

---

# ஆனந்த பைரவி

நிலவொளி... நீரோடை... நிம்மதி நிறைந்த நேரம்! துறவி ஆனந்தனுக்குத் தூக்கம் வரவில்லை.

இரவு, நிலவொளியால் தன்னை 'மேக்கப்' செய்துகொண்டு பட்டப்பகலைப்போல நடித்துக் கொண்டிருந்தது. பளிச்சென்று ஒளிவீசும் உடையணிந்து உலவப் புறப்பட்ட நிலா உடலைச் சரிவர மூடி மறைத்துக்கொள்ளாமல் காணப்பட்டது. அதையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் ஆனந்தன். வெட்கங்கெட்ட அந்த நிலா கொஞ்சங்கூட நாணமடையாமல் நகைமுகங் காட்டியது. 'பச்'சென்று அவன் உள்ளத்தில் துளிர்த்த பருவ உணர்ச்சிகள் வளர்ந்து பொன்னிறம் பெற்றன. யார் யாரோ அவனுக்கே அறிமுகமாகாத பெண்கள் பலர் அவன் இதயத்தை நிலைக் கண்ணாடியாக்கிக் கொண்டனர். பலவித கோணங்களில் இருந்து அதில் பார்த்தனர்—சிரித்தனர்—பரிகாசம் செய்தனர்!

எதிரே சலசலவென்று சதங்கையொலி எழுப்பும் தெள்ளிய நீரோடை கரையில் வளர்ந்திருந்த ஒரு மகிழமரத்தின் வேரைத் தொட்டு முத்தமிட்டுச் சென்றது. கூச்சம் தாங்காது மரத்தின் உடல் சிலிர்த்துத்தான் இருக்கவேண்டும்! 'பொல பொல' என்று மலர்களை உதிர்த்தது அந்த மரம். விழுந்த மலர்களை ஏந்தியிழுத்துக்கொண்டு வேகமாக ஓடிற்று அந்த ஓடை! வேட்கையைத் தூண்டிவிட்டுத் தாபத்தைத் தணிக்காது மறையும் தன்னலம் மிகுந்த சில பெண்களைப் போன்ற அந்த ஓடை...! மாயை ஆனந்தன் மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது!

அங்கிருந்து எழுந்து நேரே தன் குருநாதர் எதிரே வந்து நின்றான்.

"சுவாமி! ஒரு சந்தேகம்?"

"என்னப்பா அது?"

"ஏன் கடவுள் உலகைப் படைத்தார்?"

குருநாதர் அவனைக் குறும்பாகப் பார்த்துச் சிரித்தார். அவருக்குக் கிடைத்த அந்தச் சீடன் அவரை ஆச்சரியத்தால் திகைக்க வைத்தான்.

"கடவுள் உலகத்தைப் படைக்கும்போது நீ அவர் பக்கத்திலிருந்து புத்தி சொல்லாததால்தான்!"

"சந்தேகத்தைச் சஞ்சலமாக்காதீர்கள் சுவாமி! கடவுள் ஏன் உலகைப் படைத்தார்? உலகைப் படைத்தார் ஏன் மனிதர்

களைப் படைத்தார்? மனிதனைப் படைத்தவர் ஏன் அவனைச் சுற்றிப் பாவங்களைப் படையெடுக்க வைத்தார்? எனக்கொன்றும் விளங்கவில்லையே சுவாமி!''

''எவருக்குமே அது விளங்கியதில்லையே, ஆனந்தா! வேத வேதாந்த வித்தகர்கள் எல்லாம் விடைதேடித் தத்தளித்த கேள்வி அல்லவா அது!''

பயிற்சியில்லாத முரட்டு விரல் பட்டுத் துடித்துத் தணிந்த வீணைத் தந்திபோல ஆனந்தனின் உள்ளக் குமுறல்தானே அடங்கிப் போனது.

''ஆனந்தா! உடல் சாந்தியடைந்து உள்ளம் மட்டும் சலனத்திலிருந்தால் சஞ்சலம் ஏற்பட்டுத்தான் தீரும். இன்று திருவிழா. தேவன் ஊர்வலம் வந்துகொண்டிருப்பார். போ. நிம்மதி ஏற்படும்வரை அவரோடு சுற்றிவிட்டு வா. எல்லாம் சரியாய்ப் போய்விடும்.''

''தனியாக உங்களை விட்டுவிட்டா சுவாமி?''

''என்னை எவரும் களவாடிவிட மாட்டார்கள். கலங்காமல் போய்வா.''

ஆனந்தன் அங்கிருந்து அகன்றான்.

சுற்றிலும் வேலியமைத்துக் கொத்தி, நீர்பாய்ச்சி விதைத்துக் காத்து வளர்த்த செடியாக இருந்திருந்தால் ஆனந்தன் செழிப்பாக வளர்ந்திருப்பான். காட்டில் பிறந்து கண்காணிப்புப் போதாமல் வளர்ந்ததால் அவனைச் சுற்றிக் கள்ளி படர்ந்தது—கறையான் புற்றெடுத்தது! வேதனையில் பிறந்து வேதனையிலேயே வளர்ந்த அவனுக்கு வேதனையோடு வாழமட்டும் பிடிக்கவில்லை. கவைக்குதவாத இந்த உலகத்தைக் காறி உமிழ்ந்துவிட்டுப் பேசாமல் துறவியானான்!

உலகைப் படைத்துக் காத்துப் பரிபாலிக்கும் பரமன்—நித்தியன், நிர்மலன், நிரஞ்சனன்—பவனி வந்துகொண்டிருந்தார். விண்ணில் ஒட்டிக்கொண்டிருந்த தாரகைகள் மண்ணில் விழுந்து ஊர்வது போன்ற விளக்கு வரிசைகள். ஒழுங்கோ கட்டுப்பாடோ இல்லாத அந்த ஜனத்திரளில் சத்தமும் சந்தடியும் மொய்த்துக் கொண்டிருந்தன. பளபளப்பான பட்டுப் பட்டாடைகள் அணிந்து பார்வையைப் பற்றியிழுக்கும் பதுமைகளைப் போன்ற பாவைகள்—கூட்டமாகக் கூடிய குருவிக் கூட்டத்தைப்போல ஓயாமல் ஒழியாமல் கூச்சல் போட்டுக்கொண்டே நடந்தனர். ஆண்டவனே

மாயையின் மத்தியில் சிக்கித் தவிப்பதை ஆனந்தன் கண்ட போது......!

பளிச்சென்று அவன் கண்ணெதிரே ஒளிவிட்டது ஒரு கத்திரிக்கோல். ஒரே வெட்டு. அந்தத் தங்கச் சங்கிலியின் இணைப்பு அறுந்தது. பறிகொடுத்த கழுத்துப் பரதவித்தது—ஏந்திப் பிடித்த கை இறுமாப்போடு அங்கிருந்து அகன்றது. கூட்டத்தில் கலந்து கரையப்போன அந்தத் திருடனைத் தொடர்ந் தோடினுன் ஆனந்தன். இவனையும் இவன் கருத்தையும் எப் படியோ கண்டுபிடித்து விட்டான் அவன். பிறகு...? பறந்தோடும் புருவும்—அதைப் பாய்ந்து துரத்தும் ராஜாளியும்! நீதிக்கும் அதன் பிடிப்புக்கு அகப்படாமல் தப்பிப் பதுங்க ஓடும் பாவத்துக்கும் இடையே நெடுநேரம் ஓட்டப்பந்தயம் நடந்தது. நிம்மதி நிறைந்த பல வீதிகளில் விறைக்க விறைக்க ஓடிவரும் குதிரையின் குளம்படி யோசைகள் கிளம்பின. கடைசியில் திறந்திருந்த ஒரு வீட்டுக்குள் ஓடிப் புகுந்தான் அந்தத் திருடன். கதவு தாழிடப் பட்டது. தொடர்ந்தோடி வந்த ஆனந்தன் தேக்கி நிறுத்தப் பட்டான்.

ஆண்டவன் ஊர்வலம் அந்த வீதியைக் கடந்துபோய் அத்தனை நாழிகையான பிறகும் ஏன் அந்த வீட்டுக் கதவு திறந் திருந்தது? ஒருவேளை வெளியே போன யாராவது திறந்து வைத்துவிட்டுப் போயிருந்தால்...! அப்படியானுல் கள்வன் புகுந்த செய்தி தெரியாமல் கவலையற்றுத் தூங்கும் ஆத்மாக்களின் கதி...? ஓங்கிக் கதவைத் தட்டினுன் ஆனந்தன்.

"யார்?"

அந்தக் கேள்விக் குரலைத் தொடர்ந்து கதவு திறந்தது. உள்ளே பாய்ந்த ஆனந்தனுடைய பார்வை எதிரேயிருந்த அந்த உருவத்தை அப்படியே படம் பிடித்தெடுத்து வந்து அவன் இதயத்தில் பதிந்தது. சிந்தித்துச் செதுக்கிய சிலை அவள்—உயிர் பெற்று மெருகேறி ஒளிவிட்டு நின்றுள். ஆவன் கண்ணெதிரே! உறக்கத்தின் சாயலே படாத மலர்விழிகள். ஆடம்பரமற்ற அலங் காரம், தவழும் தென்றலில் மிதந்துவந்த மல்லிகையின் மணம். இமை வில்லில் விழிக்கணையைக் கோர்த்து இவன்மேல் எய்தாள் அவள்!

"உள்ளே வாருங்கள்"

தளிர்விரல் தந்தியில் படும்போது வீணை யெழுப்பும் இன்ப ஒலி......இல்லை இல்லை......ஜோடிப் புருவின் ஜாடைமொழி..... 'தத்தோம்' என ஆண்டவன் எதிரே தாளம்போடும் இரு மத்தளங்

கள் இவன் நேரெதிரே யிருந்து ஒலிப்பதுபோல இவனுக்குத் தெரிந்தது. மயக்கம் இவனைக் கவ்விப் போதையாக உருப்பெற் றது...போதை வெறியாகப் பரிணமிக்கும் நேரம்...தன்னைத்தானே சமாளித்துக்கொண்டான் ஆனந்தன்.

''உள்ளே யாரோ...''

இவன் சொல்லி முடிப்பதற்குள் அதைப் பாதியிலே வெட்டித் துண்டித்துவிட்டுப் பதில் அளித்தாள் பேசிய பழக்கப்பட்ட அந்தக் கூவுங்குயில்!

''எவருமில்லை! கதவு தாழிடப்பட்டுத்தானே இருந்தது.''

கண்ணால் கண்டதும் பொய்—காதால் கேட்டதும் பொய்— தீர விசாரிப்பதே மெய்!

''இல்லை! என் கண்ணாலேயே பார்த்தேனே!''

''இருக்காதே! இத்தனை நேரமும் நான் கதவருகில்தானே காத்திருந்தேன்,''

''யாருக்காக?'';

''எல்லாம் உங்களுக்காகத்தான்/;'

தேனருவி பாலாற்றில் கலந்து அதைக்கொண்டு பாய்ச்சிப் பயிரிட்ட பழக்குலைகளைப்போல் அந்தப் பதில் இனித்தது ஆனந்த னுக்கு. அவன்—ஒரு துறவி! உலகத்தைத் துச்சம் என்று உதறித் தள்ளிவிட்டு வெளியேறியவன். அவனுக்காக அந்த எழில் வல்லி அந்த நள்ளிரவு நேரத்தில்கூடக் காத்துக்கொண்டிருக் கிறாள். அந்த இளவயதில் அவளுக்கிருந்த பக்தியும் பண்பாடும் பக்குவ நிலையும்! மெய்மறந்தான்—உள்ளம் நெக்குவிட்டுருகியது! ஆண்டவன் அருகே நாதஸ்வரக்காரன் 'புன்னாக வராளி' வாசித் துக் கொண்டிருந்தது தெளிவாகக் காதில் விழுந்தது.

''ஏன் தயங்குகிறீர்கள்? உள்ளே வாருங்கள்!''

உள்ளே நுழைந்தான் ஆனந்தன். நீலநிறம் தீட்டப்பட்ட சுவர்கள். அதில் பச்சை ஒளி வீசும் விளக்கு. எதிரேயிருந்த ஒரு பெரிய நிலக்கண்ணாடியில் இவன் உருவமும் தெளிவாகத் தெரிந்தன. அவள்...? ஒரு மலர்ந்த ரோஜா! இவன்...? அதை வட்டமிட்டுச் சுற்றிவரும் வண்டு! சீ! மாயை மறுபடியும் அவன் மனதை...! அந்த மலரைப் பறித்துப் பரமனுக்குப் பூஜை செய்யும் பூஜாரி! முக்திநிலைக்கேற்ற 'மோகனம்' அவன் உள்ளத்தில் மலர்ந்து மணம்விட்டது!

கட்டில்—பட்டுமெத்தை—பால்—பழம்—வெற்றிலைத்தட்டு—புகைந்துகொண்டிருந்த ஊதுவர்த்திகள்—பிறந்த மேனியைத் திறந்து காட்டும் பதினைந்து வயதுப் 'பெண் குழந்தைகள்' ஆனந்தனுக்கு நேரெதிரே 'நீலாம்புரி' பாடக் காத்துக்கொண்டு நின்றனர்!

''ஏன் கலங்குகிறீர்கள்? பயப்படாதீர்கள். போலீசார் பயங்கூட இங்கே கிடையாது!''

தாளம் தவறியதால் ராகம் குலைந்தது. நீலாம்புரிக்குப்பதில் 'முகாரி' எழுந்தது!

''அப்படியானால் நீ...''

அவள் உரத்துச் சிரித்தாள். சிந்திச் சிதறிய அந்தச் சிரிப்பொலிகட்கு மட்டும் உருவம் இருந்திருந்தால் அவ்வகைளைத் திரட்டிச் சேகரித்திருக்கலாம். அந்தப் பெண்ணின் உதடுகள் வழியாக ஓடிவந்த அத்தனையும் வெறும் மண்ணாக இல்லை—பொன்னாக மின்னின!

''இது தெரியாமலா கதவைத் தட்டினீர்கள்? பரவாயில்லை. சுவாமி! குறுகிய என் வாழ்வில் பலர் குறுக்கிட்டிருக்கின்றனர். இளமை இழந்தவர்கள்—வளமை யொழிந்தவர்கள்—வாழ்ந்து கெட்டவர்கள்! அவர்களுக்கெல்லாம் அணைக்கும்போது அமிர்த சஞ்சீவியாக, தழுவும்போது தளிர்க்கொடியாக, வெறி கிளம்பும் நேரத்தில் வெறும் பிணமாகத்தான் கிடந்தேன். எப்போதும் பெண்ணாக இருந்ததே இல்லை! ஊர்ந்து—தவழ்ந்து—ஓடியாடி—தாண்டிக் குதித்து—தளர்ந்து—தடுமாறும் இந்த மனித சமுதாயத்தில் பலரைப் பார்த்திருக்கிறேன். உங்களைப்போன்ற கவர்ச்சி நிறைந்த தோற்றம் என் கண்களுக்குப் புலப்பட்டதேயில்லை. களையொழுகும் உங்கள் முகத்தின் கம்பீரம் என் கன்னிப் பருவ உணர்ச்சிகளை எழுப்பிவிட்டது. உட்காருங்கள்.''

''பாவத்தில் ஊறிப்போன நீ என்னையுமா பாவஞ் செய்யத் தூண்டுகிறாய்?'' ஆனந்தன் குரலில் 'அடாணா'வின் சாயல்தான் இருந்தது!

''நான் மட்டுந்தான் பாவியா? என்னிடம் வந்து போகிறவர்கள்...? அவர்களும் அப்படித்தான் சொல்லுகிறார்கள். உள்ளே புகுந்தவுடன் அவர்கள் ஏதோ புனிதம் நிறைந்தவர்கள் போலவும் நான்தான் பாவம் சூழ்ந்தவள் என்றும் பேசுவார்கள். பிறகு கெட்டுப்போன என்னை மேலும் கெடுத்துவிட்டு நான்தான் அவர்களைக் கெடுத்தேன் என்றும் குற்றஞ்சாட்டுவார்கள். சுவாமி!

உலகத்தில் பாவத்துக்கு இருக்கும் சக்தி பரமனுக்கே கிடையாதே!'' 'அடாணு'வைச் 'சகாணு'வால் சாந்தப்படுத்தினுள் அந்த வேசி!

ஆனந்தனுடைய தொண்டை வரண்டு போன குறிப்பறிந்து கொஞ்சம் பாலே ஊற்றிக் கொடுத்தாள். உலகம் மெல்லச் சுழலத் தொடங்கியது! 'இந்தோளம்' இன்னிசையாகக் கேட்டது எங்கோ இருந்தது!

''உன் பெயர் என்ன?''

''பைரவி''

அவன் அவளைப் பார்த்தான். மூச்சுவிட்டால் ஆடியசையும் பூங்கொடி—அவள் நின்று கொண்டிருந்தாள். தரையில் அல்ல—தகிக்கும் தாபம் நிறைந்த அவன் இதயத்தில்! அவள் மெல்ல அவன் தோளேப் பற்றினுள். பொங்கும் பாலில் அள்ளித் தெளித்த குளிர்நீர் அவளுடைய தளிருடல்! உதடுகளே உதடுகளால் பொத்திப் போதை யேற்றினுள்.

''சுவாமி! கதிரவன்—அவனைச் சுற்றிவரும் பூமி—அதைச் சுற்றிச் சுழலும் சந்திரன்! ஆண்—அவனைத் தழுவும் பெண்—அவனுக்குப் பிறக்கும் குழந்தை! இயற்கையின் அமைப்பே இல்லறத்தைத்தானே கற்பிக்கிறது. அப்படியிருக்க நீர் மட்டும்...''

நள்ளிரவு—இன்பவல்லி—எவருக்கும் தெரியாத இடம்—விஸ்வாமித்திரரே மேனகையிடம் தவறித்தானே போனுர்! தொட்டுப்படர்ந்த பாவம் அவன் மனதைத் துவளச் செய்யும் நேரம். அவன் கண்கள் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டன. அந்தப் படம்! பாவத்தின் சந்நிதானத்தில் பரமன் 'நந்தி'யாக்கப் டிருந்தார்!

''படுக்கையறையில் பூஜைக்கூடமா?''

''பதருதீர்கள் சுவாமி! இங்கே கடவுள், பூஜைக்காக இல்லே. வியாபாரிக்குத் தராசு போல விபசாரிக்குக் கடவுள்! என் கன்னித் தன்மைக்குச் சாட்சி! அவ்வளவுதான்.''

அந்தரத்தில் சுற்றிச் சுழலும் பந்து—அந்தப் பந்தின் சுழற்சி வேகத்தால் கட்டுப்பட்டுக் கரைதாண்டாது குமுறிக் கொந்தளிக்கும் அலேகடல்கள்—கடலின் ஆழத்தை ஈடு செய்யும் அளவுக்கு ஓங்கி உயர்ந்த மலேகள்—கதிரவனுல் காய்ச்சசப்பட்டுக் கருமுகி'லான கடல் நீர் மலேகளால் தடுக்கப்பட்டு மழையாகப் பொழி

யும் விந்தை—மழை நீரால் வளமடையும் வயல்கள்— வயலின் வளத்தை நம்பி வயிறு வளர்க்கும் மனித ஜாதி—கோடானு கோடி மனிதக் கூட்டத்திலே ஒருத்தியான இவள்—அதுவும் ஒரு விபச் சாரி! துரும்பிலும் துரும்பு—துளியிலும் துளி—அணுவிலும் அணு ஆண்டவனைத் துச்சமாகப் பேசிவிட்டாள்!

துள்ளி எழுந்தான் ஆனந்தன் படுக்கையிலிருந்து. ஓங்கி ஒரு அறை! அவளுடைய கன்னம் கன்றிச் சிவந்தது.

"பாதகி! கடவுளையா கயமைக்குத் துணைபுரிய வைக்கிறாய்?'

அவள் அலறவில்லை. துடிக்கவில்லை. ஒரு கேலிச் சிரிப்பு சிரித்தாள்.

"பரவாயில்லை சுவாமி. இது ஒன்றும் எனக்குப் புது நிகழ்ச்சி யல்ல! பலரிடம் பட்டுப் பழகியிருக்கிறேன். நானே கேட்கிறேன் உம்மை. நானாவது என் வயிற்றுப் பிழைப்புக்காகக் கடவுளைச் சாட்சிக்கூண்டில் ஏற்றி வைத்திருக்கிறேன். ஆனால் நீர் கடவுளைக் கைதிக் கூண்டிலேயே நிறுத்தியிருக்கிறீரே! உழைக் காமல் பாடுபடாமல் வாழ நீர் பயன்படுத்தும் கருவியே கடவுள் தானே!"

வெங்கலத்தில் கூழாங்கற்களை வீசியெறிவது போல ஒரு முறை சிரித்தான் ஆனந்தன்.

"சேறு, சந்தனத்தை வாதத்துக்கு அழைக்கிறது! போடி! பிழைப்பற்றவளே! பாவத்தினால் பிழைக்கும் நீயா பரமன் அடியார் களுக்கு அறைகூவல் விடுக்கிறாய்?"

"கற்றுத் தேர்ந்தவரே! உம்மையே கேட்கிறேன். நான் பிறக்கும்போது கள்ளங் கபடமற்றவளாகத்தானே பிறந்தேன். 'குழந்தை உள்ளம்' என்று உவமையாகக் கூறியிருப்பீரே உபதேசத்தின்போது! என்னோடு கூடப் பிறக்காத பாவங்கள் நான் வளரும்போது என்னை வந்து பற்றினால் அதற்கு நான் பொறுப்பாளியா? அல்லது என்னைப் பாவியாக்கிய இந்த உலகம் பொறுப்பாளியா?"

"ஏன் நீ திருந்தி நல்ல வாழ்க்கை வாழக்கூடாது?"

"சேறு சகதியும் நிறைந்த இந்தச் சமுதாயத்தில் குப்பையுங் கூளமுந்தான் அதிகமே தவிரக் குன்றிமணிகள் குறைவுதான் சுவாமி சேற்றைச் செம்மைப்படுத்த உழைக்க வேண்டிய

உம்மைப் போன்றவர்கள் ஆண்டவனைத் தேடித் திரிந்தால் நான் எப்படி நல்வாழ்க்கை நடத்த முடியும்?''

துரும்பென்று அவன் எண்ணிய அந்தப் பொருள் இரும்பாக அவன் எதிரே நின்றது! தோல்வி! இனி அவனுக்கு அங்கே வேலையே கிடையாது. பேசாமல் அங்கிருந்து நகன்றான்.

வெளியே அந்தத் திருடன் நின்றுகொண்டிருந்தான்.

''அகப்பட்டாயா? வா! போலீஸ் ஸ்டேஷனுக்கு'' என்று அவன் கையைப் பற்றினான் ஆனந்தன்.

''என்னய்யா? நீ தேவடியா வீட்டுக்கு வந்துட்டுப் போனதை நான் பார்த்ததுக்கா என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்புடுறே?'' என்று அந்தக் கையை உதறிவிட்டுப் பதிலளித்தான் திருடன்.

பூபாளம் ஒலிக்கும் நேரம். கதிரவன் அப்போதுதான் பழுத்துக்கொண்டிருந்தான். ஆசிரமத்தை அடைந்தான் ஆனந்தன். குருநாதர் தூங்கி விழித்தெழுந்தார்.

''வெற்றி பெற்றுவிட்டேன், சுவாமி! மாயை மண்ணானது'' என்று உற்சாகந் தாங்க முடியாமல் உரத்துக் கூவியேவிட்டான்.

''இல்லையப்பா! அது இன்னும் பொன்னாகத்தான் ஒளி விடுகிறது.'' என்று நிதானமாகப் பதிலளித்தார் குருநாதர்.

குருவின் படுக்கையில் வாடி வதங்கிய மல்லிகைச் சரம் ஒன்று கிடந்தது. கசங்கிக் கிடந்த தலையணையில் எண்ணெய்க் கறை படிந்திருந்தது. எப்போதும் வரண்டிருக்கும் குருநாதரின் மொட்டைத் தலை வழக்கம் போலத்தான் காணப்பட்டது!

அன்று முழுவதும் 'சிந்து பைரவி' ஆனந்தன் சிந்தையைக் கலக்கியது. இரவு வந்ததும் அவன் அந்த வேசியைத் தேடிப் போனபோது பாவங் குறுக்கிடவில்லை! பரமன் தடுக்கவில்லை! ஒன்றுபட்டு வாழத் தொடங்கிய அந்தத் துறவிக்கும் வேசிக்கும் எப்போதும் 'ராக மாலிகை' கேட்கவேயில்லை. துவளாத, துண்டிக்கப்படாத 'ஆனந்த பைரவி' தான் அசைந்து வளைந்து தவழ்ந்துகொண்டிருந்தது!

———

# துன்பக் கதை

எதிர்வீட்டிலிருந்து காற்றில் மிதந்துவந்த நாதசுவர இசை என் காதுகளைத் தாக்கியது. ஜன்னல் வழியாக வெளியே பந்தலைப் பார்த்தேன். யாரோ பெரிய மனிதர்கள்—தம்பதிகளை வாழ்த்தியருள அழைப்புக் கொடுத்து வரவேற்கப்பட்டவர்கள்—தங்கள் சொந்தக் கதைகளைப் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

"அறுபது வயதுக் கிழவனுக்கும் இருபது வயதுக் குமரிக்கும் திருமணமாமே"—ஊர் முழுவதும் பேசிக் கொண்ட இந்தக் கேலிப்பேச்சு என் காதுகளுக்குள்ளேயே தங்கித் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தது.

"கற்சிலையைச் சுற்றிக் கவர்ச்சிகரமான சேலையைக் கட்டி வைத்தால் அதைப் பார்க்கும் எந்தப் பெண்ணுக்காவது மன மயக்கம் உண்டாகிவிடுமே." என்ற சந்தேகம் என்னை அறியாமலே எழுந்தது.

"பக்தி மனப்பான்மை இருக்கும் வரையில் எந்தவிதமான பாதகமும் நேர்ந்து விடாது." என்று என் மனதில் எங்கோ மறைந்திருந்த சமுதாய அமைப்பு சமாதானம் கூறியது.

"அப்போதுதான் பூத்த புதுமலரை அர்ச்சனைக்கென்று பிய்த்துச் சின்னுபின்னப் படுத்துவதுதான் பக்தியா?" என்று அறிவு எதிர்த்துக் கேட்டது!

திருமணக் கோலத்தில் இருக்கும் என் சக்குவின் உருவம் மன அரங்கில் தோன்றியது. செவ்விதழ்களும் சிரித்த முகமும்! பட்டுப்போன்ற கன்னங்களும் பட்டால் விடாது பற்றிக்கொள்ளும் பார்வையும்! என்னென்னவோ கற்பனைகள் என் சிந்தனையிலிருந்து தெறித்துச் சிதறின. அவள் ஒரு சிலையாகவோ சித்திரமாகவோ இருந்திருந்தால் உலகம் அந்த அழகைப் பார்த்து ரசித்துக்கொண்டாவது இருந்திருக்கும். உயிரும் உணர்ச்சியுங்கொண்ட பெண்ணுயிருப்பதால்தான் அவள் வாழ்வை இன்று உருக்குலைக்கிறது.

கடுங் கோடையும் குளிருமே நிறைந்த என் வாழ்க்கைப் பாலைவனத்தில் என்னைத் தன்னந் தனியே தவிக்கவிட்டுச் செல்லுகிருள் அவள் என்பதை நினைத்தபோது உலகம் தலைகீழாகச் சுழலத் தொடங்கியது எனக்கு. நான் விட்டுப் பிரிந்த இறந்த காலம் என் மனதைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டது. தென்றலாகத்

தொடங்கிய சிந்தனை மெல்ல மெல்ல வளர்ந்து புயலாக வீசத் தொடங்கிற்று. என் இதயக் கடல் குமுறிக் கொந்தளித்தது!

## 2

நான் என்று தொடங்கி எழுதப்படும் பெரும்பாலான கதைகளில் எப்படியோ சோகத்தின் சாயல் படிந்துவிடுகிறது. துர்ப்பாக்கியம் மிகுந்த என் வாழ்வு மட்டும் அந்த விதிக்கு விலக்காக இருக்குமா? வாழ்க்கையை வசந்தமாகவே விரும்பி வரவேற்றேன். ஆனால் கடுங் கோடையே என்னைச் சுற்றிக் கவிந்து கொண்டு வாட்டி வதைத்தது. அந்தக் கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளச் குளிர்தருவோ, தருநிழலோ, நிழல் கனிந்த கனியோ என் நினைவுக்கெட்டிய தூரம்வரை தட்டுப்படவே இல்லை!

சிறுவயதில் ஏதாவது ஒரு காரணத்துக்காக நான் தவருமல் என் அப்பாவிடம் அடிவாங்கிக்கொண்டே யிருப்பேன். அப்போதெல்லாம் என் தாய் நான் அடிபடுவதைத் தடுக்காவிட்டாலும் "ஐயோ பாவம்" என்று அனுதாபங் காட்டக்கூட மாட்டாள் "இத்தனை அடி வாங்கியும் இன்னும் சொரணை வரவில்லையே" என்று ஏசித்தான் காட்டுவாள்.

அன்று வலியின் வேதனை தாங்கமாட்டாமல் திண்ணையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தேன். "எங்கேயாவது ஓடிப் போய் விடலாமா?" என்ற எண்ணம் என்னைத் தன்பால் திருப்பிக் கொண்டிருந்தது. ஆனால் அழுகை மட்டும் ஓயவில்லை. "வலிச்சுதா?" என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். எதிர்வீட்டுச் சக்கு என்னெதிரே நின்றுகொண்டிருந்தாள். அவள் பார்வையில் நிறைந்திருந்த கனிவு, குரலில் கலந்திருந்த குழைவு இரண்டுஞ் சேர்ந்து என் அழுகையை மேலும் அதிகமாக ஆக்கின.

"சக்கு" என்றேன்.

"ஏன்" என்று கேட்டுக்கொண்டே என்னருகில் வந்து உட்கார்ந்தாள்.

"ஒருவேளை நான் பேய்க்கும் பிடாரிக்கும் பிள்ளையாகப் பிறந்திருப்பேனே?" என்று வெகு நாட்களாக எனக்கிருந்த சந்தேகத்தைக் கேள்வி உருவில் வெளியிட்டேன்.

உடனே வாய்விட்டு உரத்துச் சிரித்தாள் அவள். எனக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. ஓங்கி விட்டேன் ஒரு அறை அவள் கன்னத்தில். "ஐயோ" என்றலறிவிட்டாள் சக்கு. "டேய்"

என்ற என் அப்பாவின் அழைப்பு உள்ளேயிருந்து கேட்டது. எங்கே யாவது ஓடித் தப்பித்துக் கொள்ளலாமா என்று எண்ணம் ஏற்பட்டது எனக்கு. 'அப்படித்தான் ஓடினாலும் திரும்பி வந்து தானே ஆகவேண்டும். அப்போது..........!' நடுங்கிக்கொண்டே உள்ளே நுழைந்தேன். பிறகு......?

வழக்கமாகக் கிடைக்கும் அதே தண்டனைதான்!

இந்தத் தடவை நான் திண்ணையில் வந்து உட்கார்ந்தபோது சக்குவின்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'அவள்மட்டும் அழுதிருக்காவிட்டால்.........!' அவளோடு பேசுவதே இல்லை என்று உறுதி செய்துகொண்டேன்.

''இப்படியாகும்னு தெரிஞ்சிருந்தா நான் அழுதே இருக்க மாட்டேன்.''

நிமிர்ந்து பார்த்தேன். சக்குவின் கண்கள் அன்பும் அனுதாப மும் நிறைந்து காட்சி யளித்தன. அவள் கன்னம் இன்னும் சிவந்து தான் இருந்தது. பட்டுப்போயிருந்த என் உள்ளத்தில் கூடச் சிறிது கலக்கந் தோன்றியது. ''வலிச்சுதா?'' என்று கேட்டேன். பேசாமல் தலையைக் கவிழ்த்துக்கொண்டாள் அவள். குனிந்து அவள் முகத்தைப் பார்த்தேன். குறும்பும் கேலியும் அதிலிருந்து கூத்தாடின!

உதிர்ந்துபோகும் தாரகையைப்பற்றி இழுத்துக்கொண்டிருக் கும் வானத்தைப் போலத் தீய்ந்து கருகிக்கொண்டிருக்கும் என் வாழ்வு பாழாகாமல் காத்துவந்தாள் சக்கு. உலகிலேயே எனக் காகக் கண்ணீர்விட்ட ஒரே ஜீவன் அவள். அவள் உருவை என் உள்ளம் விரும்பி வரவேற்காத நாளே கிடையாது.

''சக்கு, என்னையே கல்யாணம் பண்ணிக்கிறியா?'' என்று பல தடவைகளில் அவளைக் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் அவள் வாய்திறந்து எந்தவித பதிலும் சொல்வதில்லை. அன்பும் ஆசையும் நிறைந்த பார்வையால் என் முகத்தைப் பார்ப்பாள். பின்பு தலையைக் கவிழ்த்துக் கொள்ளுவாள். அவ்வளவுதான்!

திரையில் ஓடிக்கொண்டேயிருந்த படத்தை 'இடைவேளை' என்ற அறிவிப்போடு திடீரென நிறுத்தியதைப் போலக் கட்டுக் காவல் இல்லாது திரிந்த சக்குவுக்கு எதிர்பாராமல் சிறைவாசம் கிடைத்தது. நான் தனியாள் ஆனேன். சூழ்நிலை வேறு என்னைச்

சுற்றிநின்று வேட்டையாடத் தொடங்கியது. எட்டுந்தூரத்தில்தான் இருந்தாள் என் சக்கு. ஆனால் எட்டாப் பொருளாக எனக்காகி விட்டாள். அவளுக்கு மட்டும் என் நிலை தெரிய நேர்ந்தால்...!

## 3

திருமணமாகிச் சக்கு தன் கணவன் ஊருக்குப் போய் விட்டாள். என் வாழ்க்கைப் புத்தகத்தின் ஏடுகளை நான் புரட்டாமல் அவைகள் தாமாகவே புரண்டுகொண்டே சென்றன. காலப்போக்கில் ஏதோ ஒரு மாறுதல் என் உடலிலும் உள்ளத்திலும் தோன்றத் தொடங்கியது. பாரதியார் பாடல்களில் 'கண்ணன் பாட்டு'க்களை விடக் 'கண்ணம்மா பாட்டு'க்கள் தாம் என் கருத்தை அதிகமாகக் கவர்ந்தன. இதுவரையில் சுற்றி நின்று நிழல் தரும் சோலைதான் பெண் என்று நினைத்திருந்தேன். இப்போதுதான் நான் அந்தச் சோலையில் கீதம் பாடித் தேன் குடிக்கும் வண்டு என்ற உண்மை எனக்குத் தெரியவந்தது. அழகும் அலங்காரமும் நிறைந்த அந்தப்புரங்கள், கட்டிலறைகள், கண்ணாடிக்கு முன் நின்று உடைமாற்றுங் கட்டங்கள் இவைகளாகவே நிறைந்திருக்கும் கதைகளையும் நாவல்களையும் தேடிப் பிடித்துப் படிக்கத் தொடங்கினேன்.

பூப்போலப் பாதுகாத்திருக்க வேண்டிய என் மென்மையான உள்ளத்தைச் சிறுவயதிலேயே கசக்கிக் கசக்கித் தீய்த்துவிட்டதால் என் மனதில் இருந்த உயர்ந்த பண்புகள் எல்லாம் வற்றி வறண்டே போய்விட்டன. தெளிந்த நீரோடையில் எதிர்நீச்சுப் போடும் மீன் குஞ்சுகளைப்போல என் உள்ளத்தில் உடல் வேட்கையால் தோன்றும் உணர்ச்சிகள் துள்ளிவிளையாடத் தொடங்கின ! என்னைவிட ஏழெட்டு வயது மூத்த பெண்கள்மேல் கூடக் 'காதல்' கொண்டிருக்கிறேன். ஆனால், அவர்கள் மட்டும் 'நானேக்குங்கால் நிலத்தையும் நோக்காக்கால் என்னையும்' பார்ப்பதேயில்லை!

பெண்கள் அழுதால் உலகமே ஓடிவந்து அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறது. ஆனால் ஆண்கள் அழுதால் கையாலாகாதவன் என்று ஏசித்தான் காட்டுகிறார்கள். கெட்டு நாசமாகப் போன நான் என்னைத் தொல்லைப்படுத்திய சூழ்நிலையை விட்டு ஓடினேன். எங்கெங்கோ திரிந்தேன். எங்கேயும் என் நிலைதான் இருந்தது. எல்லோரும் 'நானு'கவே தெரிந்தார்கள்.

கடைசியில் எப்படியோ சக்கு இருந்த ஊருக்கே வந்து சேர்ந்தேன். என்னைச் சக்கு வரவேற்றபோது அவள் உருவம்

எனக்குக் கலக்கத்தை உண்டாக்கி விட்டது. மெருகு கலைந்திருந்த அவள் தோற்றம் என்னைத் துடிக்கச் செய்தது. அங்கே நான் தங்கியிருந்த அன்று முழுவதும் சேறும் சகதியுமாகவே என் மனதில் குழம்பிக் கொண்டிருந்தன.

''சீ! அவளையா அப்படி நினைப்பது?'' என்று என் மனதில் எழுந்தது ஒரு எண்ணம்.

''அவள் என்ன ? அவளும் ஒரு பெண்தானே!'' என்ற சமாதானமும் கூடவே தோன்றியது.

''உனக்கு அவள் செய்த உதவிக்கு நீ செய்யும் கைம்மாறு இதுதானா?'' என்று என்னிடம் கொஞ்சநஞ்சம் எஞ்சியிருந்த நல்ல பண்புகள் என்னைப் பார்த்துக் கேட்டன.

''பழுத்த பழத்தைச் சுற்றி வேலியமைத்துக்கொண்டு அதைப் பறிக்காமல் அழுகவிடுவதை விட...'' என்னையே தேற்றிக்கொண்டேன்.

இரவு படுக்கப் போவதற்குமுன் பால் கொண்டுவந்து கொடுத்தாள் சக்கு,

''சக்கு'' என்றேன்.

மௌனமாக என் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

''வாழ்வில் இருள்படிய விட்டுக்கொண்டே இருப்பது அறியாமையல்லவா?'' என்று கேட்டேன்.

பெருமூச்சும் சிரிப்புமாக என்னைப்பார்த்தாள். அவள் முகத்தில் வெட்கமோ வேதனையோ இல்லை. அலட்சியமும் வெறுப்பும் நிமிர்ந்த ஒரு தோற்றம்!

''இருள் என்பது என்ன ? உலகத்தின் நிழல்தானே ! உலகம் என்ன அவ்வளவு கொடுமையானதா, அதன் நிழல்கூட வேதனை தரும் அளவுக்கு ?'' என்று பதிலளித்தாள் அவள்.

காய்ந்து சருகாகிக்கொண்டிருந்த மலரான அவளைப் பார்க்க என்னால் சகிக்கவில்லை. அந்த மலர்ச்செடிக்கு மட்டும் நீர் வார்த்துக் காப்பாற்றினால்...! சிவந்த, மணம் நிறைந்த இதழ்களும் ஜீவ சக்தியும் நிறைந்துவிடுமே! மெல்ல அவள் கையைப் பற்றினேன். என் கைகள் நடுங்கிக்கொண்டேதான் இருந்தன. என்னையே

கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள் அவள். அந்தக் கைகளைப் பிடித்திழுத்தேன். ஓங்கி ஒரு அறை என் கன்னத்தில்! வேகமாகத் திரும்பி வெளியே நடந்துபோனாள் சக்கு! வலியேதும் தோன்றவில்லை எனக்கு. ஆனால் அவளைப் பின்தொடரும் நெஞ்சுரம் மட்டும் உண்டாகவில்லை. எங்கோ என் மனதின் ஒரு மூலையில் சக்கு மறுபடியும் வந்து "வலிச்சுதா?" என்று கேட்கமாட்டாளா என்ற ஆசை மட்டும் தோன்றியது!

அமைதி நிறைந்த அந்த இரவில் என் மன நிம்மதியைக் கெடுத்துக்கொண்டிருந்தன அந்தப் பாழும் கனவுகள், வெகு நேரம் என்னால் அயர்ந்துறங்கவே முடியவில்லை. எப்போது அயர்ந்தேன் என்பது தெரியவில்லை. நான் எழுந்தபோது விடிந்து வெகுநேரமாகி யிருந்தது. வேலைக்காரி நானிருந்த அறையைக் கூட்டிக்கொண்டிருந்தாள்.

"மணி என்ன இருக்கும்?" என்று அவளை நான் கேட்டபோது உண்மையிலேயே இரவில் நடந்த அந்த விஷயம் வெளியில் தெரிந்துவிட்டதா என்று அறியவேண்டும் என்ற ஆவல்தான் எனக்கிருந்தது.

"ஏன் ஐயா! ராத்திரிப் பாலைக் குடிக்காதே அப்படியே வச்சிட்டிங்களே. கெட்டுப் போயிருக்கே இப்போ" என்று சொல்லிவிட்டுப் ப்ால் பாத்திரத்தை எனக்குக் காட்டினாள் அவள்.

மேஜையருகே சென்ற எனக்கு அதிலிருந்த கடிதந்தான் கண்களில் பட்டது. எடுத்துப் படித்தேன்.

"அன்புள்ள......

ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு இவற்றின் எல்லையை விட்டுக் கவனித்தால் கூட உன் செயல் நல்லதல்ல. எத்தனையோ முறைகள் உனக்கு ஆறுதல் அளித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நான் குளிர்ச்சி நிறைந்த அருவியாக இருந்தேன். ஏக்கம் நிறைந்த இதயமும் தூக்கம் வராத இரவுகளும் என்னை இப்போது ஒரு எரிமலையாக ஆக்கிவிட்டன. க்ஷயரோகத்தால் தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக்கொண்டே யிருக்கிறேன், நான் கெட்டாலும் பரவாயில்லை, உன்னைக் கெடுப்பது மட்டும்...

நீ இங்கிருந்தால் ஒருவேளை எனக்கும் அந்த மயக்கம் ஏற்படலாம். ஆகையால் விடிந்ததும் என் பார்வையில் படாமலே போய்விடு.

அன்புள்ள

சக்கு"

செம்பில் இருந்த பாலை எடுத்து வெளியே கொட்டினேன் பேசாமல் பையை எடுத்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றேன். நிராசையால் சாம்பலான என் உணர்ச்சிகள் என்னைத் தள்ளிக்கொண்டே சென்றன.

"அப்பவே குடிச்சிருந்தா அந்தப் பால் கெட்டுப்போயிருக்காதுல்ல" என்று வேலைக்காரி சொல்லிக்கொண்டிருந்தது என் காதுகளில் விழுந்தது!

3/
2.32